
கானகத்தின்
கானம்
செம்பியன் செல்வன்

# கானகத்தின் கானம்

செம்பியன் செல்வன்



மீரா வெளியீடு

யாழ்ப்பாணம் :: இலங்கை.

| | | |
|---|---|---|
| Title | ⊖ | Ka¯nakaththin Ga¯nam |
| Subject | ⊖ | A Contemporary Novel |
| Author | ⊖ | 'Chempian Selvan' |
| Language | ⊖ | Thamizh |
| Publication | ⊖ | 1989-08-26/(07) |
| Edition | ⊖ | First |
| Price | ⊖ | Rs. 27/- |
| Copyright | ⊖ | (C) Mr. A. Rajagopal, 10, New Rd, Athiady, Jaffna. |
| Paper Used | ⊖ | News Print - Sri Lanka |
| Size | ⊖ | 17.5 c.m × 12.5 c.m Crown |
| Type Points | ⊖ | 10 Pt |
| Page | ⊖ | 124 + 04 |
| Cover | ⊖ | Ramani, Thavam, Catholic Press |
| Publisher | ⊖ | David Ligory, Meera veliyeedu 38, Vembady Rd, Jaffna |
| Printer | ⊖ | Puthiya Chitra Pathippakam |


## செம்பியன் செல்வனின் பிற நூல்கள்

அமைதியின் இறகுகள் (சிறுகதைகள்)

மூன்று முழுநிலவுகள் (நாடகம்)

ஈழத்து சிறுகதை மணிகள் (விமரிசனம்)

நெருப்பு மல்லிகை (வீரகேசரி அதிசிறந்த பரிசு நாவல்)

நாணலின் கீதை (உள்ளொளி உணர்வூற்று உருவகம்)

குறுங்கதை: நூறு

விடியலைத்தேடும் வெண்புரு (நாவல்)

# முன்னுரை

நாவல்கள், குறுநாவல் வடிவை அடைகின்றனவா அன்றிச் சிறுகதைகள் குறுநாவல் வடிவைப்பெற்று நாவலிலக்கிய மரபை வளர்க்கின்றனவா என்ற மயக்கம், இன்று தமிழில் வெளிவரும் நாவல்களைப் படிப்பதால் ஏற்படுவதும் நம்மால் தவிர்க்கமுடியாதொன்றாகி விடுகிறது.

இந்நிலைகூட சமூக அசைவுகளின் ஒரு கருத்தார்ந்த வெளிப்பாடேயாகும். இச்சமூக அசைவுகளின் அச்சுப்பொறியான எழுத்தாளர்களின் பார்வையும், வெளியேற்றமும் இத்தகைய கலை முயற்சிகளாகப் பரிணமிக்கின்றன. நாவலின் முக்கியத்துவம் சிறுகதைகளை மீறியமைக்கும், யந்திர உலகின் உணர்வுகளைத் திசை திருப்பியதற்கும் இவ் அசைவு நிலைகளே காரணங்களாயின.

தமிழீழ இலக்கியத்தின் இன்றைய செல்நெறியில் ஆற்றாமையும், இயலாமையும் நிறைய இருப்பதற்கு படைப்பாளியை மட்டும் சுட்டி விட முடியாது.

வார்த்தைகளை நினைத்து, நிதானித்துக் கோத்து கருத்துக்களை வெளியிட்டாலும், சமகால இலக்கியம் என்னும் போது கருத்துக்கள் யாரையோ எவரையோ அன்றி எதுவையோ எந்த இடபேதமற்ற தானத்தைத் தாக்கி சிறு ஊனத்தையோ, வலியையோ, ஏற்படுத்தி விட்டால் என்னாகுமோ என்றெழும் ஐயம் கலந்த பயம் எழுத்தாளனின் முதுகில் ஊறலெடுத்து நிரந்தரம் கொள்ள—

அவன் ஆத்மா அதல பாதாளத்தை நோக்கி வீழ்ச்சி அடைகிறது. அது அவன் படைப்புகளையும் பாதித்து வீழ்ச்சியடையச் செய்கிறது. எனவே, படைப்புலகமும் அதன் இலக்கியச் செழுமையும் வெண் குருதி உடம்பெனத்தான் மாற்றம் கொள்ள, எழுத்து அச்சு — பிரசுரம் எல்லாமே கத்திமுனைக் கழைக் கூத்தாடியின் லாவகத்தைத்தானே கொள்ளும் இந் நிலையில் —

நாவலென கானகத்தின் கானம் உங்கள் ஆதரவைக் கோரி வருகிறது.

1989-08-26. **செம்பியன் செல்வன்.**

# பதிப்புரை

பிரியமுள்ள வாசகர்களுக்கு!

மீரா வெளியீடாக ஐம்பது நூல்களாவது வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தில் ஏழாவது நூலாக செம்பியன் செல்வன் அவர்களின் "கானகத்தின் கானம்" நாவலை வெளியிட்டுள்ளேன்.

தெளிந்த நீரோடையாக ஆரம்பிக்கும் இந்நாவலைத் தென்றலாகக் கொண்டு சென்று புயலாகவே முடித்திருக்கிறார் "செம்பியன் செல்வன்"

சரித்திரத்தில் அழுத்தமாகப் பதிந்துவிட்ட ஒரு சகாப்தத்தில் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை வெளியிடுகிறேன் என்றால் அது இறைவனின் ஆசியும், வாசகர்களாகிய உங்களது ஒத்துழைப்பும் தான்.

இனிமையாகவும் உன்னதமாகவும் பாடக்கூடிய பறவைகள் மட்டும்தான் குரலெழுப்பலாம் என்று ஆகிவிட்டால் "கானகத்தில் கானம் கேட்காது" கானகம் நிசப்தமாகி விடும்.

ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை வெளியிடுவதற்கு இன்னும் பலர் முன் வரவேண்டும் என்று நான் விரும்புகின்றேன், ஆசைப்படுகின்றேன்.

38, வேம்படிவீதி,
யாழ்ப்பாணம்.
24-1-1989

அன்போடு
டி. லிகோரி

# 1

விடிகாலை. முட்பற்றைகளும், கொய்யாச்செடிகளும், இலந்தைப்புதர்களும் இடையிடையே மண்டிக்கிடக்க, பனங்கூடல் காடென விரிந்து வெண்மணல் சிரிக்கக் கொலு விருக்கின்றது. நெடிதுயர்ந்த பனைகளின் குருத்துக்களின் உச்சிகளை வகிர்ந்து வாரிக்கொண்டு ஒளிபரவ ஆரம்பிக்கின்றது. 'பனைகளின் வட்டுக்களை உச்சிமுகரும்போது மட்டும் இளஞ்சூட்டு இதம். என்னை நேருக்கு நேராகச் சந்தித்துத் தழுவும்போதுகூட தணலாய்ச்சுடுவது இவரின் வழக்கமாகி விட்டது. இவருக்கு ஏனோ இந்த ஓரவஞ்சனை' என்ற மண்ணின் செல்ல முனகலை, பனிமூட்டத்தினிடையே காற்று மெல்லத் தவழவிடுகிறது.

மண்ணின் தாபமா? தாகமா?

இந்தத்தாகமும் தாபமும், தான் உயிர்க்குலங்களின் சீவாதாரமா?

பனைமரங்களிடையே அந்த நீண்ட ஒற்றையடிப்பாதை நெளிந்து, நெளிந்து கிடக்க ... அதன் முடிவில் பனையோலையால் கட்டப்பட்ட அடைப்பும் ... அதற்கு மேலாக ஓலைக் கொட்டிலொன்றின் முகடும் தெரிகிறது. இரண்டு அறைகளைக்கொண்ட இரண்டடி உயரமான திண்ணை 'ட' வடிவமாக அமைய பனையோலையால் மேய்ந்துள்ள வீடு. அதன் இடதுபுறமாக தெற்குத் திசையை நோக்கியபடி 'குசினி'. அதன் முகப்நோக்கி கள்ளுக்கொட்டில். அதன் அடைப்புக்கம்பங்களில் காலியான முட்டிகளும், பிளாக்களும் தொங்குகின்றன. முற்றத்தில் வளர்ச்சி குன்றிய தென்னங் கன்று. அதனருகே நீர்ப்பானை ஒன்று சரிந்து கிடக்கிறது. அருகே சிறு மரப்பலகை ஒன்று காலாகாலமாக கிடப்பது போல் மழை, வெயிலுக்கு அகப்பட்டு சுயத்துவம் குன்றிக் காணப்படுகின்றது. அந்த இடம் மட்டும் கருமை பூத்துக் கிடக்கிறது.

வெளிப்படலை அடைப்பைத்திறந்து கொண்டு குட்டியன் வருகிறான். வயது நாற்பதுக்கு மேலிருக்கும். கையில் நுரை தள்ள கள்ளுமுட்டியுடன், இடுப்பில் இயனக்கூடு கடகடக் கிறது. வீட்டின் நிர்ச்சலனமான அமைதி அவனுக்கு எரிச்ச லூட்டுகிறது.

''இந்தா... நல்லகதைதான், விடிஞ்சு பொழுதும் மண் ணுக்கு வந்திட்டுது.... இவையள் இன்னும் எழும்பமனமில் லாமக் கிடக்கினம் போல......''

— கள்ளுக்கொட்டிலில் உள்ள பெரிய பானையில் தான் கொண்டுவந்த கள்ளை ஊற்றுகிறான். இயனக்கூட்டை அவிழ்த்து, வேட்டியை உதறிக்கட்டிவிட்டு ''ட''வாக வளைந்து ஓடிய திண்ணைப்பக்கமாக கொண்டுசென்று அதனை வைக்கிறான்.

''எணை பாக்கியம் ... எழும்பணை எழும்பு. கண்டறியாத நித்திரை...... உவள் தங்கச்சியும் உன்னோடை சேந்து

சேந்து நல்லா நித்திரை கொள்ளப் பழகீட்டாள். அவளை எழுப்பிவிடு... அவளும் ரவுணுக்குப் போறேல்லையே ...

....இன்னும் கொஞ்ச நேரத்தில் உடையாரும் கள்ளுக்கு வந்து நிக்கப்போருர்... அவர் வாறதுக்குள்ள இந்தத் தேத்தண்ணியால வாயை நனைக்கலாம் எண்டா என்ர நாச்சியார் இன்னும் படுக்கையை விட்டு எழும்பிருயில்லை.''

— உள்ளே மகளுடன் ஆனந்தமாக விடிகாலைத்தூக்கச் சுகத்தை அனுபவித்துக்கொண்டிருந்த பாக்கியத்தின் காதில் அபஸ்வரமாக விழுந்த எரிச்சலில் படுக்கையைவிட்டெழுந்து கதவைத் திறந்துகொண்டு வெளியே வருகிருள். தூக்கக்கலக்கம்- கண்களிலும் அவள் கலைந்த ஆடைகளிலும் தெரிகின்றது. அந்தக்கோலத்தில் அவளைக்கண்ட குட்டியனின்மனம் ஒருகணம் துள்ளுகிறது. அவளை விழுங்கிவிடுபவன் போல் பார்க்கிருன்.

''இது ஒரு மனிசன். விடியமுந்தி எழும்பி... தானும் நித்திரை கொள்ளாம... கொள்ளிறவையையும் கொள்ள விடாம ... நாள்முழுதும் அடிபட்ட உடம்புக்கு எப்பனெண்டாலும் ஆத்தியைக் கொடுக்கலாமெண்டா ... இந்த மனிஷன் சும்மா கிடக்க விட்டாத்தானே .....?''

''சரி சரியணை ... புலம்பினதுபோதும். போய் அடுப்பைப் பத்தவையணை. நானும் என்ன சப்ரமஞ்சத்தில படுத்தெழும்பியே வாறன்.'...

''உன்ரை இதுதான் பெரிய கரைச்சல்.''

— அவள் அடுப்படியை நோக்கிச் செல்கிருள். அடுப்படிக்கதவைத் திறந்ததும் கறுப்புப்பூனை ஒன்று ''விருட்'' டென்று வெளிப்படுகிறது. அவள் 'ச்சூ ச்சூ .....' என்றவாறு உள்ளே நுழைகிருள்.

— அடுப்புப்புகட்டின் மீது நாலைந்து பானைகள் பலநிலை களிலும் கவிழ்ந்தும்...... சரிந்தும் .. உருண்டும் தெரிகின் றன. ஒரு போத்தல் விளக்கு சரிந்து மணம்பரவ ... சோற்றுப்பருக்கைகள் சிந்திச் சிதற பானை ஒன்று கவிழ்ந்து போய்...... அவள் ஆத்திரம் சிரசுக்கேறுகின்றது.

''நாசமாய்ப்போற பூனை...... ஒண்டையும் வைச்செடுக்க விடாதாம் ... பாரன்! ... இருந்த பழஞ்சோத்தையும் கவிழ்த்துக் கொட்டிப்போட்டுது ''

''என்னணை ... பழஞ்சோத்துப்பானையைக் கவிழ்த்துப் போட்டுதோ! ... உனக்கும் ஒண்டிலும் கவனமில்லை... நீ கொஞ்சம் கவனமாக, பத்திரமாக அதைத்தூக்கி உறி யில வைச்சிருந்தா பூனை அதைத் தட்டுமே...... உங்களுக்கு குனிஞ்சு நிமிரப்பஞ்சி... கண்டறியாத பஞ்சி இப்பத்தப் பெண்டுகளுக்கு ... ராத்திரியான் கருவாட்டுக்குழம்பு மணத் துக்கு வந்திருக்கு... உனக்கும் வரவர மறதி கூடிப்போட் டுது......''

— என்றவாறு மடியிலிருந்து சுருட்டை எடுத்து உருட்டி வாயில் வைத்துவிட்டு நெருப்புப் பெட்டியைத் தேடுகிருன்.

''எணை ... இங்ககிடந்த நெருப்புப்பெட்டியைக் காணேல்ல. உந்த நெருப்புப்பெட்டியை ஒருக்காத்தாவன்!''

''பொறணை ... என்ன அதுக்குள்ள அவசரம். தேத் தண்ணி அடுப்பை மூட்டிவிட்டுத் தாறன்... உனக்குத் தேத்தண்ணிக்கும் அவசரம்...... சுருட்டுக்கும் அவசரமெண் டால் நான் என்ன செய்யிறது?''

''சரியணை சரி... .. ஏனணை இப்ப காலங்காத்தால எரிஞ்சு விழுரு ? உன்ர கத்தலிலபார் உவள் புள்ளையும் எழுப்பி வந்திட்டாள்......''

— புனிதம் வீட்டிற்குள் இருந்து வருகிருள். தூக்கம் கலைந்த கோலம். இருபது வயது இளமை. அங்கங்களின்

பருவம்போட்ட கோலங்கள். சிவந்தமேனி. இடுப்புவரை ஊசலாடும் கருங்கூந்தல். அந்தச் சூழலுக்கே பொருத்த மற்ற முகவிலாசம். வானத்து நட்சத்திரப் பொட்டொன்று குடிசைக் கீற்றிடையே விழுந்ததென... ..

குட்டியன் அவளைக்கண்டதும் அவசரம் அவசரமாகச் சுருட்டை மறைக்கிறான். அதனைக் கண்டுவிட்டு பாக்கியம் வாய்விட்டுச் சிரிக்கிறாள்.

''பொடிச்சியில இவ்வளவு பயமிருக்கிற நீ என்னத் துக்கு சுருட்டைக் குடிக்கிறாய்... ?

''எல்லாம் பழக்கதோஷம் தானெணை...... விடுறதெண் டால் உடன விடமுடியுமே? கெதியணைப் போய் தேத்தண் ணியையெண்டாலும் கொண்டுவா!''

— புனிதம் அவர்களிடையே வருகிறாள். அவள் கையில் துவாயும் சோப்பெட்டியும் காணப்படுகிறது.

''சரி...சரி... உங்கட கூத்தை ஆரம்பியாதையுங்கோ... ஆக்கள் வாற போற நேரம்......''

— அவள் அடுப்படியைச் சுற்றிக்கொண்டு பின்பக்கமா கச் செல்கிறாள். பாக்கியமும் தன் காரியத்தில் கவனமாகி றாள்·

''குட்டியன்...... குட்டியன் ....''

''ஆரது படலேக்க நிண்டு கூப்பிடுறது.....? இருக்கி றன் .. உள்ள வாறதுதான .....''

''நிக்கிறியே...... அப்ப நல்லதாப்போச்சு......''

— படலை திறக்கும் ஓசை கேட்கிறது. கி ரா ம த் து த் தோற்றம் கொண்டு வெறும்மேனியில் ஒரு சால்வைத்துண் டுடன் கணுக்காலுக்கு மேல் கட்டிய நாலுமுழத்துடன் ஒரு வர் உள்ளே வருகிறார்.

"நீ மரத்தால இறங்கீற்றியோ...... இல்லையோ எண் டெல்லே வந்தன்......

— அவர் தாமாகவே சென்று வேலிக்கதிகால்களில் தொங்கும் பிளாக்களில் தனதை இனம் கண்டு எடுத்து ஊதி தூசிதுடைத்து சுத்தம் செய்கிறார்.

"வேலாயுதத்தாரை என்ன இன்னும் இவ்வளவு நேரமாய்க் காணேல்ல எண்டு நினைக்க வாறியள்..... !"

"நீ எண்டாலும் ஆயிரம் சொல்லு குட்டியன் ... காலையில ஒரு பனையான்ரையா ரெண்டு போத்திலெண்டாலும் அடிக்காட்டி என்னால ஒண்டுமே செய்ய முடியாமக்கிடக்கே... அதுவும் உன்ரகையால வாங்கிக்குடிக்கோணும் ... என்ன இருந்தாலும் உன்ரை கள்ளை அடிக்க ஆரும் பிறந்து வர வேணும்......"

— பிளாவில் குட்டியன் கள்ளை ஊற்றுகிறான். வேலாயுதத்தாரின் முகம் ஆவலில் மின்ன, பிளாவை எடுத்துக் கொண்டு கொட்டிலுக்கு முன்னால் போய்க்குந்துகின்றார். கண்ணை மூடிக்கொண்டு அவர் கள்ளருந்தும் காட்சி ... பூனையை நினைவூட்டுகிறது.

அடுப்படியிலிருந்து பாக்கியத்தின் குரல் கேட்கிறது

"அவர் குடிக்கட்டும் ... நீ வந்து தேத்தண்ணியைக் குடி......"

"அப்ப நான் போகட்டே.... "

"போ . போ ..... அதுக்குள்ள ஒரு விசயம் உன்னைக் கையோட ஒருக்கா வந்திட்டுப் போகச் சொல்லி முத்துத்தம்பி சொல்லிவிட்டவர்...... "

"ஆர் முதலியாரோ? என்னத்துக்காம் இந்தக் காலை வேளையில...... ஏதும் அவசரமோ ...?" அவன் வினாவில் பயம் கலந்திருந்தது

''எனக்கொண்டும் தெரியாது என்னை வழியில கண்டு தான்சொல்லிவிட்டவர். போய் என்னெண்டுதான் கேளன்''

— அடுப்படியில் இருந்து பாக்கியத்தின் குரல் கேட்கின்றது.

''என்ன நான் கூப்பிட்டது காதில விழேல்லியா ?''

''கொஞ்சம் பொறணையாத்தை...... வாறன்.. ...''

— அடுப்படிக்குள் சென்று அவசரம் அவசரமாக தேநீர் அருந்துகிருன்.

''என்னவாம்?''

''ஓண்டுமாத் தெரியேல்ல... முதலியார் ஒருக்கா அவசரமா வந்திட்டுப் போகட்டுமாம். போய் வந்தாத்தான் தெரியும்......''

— அவன் அவசரமாக வெளியேற முயலுகையில் புனிதம் அடுப்படிக்குள் நுழைகிருள்.

நீரிலாடிய புத்தம் புது மலர்போல் மலர்ச்சியாக இருக்கிருள்.

''பிள்ளை... நீ உன்ரை வேலைக்குப் புறப்படு... .. பாக்கியம் நீ வாடிக்கைக்காரர்களைப் பார்த்துக்கொள். நான் போய் முதலியாரை என்னெண்டு கேட்டிட்டு வாறன். சில நேரம் அப்படியே வயலுக்குப் போனுலும் போயிட்டுத்தான் வருவன்.''

குட்டியன் வெளியேற, புனிதம் அறையினுள் நுழைகின்ருள்.

பாக்கியம் யாரையோ தேடி அலைபாய்ந்த கண்களுடன் வெளிப்படலைக்குப் போகின்ருள்.

# 2

அந்த எட்டடிக்குச்சுக்குள் ஒளி மெல்லப் பரவிக்கொண்டிருக்க கொஞ்சம் கொஞ்சமாக எல்லாப் பொருட்களும் பார்வைக்குப் புலனுகின்றன. ஒரு மூலேயில் சிறு தைலாப்பெட்டியும், ஒரு டிரங்பெட்டியும், சிறுமேசைவிளக்கும், கதிரை மரக்கட்டிலென...... கட்டில் கட்டிலாக இல்லாது ஒரு பரணுக ஏதேதோ சாமான்கள் ஏறிக்கிடக்க .... இதற்கும் கீழ்க்குந்துச் சுவருக்கும் இடையில் பாய்களும், தலையணைகளும் சுருட்டி அடுக்கப்பட்டிருந்தன பாதிமண் சுவருக்கு மேலாக தட்டிச்சுவரில் சிறு பகுதி சதுரமாக யன்னலாக ஒளிவீசப்படுகிறது. அதில் கையகலக் கண்ணுடி தொங்குகிறது.... அதன் முன்னுல்நின்று புனிதம் வேலைக்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கிருள்.

இரத்தப் பூச்சிவப்பில் ... வெண்பூக்கள் சிதறிய அரைப் பாவாடையும்...... மெல்லிய 'பிங்க்' கலரிலான பிளவுசும் இரட்டைப்பின்னலும் நெற்றிப்பொட்டும் .. பவுடர்ப் பூச்

சும் அவளை அப்ஸராக்குகின்றது. மனதின்திருப்தி உதட்டில் புன்னகையாக மலருகின்றது.

பாக்கியம் நீட்டும் சாப்பாட்டுப் பார்சலை வாங்கியபடி வெளியேவந்து வாசலில் கிடந்த செருப்பை காலில் மாட்டிக் கொண்டு வழக்கமாகக் கொண்டுசெல்லும் தடித்த மட்டை போட்ட இரு கொப்பிகளை எடுத்து மார்பில் அணைத்தவாறு வெளியே வருகிருள்.

''அம்மா ... போட்டுவாறன்!''

''பிள்ளை ... கவனம்...... பத்திரமாய்ப் போய் வர வேணும்... ''

அவள் நடக்கத் தொடங்குகிருள். அவள் தெருவுக்கு வந்து பஸ் ஏற 'அரைக்கட்டை' அந்தப் பனங்கூடலுக்குள்ளாக நடக்க வேணும். அதற்கு 'அரைமணி' நேரமாவது எடுக்கும். அவளுக்கு காலைவேளையில் அந்தப் பனங்கூடலுக்குள்ளால் நடப்பது என்ருல் மிகவும் பிடிக்கும். பனங்கூடல் வழங்கும் ஒளியும் சுத்தமான காற்றும்...... பனங்கிளிகளின் உல்லாசமும் அமைதியும்...... பாதையாக நெளியும் நீர் கழுவிய வெண்மணற் கோடும்...... அவளையும் ஒரு உல்லாசக்கிளியாக்கி விட்டுவிடும் ... அங்கே மனதிற்குப் பிடிபடாத ஒரு ராகம் மெல்லிழையில் அவளைத் தாலாட்டுவது போல......

பனங்கூடலைக் கடந்ததும்...... தோட்ட வெளிகள்...... வரப்புகள்...... புதர் மேடுகள்... வெள்ளாட்டுக்குட்டிகளின் துள்ளல்கள்......... பாறை அரும்புகள் தலைநீட்டும் நிலப்பரப்பு ..... 'தறை' புரட்டும் தொழிலாளிகள ...

வழக்கமான காட்சிகள்தாம். ஆனுல் காணும் ஒவ்வொரு நாளும் புத்தம்புதுக்காட்சிபோல் மனதுக்கு எவ்வளவு ரம்மியமாக இருக்கிறது.

அதோ!...... அந்தப் பாடசாலை வாசலைத்தாண்டி எட்டடி எடுத்து வைத்தால் போதும். பஸ்தரிப்பிடம். நடக்கிறாள். பின்னால் யாரோ வருவதுபோல் தெரிகிறது. திரும்புகிறாள் ஒருவரும் காணப்படவில்லை.

பாலும் தெளிதேனும்...... மூவிரண்டு ஆறு ... கந்தன் நல்ல கமக்காரன் ... தமிழ்ப்பாடசாலையில் எல்லாப்பாடங்களும் ஒரேநேரத்தில் நடக்கும் கோரஸ்.

மனம் யாருக்காகவும் தரித்திருப்பதில்லை.

— அந்தச்சிறுமி வியர்க்க வியர்க்க ஓ டி வ ரு கி ரு ள். மூதேசி ... சனியன்...... நேரம் போச்சு ... வெள்ளென விடு ........ போகோணும் எண்டு சொல்லச்சொல்ல.. ...... அதைச்செய்...... இதைச்செய் பிள்ளை எண்டு நேரம் கடத்திப்போட்டு ..... இப்ப பள்ளிக்குப்போ எண்டு அடிச்சுத் துரத்துது...... ஏதோ நான் வீட்டில நி க் க க் கூடாது போல...... இண்டைக்கு நல்லா நேரம் பிந்திப்போச்சுது... அந்த அறுவான்...... மூலக்கொதியன்...... ஆட்டுக்குடல் வாத்தியார் என்ர குடலை எடுக்கப்போருன்......

ஏய்! புனிதம்...... இங்க வா...... எத்தனைநாள் உனக்குச் சொன்னனுன்... ‘லேற்று’ வரக்கூடாதெண்டு...... நீ என்ன சொல்வழி கேக்க மாட்டியா......?

வந்து .... வந்து சாணி பொறுக்க அம்மாபோகச் சொன்னவ...... அதுதான் வாத்தியார்...

நீ சாணிபொறுக்கப் போறதெண்டா அதைச்செய்...... பள்ளிக்கு வாறதெண்டா இதைச்செய்... .. அதையும் இதையும் ஒண்டடி மண்டடியாகச் செய்யிறதெண்டா நீ இனிப் பள்ளிக்கு வராதை ... .. இண்டைக்கு அடிச்சாத்தான் உனக்கு ஞாபகத்தில கிடக்கும். இல்லாட்டி நீ எனக்கு வால் தான் காட்டுவாய்... .. எங்க கையை நீட்டு......

சுளீர்! சுளீர்! சுளீர்!

இப்போதும் கை வலிப்பதுபோல் தடவிக்கொண்டாள்.

பஸ்ஸை இன்னும் காணவில்லை. சனியன் சிலநாட்களில இப்படித்தான். எங்கையும் 'பிரேக்' டவுனுகிக் கிடக்கும்.

காத்திருத்தல் காரணமின்றியும் காலம் காலமாக நிகழ்கின்றது.

வாத்தியார்...... ஒண்டுக்கு ..... தண்ணிக்கு......

—பள்ளிக்கூட கிணற்றடியில் சிறுவர்கள் தண்ணிக்கு முட்டியோதிக்கொண்டிருக்க .. அந்தச் சிறுமியும் இன்னும் சில சிறுமிகளும எட்ட நின்று பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு நிற்கிருர்கள். அவர்களை யாரும் கவனிப்பதில்லை.

லக்ஷ்மி எங்களுக்குக் கொஞ்சம் தண்ணியூத்துமன்

தண்ணியோ... உங்களுக்கோ... நான் உங்களுக்கென்ன வேலைக்காரியோ... .. வேணுமெண்டா உன்ரை வீட்டை போய்க்குடி... ..

அவளுக்கு நெஞ்சை வறட்டுகிறது. இது தாகத்தாலல்ல.

அன்று இந்நிகழ்வுகள் யாவும் இயல்பானவையாகவும், சமூக அங்கீகாரம் கொண்ட பிறப்பால் நேர்ந்த நியமங்கள் என்ற உணர்வு இரத்தத்திலும் உணர்விலும் நடத்தையிலும் கொண்டிருந்த அறியாப்பருவத்தில் ''லக்சுமி நாச்சியார்... நயினர்...'' என்று கெஞ்சிக்கேட்டு தண்ணீர் பெற்று அருந்துவதே பெரிய சாதனையாகப்பட்டதேயன்றி, இழிவாகவோ வேதனையாகவோ ஒருபோதும் இருந்ததில்லை.

ஆனல் ... இன்று......

சமூகம் வளர்ந்து விட்டதா? மக்கள் மனம் மாறிவிட்டார்களா ? எதுவுமே நிகழ்ந்து அற்புதமாகி விடவில்லை. ஆனல் பாதிக்கப்படுபவர்கள் தாங்கள் காரணங்கள் எதுவுமின்றி காலம் காலமாக வஞ்சிக்கப்பட்டு வருகிறோம் என்ற உணர்வைப் பெற்றபின் பெறும் மனத்தாக்கங்களின் வேதனையே அதிகரித்து விட்டது.

இன்று அவளின் காலடியில் மிதிபடுவனவெல்லாம் பழைய நினைவுகளின் சிதைவுகளே... ..

நீண்டகாலமாக குழந்தை குட்டி எதுவுமில்லாமலிருந்த குட்டியனுக்கு குழந்தை ஒன்று பிறந்தபோது அந்தக் குடும்பமே மகிழ்ந்தது. அந்தக் குழந்தையின் அழகு முகத்தைக் கண்டபோது ஊரே வியந்தது. ''குட்டியனுக்கு இப்படி ஒரு மகளா?'' குடிசைகளில் இளவரசிகள் பிறப்பதுண்டோ?

குட்டியனிடம் வரும் வாடிக்கையாளர்களின் ''செல்ல மகளாகி'' விட்டாள் என்று கூறுவது கூடத்தவருகாது. அவளுக்குக்கொடுக்கவென்று ''சொக்கலேற், விசுக்கோத்து'' என கொண்டுவரும் உணவுப்பொருட்கள் சீந்துவாரற்றுக் கிடக்கும். பல சமயங்களில் நாகன் தன் அத்தையின் வீட்டிற்குப் போனல் சொக்லட் சாப்பிடலாம் என வந்து போனதை இப்பொழுதும் நினைப்பதுண்டு. காதும் கேளாது வாயும பேசாது வளரும் மருமகனிடம் தாளாத வாஞ்சை பாக்கியத்துக்கு. நாகனுக்கோ இந்த இளவரசி வியப்பிலாழ்த்தும் அழகுத் தேவதை. அவளருகில இருந்து விழி கொட்டக் கொட்டப் பார்த்துக் கொண்டே இருப்பான்.

உடையார் கூட அவளுக்காக ஒருபால் மாட்டையே கொண்டு வந்து கட்டியதை பாக்கியம் கதைகதையாகக் கூறுவாள்.

அவள் பாடசாலைக்குச் செல்லும் காலங்களிலெல்லாம் சின்னஞ்சிறு பூவின் காம்பெனவே தொடர்ந்து செல்வான். அவளைப் பாடசாலை விட்டவுடன் பத்திரமாகக் கொண்டு வந்து வீடு சேர்ப்பான். அவளைவிட நாலைந்து வயதுதான் அதிகமாயினும், தன்னை ஒரு முழுமனிதனுக அவன் கற்பித்துக் கொண்டான் அவன் அந்த இளவயதிலே ஏருதபனையில்லை. தென்னையில்லை அவன் உடலில் புதிய இரத்தத்தின் மினுமினுப்பு, கட்டான உடலில் அனலேற்றும். அவன் கண்களில் எப்போதும் ஏதேதோ வண்ணக்கனவுகள் மலர்ந்து கொண்டிருப்பதாக ஒளிதெறிக்கும். அந்தக்கனவு

களுக்குச் சொல்லோவியம் படைக்கத்தான் நாவில்லையே. அவனது ஒலிக்குறிப்புகளைப் புரிந்து கொள்ளவோ, அதற்குப் பதிலளிக்கவோ யாருமில்லாத பொழுது அவனது உள்ளத்தில் ஆத்திரம் அனலாகக் கொதிக்கும்...... பாளைக்கத்தியின் வீச்சுக்கு வடலியின் இளம் குருத்துக்கள் பலியாகித் தாறுமாருகக கிடக்கும். ஆனல் புனிதத்தை கண்டதும் அவன் கோபம் மறைந்து உதட்டில் புன்னகை மலரும். அவனது மனக்குகை ஓவியங்கள் எப்பொழுதுமே இருளில் தான் மறைந்து கிடந்தன.

''வாடா மாப்பிள்ளை!'' என்று பாக்கியம் விளிக்கும் போது, அவளின் உதட்டு அசைவுகளிலிருந்து புரிந்து கொண்டு சிரிப்பான். அப்போது அவன் உடல் சிலிர்த்து நிற்கும்.

சிறுமி புனிதத்திற்கு அப்பழுக்கற்ற காவல்காரன்; மாங்காய், புளியங்காய் காலங்களில் அவளுக்கு அவன் ஒரு சபரி... அவனின் அப்பழுக்கற்ற சேவையின் பயனைப் பெற்றுப் பெற்று அவள் தன்னுள் ஒரு பெருமிதத்தை வளர்த்துக் கொண்டாள். தனக்கு உதவிசெய்ய வேண்டியவர்கள் நான் இவர்களுக்கு மேலானவன் என்ற எண்ணமும் அவ்வப்போது தலைகாட்டி மறையும். அந்த எண்ணங்களை சமூக நடப்புக்கள் சிதைக்கும் போதெல்லாம் அவளின் மனதில் எரிச்சல் எழும்பும்.

இந்த மன எரிவு அவள் வளர வளர ஒரு சத்ய ஆவேசமாக மாறுகின்றது.

உலகின் இயற்கை நிகழ்வுகளில் ஒன்றென, அவள் பெரியவளானதிலிருந்து, நாகன் அவளைப் பின்தொடருவதும், பாடசாலைக்குக் கொண்டு வந்து விடுவதும் நின்று போனுலும். அவளுக்குப் பாதுகாப்பாக எட்ட... எட்ட இருந்தே அவளறியாமல் பினதொடர்வது வழக்கமாயிற்று புனிதமும் தனது ஆடைகளிலும் அவற்றின் மடிப்புக்களி

லும் அதிக அக்கறை கொண்டதுபோல் அவனும் தனது சாறனுக்குமேலாக ஒரு சேட்டை அணியவும், தேவைக்கேற்ப மடித்து விடவும், முழுக்கையாக அணியவும் பழகிக்கொண் டான்.

— தூரத்தே ஏதோ சருகுகள் மிதிபடும் ஓசை கேட்கி றது. புனிதம் சிந்தனை கலைந்து நிமிர்கிறாள் தூரத்தே பனைவடலிகளிடையே பாதைபிரித்து, மேட்டில் ஏறி தார் ரோட்டில் நாகன் நடப்பது தெரிகிறது. மெல்லச்சிரித்துக் கொள்கிறாள். அவளுக்கு நாகனைப்பற்றி எந்தவித எண்ண முமில்லை. பாவம் வலது குறைந்தவன். நெருங்கிய உற வுக்காரன். உதவி செய்வதில் பின்னிற்காதவன். அவ்வ ளவுதான்.

அவளைப்பற்றிய அவன் கனவுகளை அவள் அறிந்த தில்லை. ஆனால் அறிவதற்கு முன்னர் நடந்த அந்த நிகழ்ச்சி

அன்று பாடசாலை முடிந்து அவள் வீடு திரும்புகையில் மணி இரண்டு இரண்டரையாயிருந்தது அவள் திரும்பும் வழியில் வழக்கமாக நிசப்தமாக இருக்கும் பனங்கூடல் அன்று ஒரே கூத்தும் கும்மாளமுமாக அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

ரேப் ரிகார்டர் 'வேகமான பீட்'டில் அலற

பைலாவா, கூத்தா என்று இனம்பிரிக்க முடியாதபடி சில இளைஞர்கள் பனைமரநிழலின் தண்மையில் ஆடிக்கொண் டிருக்கின்றனர். நடுவில் விரிக்கப்பட்டிருந்த சமுக்காளத் தில் ... விஸ்கி, பிறண்டி, சாராயப்போத்தல்களும், பீலி சுகளில் எண்ணை மினுக்கலில் இறைச்சித்துண்டங்களும், மணற்குவியலில் சில முட்டிகளுமாக......

எதிர்பாராத விதமாக அந்த இடத்தை அண்மியவளை...

- ஹேஇ! .. புனிதம்...... நில்லு... நில்லு...

மணியகாரனின் மகன். அவன் கொழும்பில் வேலை பார்க்கிறான். இந்த லீவுக்கு நண்பர்களுடன் வந்து கலாட்டாவும், கும்மாளமு ......

அவன் அழைத்ததைக் கவனியாதவள் போலப் புறப்பட்டவளை, ஒரு இரும்புக்கரம் பிடித்து இழுத்து நிறுத்துகின்றது.

'ஆ...! அப்பா... ' - வலியால் மெல்ல முனகுகிறாள். அவன் அவளைப்பிடித்து நண்பர்கள் முன் நிறுத்துகிறான்.

'ஹவ் இஸ் அவ விலேஜ் பியூட்டி '

'மார்வலர்ஸ் ...'

'சுப்பர்ப்......'

'வாரே... வாஹ்!......'

''மச்சான் கொழும்பில் மட்டும் இந்தச்சரக்கு இருக்குமானால்...... கொழும்பே இவளுக்குப் பின்னால் தான் அலையும்..... '

'ரியலி......'

— அவளை அப்போதுதான் முதன்முதலாகப் பார்ப்பவன் போல் விழிகளால் மேய்கிறான்.

'எப்படி இவளை இவ்வளவு நாள் கவனிக்காமல் போனேன்?' — அவனுக்கே ஆச்சரியமாக இருக்கிறது.

'மச்சான் ட்ரை பண்ணுவமா...?' – மதுவால் சிவந்த கண்களுடன் நண்பன் ஒருவன் கேட்ட கேள்வி அவனைத் திடுக்கிட வைக்கிறது.

'குடியில் பங்கு வைக்கலாம். இதிலுமா பங்கு...? அதுவும் எங்கட குடிமகளை ...' - அவனை ஆத்திரம் கொள்ள வைக்கிறது.

'வட்த ஹெல் ஆ யூ ரோக்கிங் உங்களுக்கு உயி ரோட ஊருக்குத் திரும்பிற எண்ணமில்லைப்போல... .. புனி தம்... சொறி... நீ வீட்டைபோ... ஓடு.. ...'

அவள் மின்னலென விரைகிருள்.

''மச்சான் யூ ஆர் இன்சல்ட் அஸ்...''

''என்னடாப்பா... எடுத்ததுக்கெல்லாம் கோபிக்கிறியள். அவள் ஆர் தெரியுமே. எங்கட குடிமகன் எண்டாலும் குட்டியனின் மகள். நாங்கள் ஏதும் ஏறுமாரு நடந்தம் எண்டா எல்லாம் போச்சு... இப்ப அவங்களும் கட்சி... சங்கம்... போராட்டம் எண்டு எழுந்திட்டாங்கள்......''

''அவங்கள் எழுந்தா... .. நாங்கள் என்ன படுத்தே கிடக்கிறம்... ? எண்டாலும் மச்சான் நீ நல்லாத்தான் பயப் படுகின்ருய்...... நானெண்டா... ''

''நீயெண்டா என்ன செய்வாய்......?

''ரொப்பான சரக்கு... நீ பாத்துக்கொண்டு திரியிரு ... நாங்கள் தின்னும மற்ருக்களையே தின்ன விடுறது ?''

''சரி... சரி... போதும். எல்லாரும் எழும்புங்க ... வீட்டைபோய்ச் சாப்பிடவேணும்... உனக்கும் கூடிப்போச் சுது ....''

— சரிந்தும், எழுந்தும், தவழ்ந்தும் குடிவெறியில் தள்ளாடிச் செல்வது புனிதத்திற்குத் தெரிகிறது.

அன்றிரவு. மேசைக்கு முன்னல் கதிரையில் அமர்ந்தவாறு, மேசை விளக்கின் சுடரை ஏற்றியும் இறக்கியும் கொண்டிருக்கிருள், அவள் முகம் சுடரில் செம்மை பூத்து ஒளிருகிறது. கண்களும், மனமும் அடிவானத்துக்குமப்பால் சென்று லயித்ததென விளங்க ..... உதடுகளில் அவளறியாமலே புன்னகை மலருகிறது.

உண்மைதானு...? அவன் என் கையைப் பற்றி இழுத்தானு...?

அரும்பு மீசைக்காரன்...... கொழும்பில் வேலைபார்ப்பவன்... மணியகாரனின் மகன் ... அவனு...

அப்பப்பா...... என்ன முரட்டுக்கரம் ... வலி எடுத்து விட்டதே .. ஆனால் அந்த வலிகூட ... அதில்கூட ஒரு சுகம்...... இதுதான் இன்ப வேதனையா......? என்னில் அவனுக்கு விருப்பம் இருக்கோ ? இல்லாவிட்டால் ஏன் என்னை அப்படி இழுத்து...... அந்தப்பிடி..... முதன் முதலாக ஒரு ஆடவனின் முரட்டுப்பிடி .. அவளின் மனமொட்டினை வருடும் கதிரவனின் உதயரேகையா... ?

அவளின் பெண்மைபூரிக்க நெஞ்சம் விம்மித்தாழ்கிறது.

ஆனால் ..... எங்கட சாதியில அவனால் எப்படி சம்பந்தம் செய்து கொள்ளமுடியும்...... எட்டாக்கனி ... இது என்ரை வீண்கனவு ...

— அவனைப் பொறுத்தவரையில் மிகச்சாதாரண விடயம், அந்தக் கள்ளங்கபடமில்லாத சின்னஞ் சிறு மலரின் உள்ளத்தில் பெரியதொரு சலனத்தை ஏற்படுத்திவிட......

அன்று அவளின் கனவுகளில் கூட அவன் வந்து போகிறான்.

அவனுக்கும அன்று நித்திரையில்லை

'மச்சான் ரொப்பான சரக்கு.. ... பாத்துக் கொண்டு திரியிரு நானெண்டா.....'

குட்டியனுக்கு அழகான மகள் இருக்கு என்று கேள்விப் பட்டனுன்தான். ஆனால் இப்படி வெள்ளைக்காரக் குட்டி போல பொலிஷ்டா இருப்பாள் எண்டு நினைக்கேல்ல உதுகளில போய்ச் சவகாசம் வைச்சா ஏதும் பிரச்சனையில் போய்த்தான் முடியும்... வேண்டாம் இத்த நினைப்பு......

ஆனு இதெல்லாம் என்ன ... எங்கட பரம்பரைகளுக்கு என்ன புதிசோ ... 'ட்ரை' பண்ணிப்பாப்பம்... பெட்டை வளையும போல தெரியுது...... ஆனு ஊருக்குத் தெரிஞ்சா... தெரிஞ்சா என்ன...... லீவு முடிய கொழும்புக்கு ரயிலேறி விட்டா பிறகு எப்பவோ ஊருக்கு வரேக்க தான் ... அதுக்கிடையில எவ்வளவோ நடந்துபோகும் ..

விடிந்தது. ஊரில் எந்தவித மாற்றமுமில்லை. நேற்றிருந்த மக்கள்... மரங்கள்...... கால் நடைகள்... உயிரொலிகள்.... நீலவானம் செம மண்பூமி .. கிணற்றில் பட்டை இறைக்கும் நீரொலி .... பெண்களின் கிளுகிளுப்பு .... பாட்டோசை......

புனிதத்திற்கு எல்லாமே புதிராக இருக்கிறது. புதிதாக இருக்கிறது. 'ஆ! .. உலகம் எவ்வளவு அழகானது, அற்புதமானது, ஆற்றலானது.'

நடக்கும் போது கால்கள் நிலத்தில் பரவுகிறதா என்ற சந்தேகம் அவளுக்கே வந்து விடுகிறது குனிந்து பார்க்கிருள். தன் செய்கையை எண்ணி சிரிப்பு குபீரிட்டு வருகிறது. பாக்கியம் அவளை விநோதமாகப் பார்க்கிருள்.

அவள் நடையில் துள்ளல், ஆடையின் மடிப்புகளை நீவி விடும் விரல்கள். மார்பில் வந்து விழும் பின்னல்.

அன்றும் அவள் பாடசாலை வரும் நேரமாக தற்செயலாக வந்ததென அவன் எதிர்ப்படுகிருன். இருவருமே ஒருவரை ஒருவர் சந்திக்கவென சந்தர்ப்பம் பார்த்து வந்தும், நேரில் சந்திக்கும் போது ஏதோ விருப்பமில்லாமல், எதிர்பாராமல சந்திக்க நேர்ந்தது போல், இதை நாம் விரும்பவில்லை என்றுணர்வு தோனற உதட்டைப் பிதுக்கினுலும் கால்கள் அசையாமல் நின்று அவர்களின் கள்ள நெஞ்சைக காட்டிக் கொடுத்து விடுகின்றது.

'புனிதம்.... நேற்று நண்பர்களுடன் நான் நடந்து கொண்டதுக்கு என்னை மன்னித்துவிடு... '

அவள் உருகிப்போய்விடுகிருள். ஆ ஞ ல் வா ய சை ய வில்லே. இமைகள் மட்டும் படபடக்கின்றன.

'ஏன் புனிதம்... பேசமாட்டியா? நீ என்ன ஊமையா...?' - அவள் கலீரிட்டாள்.'

''அப்பாடா... எல்லாரும் உன்னே அழகி என்றுதான் சொன்ஞங்கள். வாய்பேசமாட்டாய் என்று சொல்ல மறந்து விட்டினமோ என்று பயந்து விட்டேன்.''

''என்ன பேசுவது... ? — துடுக்காகக் கே ட் கி ரு ள். அவனுக்கும் திகைப்பு.

''வந்து நேற்று நண்பர்கள் பேய்த்தனமாக நடந்து கொண்டதற்கு மன்னிப்புக் கேட்டேன். நீ ஏதும் பதில் சொல்லவில்லே ...''

''நான் என்ன சொல்வது உங்கட நண்பர்கள் .... உங் களேப்போல ... ஊரில பெரிய வீட்டுப்பிள்ளே.. ஏழைகள் நாங்கள் என்ன சொல்வது ..... கோவிப்பது.....?

அவன் தருமசங்கடத்தில் நெளிகிருன்.

''அவங்கள் நேற்றுக் கொஞ்சம் ஓவர் இதுக்கெண்டு வந்தவங்கள்.. ... கட்டுப்படுத்த முடியவில்லே ... அந்த நேரம்பார்த்து நீ வரவும்...... நிலேமை மோசமாய் போய் விட்டது.....''

''அதுக்கு நீங்கள் ஏன் கையைப்பிடிச்சு இழுத்தனீங் கள்......? அதாலதான் அவங்கள் அப்படி நடக்க முயன்ற வங்கள் ..''

''ஒருவேளே அவங்களேப்போல நானும் உம்மட அழ கில போதையேறி... ''

''இப்படித்தான் கொழும்பில அழகான பெட்டையளேக் கண்டா கையைப்பிடிச்சு இழுக்கிறனீங்களோ.. ...''

''அதெப்படி... முதுகு 'பெண்'டை நிமித்திப்போடுவாங்கள். முந்திமாதிரி இப்பவெல்லாம் சிங்களப்பெட்டைகளோட சேட்டை விடேலாது.''

''அப்ப இங்க நாங்கள் என்றால் உங்களுக்கு ஒரு இளக்காரமோ...''

— பேச்சு விபரீதமான பாதையில் சென்று கொண்டிருப்பதை இருவருமே அறியவில்லை. விவாதப்பொருளும் உறைக்கவில்லை. விவாதமே முக்கியமாகப் பட்டுக்கொண்டு வார்த்தைகளால் - அரசியல் வாதிகளைப்போல் மோதிக்கொள்கின்றார்கள்.

''இளக்காரமென்ன இளக்காரம்...... எங்கட ஊரில இதெல்லாம் சகஜம் தானே...... ஏதும் புதிசே...'' என்ன இருந்தாலும் நீ எங்கட குடிமகன் குட்டியன்ர மகள்தானே... ஏதோ பெரிசாக் கணக்கடிக்கிறாய் '' அவனது சொந்த சுபாவம் வார்த்தைகளாக வெளிவர, அவனது மனதில் முகிழ்த்த முதல் மலர் தனது இதழ்களை பொலபொலவென உதிர்குன்றன

'திமிர்...... சாதித்திமிர் ... படிச்சவனும் .....'

'ஹோ!......' எனக்கதறிக்கொண்டு வருகிறாள்.

- அன்றிலிருந்து ஆண்வர்க்கத்தின் மேல் அதுவும் இந்த பணக்காரவர்க்கத்தின்மேல் வன்மமாகப் படிகிறது...

'தங்களது மன அரிப்புகளுக்கும், எடுப்பாந்தரங்களுக்கும்' இந்த மக்களின் உடலை, உணர்வைக் கொஞ்சமும் மதிக்காமல், சாக்கடையில் போட்டுருட்டும் இந்த உயர்சாதிமான்கள் மீது, இவர்களின் வெள்ளை வேட்டி வேசங்களை அபலமாக்கவேண்டும் என்ற கொப்புத் தீயாக ஜுவாலிக்கிறது.

தூரத்தே, பஸ் வரும் ஓசை கேட்கிறது.

நிமிர்கிறாள் தூரத்தே பஸ் வந்துகொண்டிருக்க, அந்தப் பார்வைத் தெறிப்பில் மூலைத் தேநீர்க்கடை வாசலில் நாகன் நின்று கொண்டிருப்பது தெரிகிறது.

# 3

பாக்கியத்தின் முகம் மெல்ல மலருகிறது.

— தூரத்தே, உடையார் வருவது பனங்கூடலிடையே தெரிகிறது. வெள்ளைவேட்டி, வெற்று மேனியில் சால்வை, விபூதி, சந்தணப்பொட்டில் குங்குமம் பளபளக்க, அந்த நெடிய உருவம் வயதுக்கப்பாற்பட்ட கம்பீரத்துடன் வரும்பொழுது அவள்மெய்சிலிர்த்துப் போகிருள். அவளால் அவரை எந்தச் சனநெரிசலிலும், இருட்பொழுதுகளிலும் கூட சுலபமாக இனம் கண்டுகொள்ள முடியும். அவளும சரி .. குட்டியனின் குடும்பமும் சரி அந்தளவிற்கு ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டவர்கள்.

உடையார் பரம்பரையின் பெயர்தான் எஞ்சியிருந்ததே தவிர, இன்றுஅவர்கள் பரம்பரையினர் எல்லாம் பல்வேறு அரசாங்க உத்தியோகங்களில் தான் உயிர் வாழ்கின்றனர். கொழும்பு மாநகர் சந்தடியில் அவர்களும் சிறுதுளிகளே. விசேட கவனிப்போ... வரும்படியோ கிடையாதவர்கள்.

சித்திரைமாத பனைக்கொடியேற்றத்திற்கோ, அல்லது நல்லூர்க்கந்தன் கொடியேற்றத்திற்கோ, வீட்டுப்பெண்பிள்ளைகளினது விஷேசங்களுக்கோ விடுப்பு எடுத்து ஊருக்கு வந்து நிற்கும்போது தங்களது 'பழம பெருமை' வாசனை வீசும் கிழிசலை அணிந்து கொண்டு வீருப்பாக நடமாடுவார்கள். ஊரவர்கள் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாலும் பழங் கிழிசல்களிடையே பழையவர்களைக் கண்டு வணங்கி வழிபடும் வயோதிபர்களும் இல்லாமலில்லை. அதுகூட ஒரு அற்ப சுகமாகப்படுகிறது இவர்களுக்கு.

கொழும்பில் உடையார் அரசாங்க உத்தியோமாக இருக்கும் பொழுது, அவரது மனைவியின் அண்ணன் முதலியார் தான் அவருடைய நிலபுலன்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஒருமுறை விடுப்பில் ஊருக்கு வந்த பொழுது 'கணக்கு வழக்கை'ப் பார்த்தபோதுதான் முதலியார் எக்கச்சக்கமாக சொத்தை விழுங்கி ஏப்பம் விட்டிருப்பது தெரிய ...

வீடு அமர்க்களமாயிற்று.

ஆரம்பத்தில் அவரின் மனைவி அவருக்கு ஆதரவாகப் பேசினாலும், விவகாரம் உச்சக்கட்டத்தை அடைந்தபோது தன் தமையன் பக்கம் சார்ந்து விட்டாள்.

''என்ன பெரிய குதியாட்டம் போடுறியள். எல்லாம் அண்ணன் தந்த சீதனம் தானே ... அதையும் நீங்களே வயல் வாய்க்கால் . நீச்சு நிலம் எண்டு பாத்தனியள் எங்கட சொத்தை ஒண்டைப் பத்தாக்கித் தந்தது போதாதெண்டு...... இப்ப குத்தரியம் கொட்டுறியள் .... ''

— என்று கதையையே மாற்றிக் கத்தத் தொடங்கவே அவர் திகைத்துப்போய் விடுகிருர்.

'என்ன மனுஷி இவள்?'

''என்னடி சொல்லுருய்...? உன்ர கொண்ணன் ஊரை வளைச்சு உலையில போட்டது காணுதெண்டு உன்ரை சொத்

தையும் கொள்ளையடிக்கிருன். நீ என்ன அவனுக்குத்தாளம் போடுறியா .....?''

''நீங்களும் கொழும்பில உத்தியோகம் பாக்கிறன் ... பாக்கிறன் எண்டு சொல்லி என்னத்தைக் கொண்டுவந்து போட்டனியள்......? உங்கட பிச்சைக்காரக்காசு மணிஓடரை நம்பித்தான் இங்க நாலு சீவன் வயித்தைக்கழுவுதுகள் எண்டு நினைப்பே...... அண்ணன் இல்லாட்டாத் தெரியும் தம்பி பாடு ...'' — என்று ஏகத்தாளமாகக் கூறுகின்ருள்.

அவருக்கு ஆத்திரம் உச்சிக்கு ஏறுகிறது.

''தேவடியாள்...... வேசை...... அவளுடைய வாய்க் கொழுப்பைப்பார்...... ஆரோடை கதைக்கிறம்...... என்ன கதைக்கிறம் எண்டதை எப்பனெண்டாலும் யோசிச்சுக்கதைக் கிருளா......? நான் அந்தக் கார் கராஜுகளிலும், திண்ணை அடைப்புகளிலும் ரூம் எண்டு சொல்லிக்கொண்டு, தீவாங் கள் நடத்திற சோத்துக்கடையளில வெந்தது பாதி ... வேகாதது பாதி எண்டு திண்டு...... வயித்தில அல்சரையும் வாங்கிக்கொண்டு உங்களுக்காக உழைச்சு அனுப்பினு.. ... பாத்தியா இந்தப் பறத்தேவடியாள்...... என்ன சொல்லு ருெண்டு......?''

ஓம்... ஓம்... உம்மட உழைப்பின்ரை லச்சணமும், நீர் காசு அனுப்பிற லச்சணமும் இங்க எல்லாருக்கும் தெரியும்... அங்க நீர் சிங்களத்தியளோட வைச்சிருக்கிற சகவாசமும், உழைப்பெல்லாத்தையும் அவளவைகளுக்கே தாரை வாக்கி றதும் எனக்குத்தெரியாது எண்டு உமக்கு நினைப்புப்போல... உம்மட திருவிளையாடலே இஞ்ச நேத்துப்பிறந்த குஞ்சு குரு மானைக்கூட கேட்டுப்பாரும். அதுகள் கூடச்சொல்லும் ''

குழந்தை குட்டிகள் வேடிக்கை பார்க்க, வீட்டுவாசலால் தெருவில் போற வாற சனங்களும் விடுப்புப் பார்க்க, அவ ரால் தாங்கமுடியவில்லை ஆத்திரம் அவர்களமேல் தாவு கிறது.

"இங்கின யாரும் உரிஞ்சுபோட்டு ஆடுகினமே. போங்கடா ... வேடிக்கை பார்க்க வந்திட்டினம்... "

"எடியேய்...... உனக்கு உன்ரை புருஷனைவிட, கொண்ணன் தான் பெரிசெண்டா இப்பவே அங்க போய்விடு...... இனி ஒருகணமும் இங்க நிக்கக் கூடாது...."

பத்ரகாளியாடுகிறுள்.. ... பேய்ச்சிரிப்பு சிரிக்கிறுள்...

— "என்ன சொன்னனீர்...? ஏன்ஞெருக்காச் சொல்லும் பாப்பம்... ஆரு வெளியால போறது...... ஆற்ற வீட்டிலிருந்து ஆர் போறது...... இது என்ன நீர் கொண்டு வந்த ... அல்லது நீர் சம்பாதிச்சுக் கட்டிய வீடா விரலை மடக்கிச் சொல்லும் பாப்பம்... ஏதோ உடையார் பரம்பரை...... காசு பணம் இல்லாட்டியும் நல்ல சாதி சனமுள்ளாக்கள் எண்டு சொல்லித்தான் உமக்கு என்னை என்ர அண்ணன் ... ஆசை அண்ணன் கட்டிவைச்சவர்... நீர் உம்மட உத்தியோகப்பெருமை எண்டு எண்ணிப்போட்டீர் போல ..... நீர் வரேக்க ஒரு சுண்ணும்புக்கட்டி சொண்டு வந்தனீர் எண்டு சொல்லும் பாப்பம் ....."

— "இந்த அறுவாளின்ர வாயைப் பாரன் ..... உன்ரை வாயைத் தைக்காமல் விடமாட்டன்டீ! "

- என்று அவர் பாயவும், முதலித்தம்பி உள்ளே நுழையவும் சரியாயிருக்கிறது.

"என்னமச்சான் இது ... அவளுக்குச் சரியாகப் பேசிக்கொண்டு .. .. பொம்பிளையளோட கணக்கப் பேச்சு வைக்கக்கூடாது...... பெஞ்சாதி எண்டாலும் கூட...... அதாலதான் அவையள் ஆம்பிளையளிட தோளில்ஏறப்பாக்கிறது "

— முதலித்தம்பி சொல்லிக் கொண்டிருக்கவும், 'சரிதான் போடா ... நீயும் உன்ரை தங்கச்சியும் .... ' என்றபடி கோபத்துடன் வெளியேறுகிருர். அவரது ஆத்திரத்தை சங்கடப்படலை பலத்த சத்தமிட்டு மோதி, ஆடி மூடிக்காட்டுகின்றது.

''மச்சான்! மச்சான்!... '' - முதலி கூப்பிடுவது காதில் விழுந்தும் விழாத பாவனையில் தெருவில் நடக்கத் தொடங்க ...

''நீங்கள் விடுங்கண்ணே... எங்கபோருர் எண்டு பாப்பம். இந்தக் கிராமத்தில இந்த வீட்டை விட்டா போக்கிடம் ஏது ? இந்தவீட்டில அவர் இல்லையெண்டா யாரும் சீந்துவினமே அவரை '' என்ற மனைவியின் குரல் அவர் பிடரியைப் பிடித்துத் தள்ளுகிறது.

அவருக்கு ஊர் உலகத்து மேலே ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது.

'எந்த ஒரு மசிராவது என்ன ஏது எண்டு விசாரிச்சுதுகளா ? எல்லாம் கூடிநிண்டு வேடிக்கை பாக்குதுகள்... அதுகள்தான் பிறத்தி ... எனக்குப் பிறந்ததுகள் ... 'அதுகள் கூட, அப்பாவை ஒண்டும் சொல்லாதை அம்மா' எண்டு ஒரு வார்த்தை .... ம்கும் அப்பா எண்டு ஒருசொல்... அழுகை .... ஒண்டுமே கிடையாது. எல்லாம் நன்றி கெட்டதுகள்...... இதுகளுக்கெண்டு நான் ஏன் கொழும்பில கிடந்து கஷ்டப்பட வேண்டும் ... நான் அங்க நிக்கிறதால தான் உவள் எல்லாத்தையும் தன்ரை தமையனுக்கு தாரை வார்க்கிருள்.

நானும் ஊரோட நின்று நிலபுலத்தைப் பார்த்தால் எந்தமசிர் என்னை உச்சமுடியும்?

அன்று, அந்த இருண்ட பொழுதில் .... எங்கெங்கோவெல்லாம் அலைந்து களைத்துப்போய் ... குட்டியனின் கள்ளுக் கொட்டிலில் வந்து விழுந்தபொழுது குட்டியனும், பாக்கியமும் பதறிப் போய்விடுகிருர்கள். அந்த மேட்டிமைக் குலத்திலிருந்து யாரும் கள்ளுக்கொட்டிலுக்கு வந்து கள்ளுக் குடிப்பதில்லை அவர்களுக்கு வேண்டுமென்ருல் ஆளை விட்டு தங்கள் வீட்டுப் பனைகளிலேயே தனிக்கள்ளாக ... தனிமரக்கள்ளாக... இனிப்புக்கள்ளாக இறக்கி, இறைச்சி...

இருல் பொரியல்...... பெருநண்டுச் சம்பல், கணவாய்ப் பிரட்டல் என்று ஊரறியாமல்...... பகிரங்க ரகஸ்யமாக... குடிப்பவர்கள் ...

அப்படிப்பட்ட பெரியமனுஷன் வந்து விழுந்து கிடக்கிருனே...... நாளைக்கு ஊரறிஞ்சால் எங்களை என்ன செய்யுமோ... ?

ஆனல் உடையாருடைய பிடிவாதம் தான் அந்த இருட் பொழுதிலே வெல்கிறது.

நட்சத்திரப் பொட்டுக்கள் வானத்திலே மினுமினுக்கும் அந்த இரவிலே குட்டியன் பனையேறி இறங்க வேண்டியதாயிற்று.

அன்று ஆரம்பித்த பழக்கம். இன்றுவரை கொண்டாடப்படுகிறது. முதலில் ஊருக்கு ... அவர் மனைவிக்கு..... முதலிக்குக்கூட அதிர்ச்சியாக...... அவமானமாகத்தானிருந்தது. அவரைத் திருத்த எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். முடியவே முடியவில்லை. 'அந்தாள் கொழும்பில நாலு சாதிகளோடும் பார் கிளப் எண்டு கூடிப்போய்க் குடிக்கிற பழக்கம். வீட்டில குடிக்கிறதில அதுக்குத் திருப்தியில்லை அதுதான் கள்ளுக்கொட்டிலுக்கே போய் வரத் தொடங்கீட்டுது...... இப்ப ஊர் உலகம் எவ்வளவு மாறி வருகிறது .. அதுக்கேத்தாப்போல் அதுவும் நடக்குது '' - என்று சப்பைக்கட்டுப் பேசி ஊர்வாயை அடைக்க, ஊர் வாயைப் பொத்திக்கொண்டு சிரிக்கிறது.

உடையாரும் ரோஷத்தோடு கொழும்புக்குப் போய் வேலையை ராஜினமாச்செய்து விட்டுத் திரும்பிவந்து ஊரில் ஒரு கதையைக் கணக்காக அவிட்டு விட்டார்.

''லாங்குவெச் பொலிசியா... சிங்களம் படிக்கவேணும் மொழிக்கொள்கையில தான் வேலையை விட்டு விட்டு வந்தனுன். அதென்ன அவன்ரை மொழியைப் படிச்சே நாங்க

உத்தியோகம் பாக்கவேணும். அந்த வெள்ளைக்காரனிட்ட ஆங்கிலம் படிச்சு வேலை செய்தம் அது பவர் தான். செல்வாக்குத்தான். போயும் போயும் இவன்ரை மொழியைப் படிச்சே வேலைபார்க்க வேணும். சிங்களத்தைப் படிச்சிட்டு லண்டனுக்கு எங்கட பிள்ளையள் போய்ப் படிக்கேலுமோ, பட்டம் பெறேலுமோ ?''

அவரின் வாய்ச்சாதுர்யத்தை மெச்சி, சில பெரிய மனிதர்கள் அவருக்கு பாராட்டுவிழா கூட எடுத்தார்கள். இதனால் அவரது இழந்த பெருமைகூட மீட்கப்பட்டு விட்டது. அடிக்கடி கிராமத்தேர்தல், சங்கக்கடை தலைவர் பதவிகளில் இப்பெருமை பேசப்பட்டது.

பிறகென்ன? அவரைக் கொட்டிலில் காணு விட்டால் தான். -

''ஆள் எங்க காணேல்ல காய்ச்சல் ஏதுமோ ?'' என்ற விசாரணைகளும் பிறக்கத் தொடங்கிவிட்டன.

அவர் நெருங்கி வரவர

''ஓம்.... ஓம்... உடையார் தான் வாறது .. நான் நினைச்சது சரிதான்'' – என்று தன்னில் திருப்திப்பட்டுக் கொண்டாள். அவளால் அவரை எந்த இருளிலும்... சன நெரிசலிலும் இனம் காணமுடியும். அவரால் அவர்களுடைய பொருளாதாரவசதி மட்டுமல்ல. ஓரளவு அவர்களின் சாதி சனங்களிடையே 'உடையார் வீட்டுக் குடிமகன்' என்ற பெயரும் எழுந்து, அவர்களை உயர்த்தி வைத்திருந்தது.

உடையார் படலையைத் திறந்து உள்ளே வருகிறார். பாக்கியமோ உள்ளே ஓடிச்சென்று அவர் வழக்கமாக உட்காரும் கதிரையை எடுத்து வருகிறாள். தானே தனது கையால் பிளாவையும் முட்டியையும் கொண்டுவந்து அவர் கையில் பிளாவைக் கொடுக்கிறாள்.

அவள் செயல் ... அசைவுகள் அனைத்தையும் வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

''என்ன உடையார் அப்படிப் பாக்கிறியள்''

' ஒன்றுமில்லை பாக்கியம் ... நீயும் குட்டியனுமில்லாட்டி நான் என்ன தவிப்புத் தவிச்சிருப்பன் எண்டு நினைக்கிருய்......?''

''ஏன் அப்படிச் சொல்லுறியள்? ஏன் உங்களுக்கு எனைகுறை சொத்துப்பத்தில குறையா? செரந்தக்காரரில குறையா? உங்கட மச்சான் தானே எங்கட முதலியாரும்......

''ஓம்... ஓம்...... எல்லாரும் கள்ளங்கள். எப்படா நான் கண்மூடுவன். சொத்தில கைவைக்கலாம் எண்டு காத்திருக்கிற பிணந்தின்னிக் கழுகுகள்... சரி... சரி உந்தக் கதையேன் இப்ப...... கள்ளை ஊத்து ...''

— அவர் கள்ளருந்துவதை ஏதோ கிடைத்தற்கரியபேறு கிடைத்தது போல் பாக்கியம் பார்த்துக்கொண்டிருக்கிருள்.

''நீங்களும் வரவரத் தளந்துகொண்டு வாறியள் உடையார். உடம்மை எப்பனெண்டாலும் கவனிக்கிறதில்லையே...... பாரன் கழுத்தெலும்பெல்லாம் வெளியில தெரியிறதை.... ''

''எது வெளியில தெரிஞ்சா என்ன ...? உள்ளபோனலென்ன ...? நீ பேசாம கள்ளை ஊத்து...''

' போதும் குடிச்சது போதும் வீட்டை போய்ச் சாப்பிடுங்க ''

:இந்த விசர்க்கதையளை விட்டிட்டு நீ ஊத்தப்போறியா'' என்றவாறு அவள் கையைப்பற்றி இழுக்கிருர்.

## 4

வந்து நின்ற 'ரவுண்' பஸ்ஸிலிருந்து முதலியாரும், அவருடைய எடுபிடி முத்துவும் கீழிறங்குகிறுர்கள். முதலியாரின் கால் செருப்பு இறங்கும் வேகத்தில் தெறித்து 'கானி'ற்குள் விழுகிறது. பஸ் புகையைக் கக்கிக்கொண்டு புறப்படவும், முதலியார் தார்சூடு பொறுக்க முடியாமல் தவித்தபடி 'முத்து ஓடிப்போய் செருப்பை எடடா! நிக்க முடியாமல் கால் பொரிஞ்சு போச்சு...... ஓடு ... ஓடு ' என்று கத்தவும் முத்து வெறும்காலுடன் கானில் இறங்கி, செருப்பை எடுத்து வாயினுல் ஊதி, தூசி தட்டி, கணுக்காலுக்கு மேலாகக் கட்டிய வேட்டியின் தலைப்பை உயர்த்தித் துடைத்துவிட்டுக் கொடுக்கிறுன் . காலில் செருப்பை அணிந்துகொண்டு, இப்போது தலைச்சூடு பொறுக்க முடியாமல் 'படக்' என்று குடையை விரித்துக்கொண்டு தெருவிலிருந்து விலகி, தோட்டவெளியில் இறங்குகிறுர். முத்து பின் தொடருகிறுன்.

அங்கங்கே தோட்டங்களில் ஆண்களும், பெண்களுமாக வேலை செய்துகொண்டிருக்கின்றனர். பெண்கள் குறுக்குச் சேலைக்கட்டும், வெற்றுமேனியும், ஓலைப்பெட்டித் தொப்பியுமாக களை பிடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆண்கள் வெயிலில் வியர்வை முதுகெங்கும் வைரமாக மின்ன தறை'யை சாறிக்கொண்டிருக்கிறார்கள். மன்னர்களுக்கு வைரங்கள் முடியில் மட்டும்தான், ஆனல் தொழிலாளர்களுக்கு உடலெங்கும் வைரம் ..... ஏன் உள்ளமும்தான்.

''பாத்தியாடா முத்து! இந்த எல்லையிலிருந்து அந்த அந்தம் வரை எங்கட தோட்டம் தான்... எங்கட பாட்டனுக்குப் பாட்டன் மணியகாரனாக இருந்து...... பின் மணியகார பதவி பரம்பரை பரம்பரையாகக் கைமாறி இந்தக் கிராமத்தையே கட்டியாண்ட வப்சம் ... இப்ப என்னடா எண்டால் ஒண்டுகூட மதிக்குதுகளில்லையே...... அங்க கச்சேரியில பாத்தியே ... அந்தக் கிளாக்குப் பெடியன் பேசிய பேச்சை...... ஆராயிருந்தாலும் கியூவில வரட்டாம்... நேற்றுப்பெய்த மழைக்கு முளைச்ச காளான்கள்......'' - ஆத்திரத்தில் குமுறுகிறார்.

- முத்து மௌனமாகப் பின் தொடருகிறான்.

''இஞ்சைபார்... எங்கட தோட்டப்பயிரெல்லாம் நராங்கிப்போய்க் கிடக்க ..... அங்கபார் அந்தத் தோட்டங்கள்...''

— தூரத்தில் அந்த இரு தோட்டங்களும் பச்சைப் பசேலென அலையெறித்துக் கொண்டிருக்கின்றன.

''அதோ ? அது குட்டியனின்ரையும், கந்தப்புக் கமக்காரனின்ரையுமெல்லே அவங்கள் தங்கட தோட்டங்களில ஆடு மாடாய் .... உச்சி... மதியம் எண்டு பார்க்காமல் பாடுபடுங்கள் ... எங்கட தோட்டங்களுக்கு பராமரிப்புப்போதாது... ஆராவது ஒராள் நிண்டு தோட்டம் துரவைப் பார்த்தால் தான் எல்லாம் சரியா வரும் ... இல்லாட்டி இப்படித்தான்...''

''நீ என்ன சொல்லுறு ?''

''இல்ல ... சின்ன ஐயாவாவது... வந்து நிண்டு மேற் பார்வை செய்தால்... வேலையாட்கள் கள்ளம் செய்யாமல் வேலை பாப்பினம் ... சின்னவரும் வீட்டில சும்மா தானே நிக்கிறார் ''

அவர் சிரிக்கிறார்.

''பட்டணத்துக்குப் போய்ப் படிச்ச பெடியன்...... தோட் டம் துரவில போய் இறங்கெண்டால் இறங்குவானே ...? அந்த வேலையெல்லாம் உங்களைப் போன்றதுகளுக்குத்தான் சரி ... அவன் ஏன் கல்லிலும் முள்ளிலும், சேற்றிலும் சக தியிலும், வெயிலிலும் மழையிலும் கஷ்டப்படவேண்டும்...''

முத்துவுக்குப் பற்றிக்கொண்டு வருகிறது.

'திமிர்... நாங்கள் கஷ்டப்பட்டு உழைக்கவேணும். தாங்கள் சும்மா இருந்து சுகமாக உண்ணவேணும் .' என்று மனதிற்குள் பொருமிக் கொள்கிறான்

''முத்து என்னடா பேசாமல் வருகிறாய்...... உவன் குட் டியன்ரை தோட்டக்காணி ஆற்ற எண்டு நினைக்கிறாய்......? அதுவும் எங்கடதான்...... முந்தி அவன்ரை குடி படையள் எங்கட குடும்பத்துக்குப் பரம்பரையாக உழைச்சதுக்காக எங்கட முப்பாட்டன் அவங்களுக்குச் சும்மா கொடுத்தது தான் இது .....''

''அப்படியே ஐயா ..... எனக்கு இப்பதான் நீங்கள் சொல்லித்தான் தெரியுது. சோக்கான நிலம்...... எப்படித் தான் அந்தக் காலத்தில கொடுக்க அவையளுக்கு மனம் வந்ததோ......?'' நக்கல் தொனியில் கேட்கிறான். அதைப் புரிந்து கொள்ளாமல் —

''போடா...... விசரா...... அப்படி நல்ல நிலமா இருந் திருந்தாக் கொடுத்திருப்பினமே...... அதுவும் எங்கட பரம் பரை...... சொத்துச் சேர்க்கிற பரம்பரை...... சும்மா விட் டுக் கொடுக்குமே...... அப்ப இங்க எல்லாம் அவ்வளவும் கல்லும் கரடும் தான்...... அதோட எங்கட வளவுகளுக்குப்

போற வழியில கிடந்ததால அவையளுக்குத் தானமாகக் கொடுக்கிறதாகக் கொடுக்க... ஊருக்குள்ள நல்லபேர்... அதோட எங்கட போற வாற வழியும் கிளியராயிட்டுது... எங்கட பாட்டன் முப்பாட்டன்கள் இதுகளில வலு விண்ணன்கள் .. ''

''வெறும் கல்தறையை ... கல்லுடைத்துத் தறை நிலமாக்கியது இவங்கள் தானு...... நல்ல உழைப்பாளிகள் தான் ஐயா ... கஸ்டப்பட்டாலும் மண்ணைப் பொன்னுக்கி விட்டாங்கள்... ''

''எண்டாப்போல எங்கட நிலத்தை இப்படியே சும்மா விட்டிடுறதா...? ஏதும் கொஞ்சம் காசைக் கையில கொடுத்து எப்படியும் திருப்பி எடுத்துப்போட வேணும் .. முந்தி என்ன உறுதி எழுதியே கொடுத்தது? வெறும் வாய்ப்பேச்சுத் தானே...... இன்னும் எங்கட தோம்பில தானே காணி எழுதிக் கிடக்குது ''

''என்ன முதலியார் சொல்லுறியள்......?''

''எட... மடையா இந்த ரெண்டு காணியிலும் எனக்கொரு கண் கண்டியோ... ரெண்டையுமெடுத்திட்டால் எத்தனை அற்புதம் செய்யலாம் தெரியுமே..... ''

''அதுக்கு... குட்டியன்... கந்தப்புக்கமக்காரன் இரண்டு பேரும் சம்மதிக்க வேண்டுமே......?''

''அதெல்லாத்தையும் யோசியாமையே நான் இருப்பன்...... கந்தப்புக் கமக்காரனுக்கு இப்ப கொஞ்சம் பண நெருக்கடி... மகனும் படிச்சுப்போட்டு வேலையில்லாமல் வந்திருக்கிருனும்...... மகளும் கலியாணத்திற்குக் காத்திருக்கிருள்...... இந்த நேரம் பார்த்து, பேசிறபடி பேசினுல் நிலம் கையுக்க வந்திரும்''

''அப்ப குட்டியன்ரை காணி......''

''அந்தக் கதையைவிடு...... அதைப் பிறகு பாப்பம். குட்டியனைக் கேட்கிற விதமாகக் கேட்டால் தந்திட்டுப்

போருன்... அங்க பாத்தியே கந்தப்பு மட்டும்தான் வயலில வேலே செய்யிருன்...... இப்ப மெல்லமா ஒரு கதை விட்டுப் பாப்பம்... ''

— இருவரும் கந்தப்புவின் தோட்டத்தை நோக்கி நடக்கின்ருர்கள்.

தூரத்தில் அவர்கள் இருவரையும் கண்டவுடனேயே கந்தப்புவின் மனம் பதகளிக்கத் தொடங்குகிறது. 'அறுவான்ர கண் கொள்ளிக்கண் நாக்கும் அப்படித்தான் .... கரிநாக்கு ... அவன் என்னத்தைச் சொன்ஞலும் அப்படியே எரிஞ்சு போகும்...... எதுக்கு வாருன் இந்தப் பொரியிற வெய்யில்ல...'

''என்ன கந்தப்பு...... தோட்டம் துரவுகள் எல்லாம் எப்படியிருக்கு ?''

''ஆரு .. ஐயாவே...... என்ன இங்கால இந்த வெய்யில்ல ...''

''தோட்டக்காரங்கள் வெயில...... மழையப் பார்த்தா முடியுமே? எங்கட காணிகளேப் பாத்துக்கொண்டு வாறம்... அப்பதான் சொல்லுருன் இந்த முத்து...... கந்தப்புக்கமக்காரன்ர காணியும், குட்டியன்ர காணியும் தான் எங்கட காணிகளுக்குக் குறுக்க கிடக்கு எண்டு ..... நானும் இப்பதான் அதுகளே யோசிச்சன் ...''

கந்தப்பு முத்துவை எரித்துவிடுபவன்போல் பார்க்கிருர்... 'ஐயோ...... நான் அப்படிச் சொல்லவில்லே' என்ற பாவனேயில் முத்து முதலிக்குப் பின்ஞலிருந்து சங்கடத்துடன் நெளிந்தவாறு சைகை காட்டுகிருன். கந்தப்பு புரிந்து கொண்ட பாவனேயில் ''அதுக்கென்ன செய்யிறது. நாங்களும் பிழைக்க வேண்டாமா... ? புள்ளே குட்டிகளே ஆளாக்க வேண்டாமா......? எல்லாத்துக்கும் இந்தக் காணித்துண்டைத்தான் நம்பியிருக்கிறம். ஐயாட காணியும் சுத்தியிருக்கிறதால எங்கட காணிக்கும் நல்ல அறுக்கை தான்......''
– என்று சமாதானம் கூறுகிருர்.

''நீ வலு கெட்டிக்காரன் ... எதையும் 'டக்'கெண்டு புடிச்சுக் கொள்ளுரு இதைத்தான் கற்பூரப்புத்தி எண்டு சொல்லுறவையள். நீயும் இன்னும் இந்த வயசான காலத்திலே கிடந்து இப்படியே முறிய வேணுமே ...?''

''அதுக்கென்ன செய்யிறது. நான் கேட்டுவந்த வரம் அப்படி .... கிடந்து முறியவேண்டியிருக்கு... ஒரு வயது மகனேயும், ஒரு குமர்ப்பிள்ளையையும் பெத்து வைத்துக் கொண்டு சும்மா விருந்து சாப்பிட ஆசைப்பட்டால் முடியுமே .....?''

''உப்புடியே நினேச்சு நினேச்சுத்தான் நாங்கள் எல்லாம் உருப்படாமல் போறம்......''

''நீங்கள் என்ன சொல்ல வாறியள் எண்டு.. எப்பன் விளங்கச் சொன்னுல் .. ''

''இல்லேக் கந்தப்பு ... இப்ப எல்லாராலும் வயல்...... காணி...... தோட்டம் எண்டு பராமரிக்கேலாது பசளே .. கூலி ...எண்டு எக்கச்சக்கமாக செலவாகுது...... விவசாயத்தைக்கூட எப்பன் வசதியானவங்கள் தான் செய்ய முடியுது...... மானம் பார்த்த பூமி...... மழை ஏமாத்திப்போட்டால் அவ்வளவுதான்... இப்ப முந்தினகாலம் மாதிரி இல்லே...... எல்லாமே விலேயேறிப் போய்க்கிடக்கு...''

''என்ன செய்யிறது......? எனக்கு மட்டுமே......? ஊரோட ஒத்த சங்கதி...... உதுகளேப்பற்றி நாங்க கவலேப்பட்டு என்ன பிரியோசனம் .. அரசாங்கமெல்லே கவனிக்க வேணும்...... நாங்களும் கடைசியில விசயம் தெரியாம கண்டது கடியதுகளே... சாதிக்கும்...... ஊர்ப்பெருமைக்கும் ..... சாராயம் தண்ணியளுக்குமாக பாளிமேந்துக்கு அனுப்பி வைக்கிறம்...... பிறகு அல்லல் படுறம்...... எப்பதான் எங்கடமக்களுக்கு இதெல்லாம் புரியப்போகுதோ ?''

முதலிக்கு ஆத்திரம் உச்சிக்கு வருகிறது.

'தோட்டம் கொத்திப் பிழைக்கிறதுகள்...... என்னபேச்சுப் பேசுதுகள்...... இதுகளின்ரை வாய்க்கொழுப்பை அடைக்காட்டி...... இதுகள் ஊரையே கெடுத்துப் போடுங்கள்... .. பிறகு.. ... எங்களால காலம் காலமாகக் கட்டிக் காத்து வந்த பழம்பெருமைகளை காத்திலதான் பறக்க விட்டிட்டு நாங்களும் இதுகளைப்போல ... இதுகளில ஒருத்தரைப் போலத்தான் வாழநேரும்......''

''கந்தப்புக்கு பட்டதாரி மகன் சொல்லித்தந்ததே இதெல்லாம் . அதுதான் நீயும் நல்லாப் பேசிரு .. அதெல்லாம் சரி ... கந்தப்பு கேக்கிறியோ நான் சொல்லுறதை எங்கடை மூதாதையள் என்ன சொல்லித்தந்தினம் எங்களுக்கு... பள்ளிப்படிப்பு புள்ளிக்குதவாது..... அது எப்பனெண்டாலும் பொய்ச்சுதே! உன்மகன் பெரிய படிப்புப்படிச்சுக் கிழிச்சான் .. உனக்கு ஒரு நாலுகாசு... உழைச்சுத் தந்தானே...... இப்பவும் நீதான் இந்த வேகாத வெய்யிலில நிண்டு அடிச்சு... அவனுக்கும் சேர்த்து சோறு போடவேண்டியிருக்கு...... நீங்கள் கொஞ்சம் விழிச்சு... ஊர் உலகத்தை...... நாட்டு நடப்பைப் பாருங்க ..... உங்களுக்குக் கொஞ்சமாவது விளங்கும்... .. அதை விட்டிட்டு இந்தக்காலப் பொடியள் அதையும் இதையும் சொல்லுறதைக் கேட்டுக் கொண்டு நீங்களும் ஆடுறியள் . உங்களில ஆரைப் பாளிமேந்துக்கு அனுப்பப் போறியள். முந்திக்கித்திப் போன அனுபவம் உண்டா...... எங்கட ஆக்களைப்போல இங்கிலீசு பேசுவினமா...... எங்கட எம்பிக்களின்ரை இங்கிலீசைக் கண்டு வெள்ளைக்காரங்கள் கூட மலைச்சுப்போய் நிக்கிருங்கள்...... இல்லாட்டி லண்டன் ... சிங்கப்பூர்...... இந்தியா... எண்டு இவங்களைத் தங்கட வழக்குப்பேசக் கூப்பிடுவான்களே...!

முதலியின் ஆத்திரத்தைக் கண்டு கந்தப்பு திகைத்து விடுகிருர்.

''ஐயா வந்த விசயத்தை விட்டுவிட்டு...... ஏதோ சொல்ல வந்தனியள்...... அதை மறந்திட்டியள் போல ..''

''ஓம்...... ஓம்...... நானும் பேச்சுப்பிராக்கில அயந்து போனன்.. இப்ப பட்டிணத்தில எனக்குத் தெரிந்த ஒருவரைப் பார்த்துப் பேசீற்று வாறன்... என்ன அரண்மனை மாதிரியான வீடு கண்டியோ...... மனுஷன் கால்மேல் கால் போட்டு நாலு பெரிய மனுஷன் வீடுதேடி வாற மாதிரி வாழுறுன்......''

''அதில என்ன ஐயா .....''

'அதைத்தான் சொல்ல வாறன்...... முந்தி அந்தாளும் உன்னைப்போல நிலத்தைக் கிண்டிக் கிளறிக் கொண்டிருந்தவர் தான்...... நாலைஞ்சு முறை வானமும் ஏமாத்திப் போச்சு ஆள் நல்லா நட்டப்பட்டுப் போச்சு...... கடன் தண்ணியும் தலைக்கு மேல போட்டுது ... நடக்கிறது நடக்கட்டும் என்று நிலபுலமெல்லாத்தையும் விற்றுச் சுட்டுக் கடனை அடைச்சார். கையில மிஞ்சின காசை யாழ்ப்பாணத்தில வியாபாரிகளுக்கும்...... முதலாளிகளுக்கும் வட்டியில் விட்டார்... இப்ப ஆள் ஓகோ எண்டு கொழிக்கிருர். எல்லாக்கடை முதலாளிகளும் அவரைக் கண்டா கையெடுத்துத்துக் கும்பிடுருங்கள். அவர் இழந்ததைப்போல் ஆயிரம் மடங்கு சம்பாதிச்சிட்டார். அவர் நிலத்திலேயே மாண்டு கிடந்திருந்தால் இதெல்லாம் நடக்குமே ...?''

''அப்ப நீங்கள் சொல்லவாறது என்னவெண்டால் ''

'ஓம்... ஓம்...... நீ நினைக்கிறதுதான்...... இந்த வேகாத வெயிலில நிண்டு சாகிறதைவிட, பேசாமல் காணியை வித்துப்போட்டு, வட்டியில விட்டியெண்டா ராசா மாதிரி வாழலாமே......''

'ஓம் ! ஐயா சொல்லுறதும் சரிதான்.. ...'' என்ற கந்தப்பு வாயில் கையைக் குவித்து, குட்டியனின் தோட்டப்பக்கமாகக் கத்துகிருன்.

''குட்டியன் ஒருக்கா ஓடிவா..... ஐயா எங்களுக்கு விடிவு ஏற்பட வழிசொல்லுருர் ... கெதியண வா... ''

குட்டியன் வரப்புகள் கால் இடற விழுந்தெழும்பி ஓடி வருகிருன்.

'ஐயா .....' - என்று முதலிக்கு வணக்கம் சொல்கிருன். 'ஹ-ஙெ'கார உறுமலுடன் அவர் ஏற்றுக்கொள்கிருர்.

''குட்டியன் கேட்டியே சங்கதியை...... நீயும் கேள் என்ன ஐயா...... குட்டியனுக்கும் இந்த யோசனையைச் சொல்லலாம் தானே...... உங்கட விருப்பம் என்ன.. ''

முதலியின் முகம் மலருகிறது. 'ஒரே கல்லில இரண்டு மாங்காய். வலுவில வந்து விழுருங்கள் ....'

''குட்டியன் ஆரு...... எங்கட குடிபடையில ஒருத்தன் தானே? அவன் நல்லா வாறதை நான் தடுப்பேனு......?''

''ஐயாவுக்கு எவ்வளவு நல்ல மனசு...... குட்டியன் ஐயா சொல்லுருர்...... காணி தோட்டம்...... துரவுகளை வித்துப்போட்டு அந்தக் காசை வட்டிக்கு விட்டா மாசம் முடிய முதலாம் திகதி 'டாண்' எண்டு வட்டிக்காசு வாசலில் வந்து நிக்குமாம்.. ...''

''ஐயா... ! - என்று அதிர்கிருன் குட்டியன்.

''முதலுக்கே மோசம் வந்திட்டா நாங்க என்ன செய்யிறது ...''

''அப்படி ஏதும் நடக்க நான் விடுவனே ...? நீ என்ன விலை சொல்லுருய்... ? உன்ரை தோட்டக்காணி எத்தனை பரப்பு.....? குட்டியன் நீ உன்ரை காணிபற்றி இங்கை பேசவேணும் ... நீ வீட்டை வா...... என்ன கந்தப்பு என்ன யோசிக்கிருய்

''யோசிக்க என்ன இருக்கு... நீங்கள் தான் எல்லாருக்குமாக எல்லாத்தையும் யோசிச்சு வந்திருக்கிறியள்... முதலுக்கே மோசம் வந்திட்டா எண்ட கேள்விக்கு மறுமொழி ஒண்டும் சொல்லேல்லையே எண்டு தான் ...... யோசிக்கிறன் ...''

''நீ அதுக்கொண்டுக்கும் பயப்படாத...... எல்லாத்துக்கும் நானிருக்கிறன் .. அப்படித்தான் ஏதும் நடந்திட்டால்... நீ என்னட்ட வா ... நான் என்ரை தோட்டத்தில வேலை தாறன் ....''

கந்தப்புக்கு வாய் கொள்ளாத சிரிப்பு.

''உந்தப் பதிலைத்தான் நான் எதிர்பார்த்தன் எங்களுக்கு இவ்வளவு புத்திமதி கூறுகிற நீங்களே .. அந்தத் தொழிலையும் செய்யலாமே...... ஆடு நனைகிறதே யென்று ஓநாய் அழுகிற கதைதான். எங்கடகாணி உங்கட கண்ணைக் குத்துகிறது. எப்படியும் இதுகளையும் கைப்பற்றிவிடவேணும் எண்ட பேரவா...... அதுக்கு எத்தனை தாளம் போடுறியள்... முதலியார்...... நீங்கள் ஊருக்குள் பெரிய மனுஷன் எண்டாப்போல எதையும் செய்யலாம் எண்டு கனவு காணவேணும்..... இந்த மண் எங்கட உயிர். எங்களுக்குச் சோற்றுப் பாலூட்டி வளர்த்த தாய்...... அவளை விற்கவா சொல்லுறியள்...... இன்றைக்குத் தாயை விற்க வழி சொல்லுவீர்கள்...... நாளைக்குப் பொண்டாட்டியை விற்க வழி சொல்லுவீங்க .. . போங்க ''

முதலியின் முகம் அவமானத்தாலும் ஆத்திரத்தாலும் சிவக்கிறது.

''உங்களுக்கு எல்லாம் இப்ப வாய் நல்லாக் கொழுத்திட்டுது .. சவம் காவிய சாதியள் ... இப்ப சிறபேச்சைப்பார் வாடா முத்து இவங்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்காட்டி... இந்த முதலி ஒரு பெரிய மனுஷன் எண்டு இருந்து பிரயோசனமில்லை ...''

— வேகமாக வரப்புகளை உடைத்துக் கொண்டு நடக்கிறார்.

# 5

அன்று யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் அவள் வந்திறங்கியபோது நேரம் மணி எட்டரை. தூரஇடங்களுக்குச் செல்லும் 'பஸ்'கள் சனங்களை அடைத்துக் கொண்டிருக்க, உள்ளூர்வாகனங்கள் சனத்திரள்களை கொண்டு வந்து கொட்ட நாலாபுறமும் சிதறி நகர்கின்றன, சுற்றியுள்ள ஹோட்டல்களில்,பக்திப்பாடல்களால் காலைச்சாப்பாட்டிற்காக சீர்காழி கோவிந்தராஜன், ஜேசுதாஸ் போன்ருேர் மக்களை அழைத்துக்கொண்டிருந்தனர் இவர்களுடன்போட்டிபோட்டுக் கொண்டு 'சுவீப்'வான் 'சுரண்டல் அதிர்ஷ்டத்துக்கு'நேத்து' ராத்திரி' இன்பமுனகலுடன் அழைக்க எங்கும் கதம்பச் தங்கள்... இந்தச் சப்தங்களை எவரும் காதில் வாங்கிக்கொண்தாகவும் தெரியவில்லை. ஆனல் தேவையாக இருக்கின்ற பாவனையில்... சப்தங்கள் ஒலிகள்.. பெருளற்ற... பொருள் விளங்காத .. இதுதான் நகரத்தின் நாடித்துடிப்போ ..?

வாகனங்கள் செல்லும் பாதைகளின் ஓரங்களில் ஈரொட்டு வியாபாரங்களும், பெட்டிக் கடைகளும் திடீரென முளைக்

கின்றன. பாதையைவிட்டு பாதையோர வியாபரிகளின் தட்டு முட்டுச்சாமான்களில் முட்டி மோதாமல் நடப்பதே பெரிய சிரமயிமாருக்கிறது.

திடீரென பஸ் ஒன்று குறுக்கே வட்டமிட்டுத் திருப்ப அவள் பதறியடித்துக் கொண்டு 'ரவுண் எபௌட்' க்கு முளைத்த சக்களத்தி போன்ற சீமேந்து மேடையில் பாய்ந்து ஏற .. எக்காளச் சிரிப்பொலி கேட்கிறது. ஏற்கனவே அங்கே ஏறி தஞ்சம் புகுந்திருந்த சிவநங்கை, சந்திரிகா அவளைச் சிரிப்புடன் வரவேற்கிறார்கள்.

'கவனம் பார்த்து ரோட்டை 'குரொஸ்' பண்ணுமப்பா... இப்ப கண்டபடி எல்லாம் ஓடுறாங்கள்... பத்தாததுக்கு மினி பஸ் 'முனிபஸ்' ஆக ஓடுது... '

பெரியகடை வீதியில் நடக்கிறார்கள். திடீரென்று சந்திரிக்காவின் குரல் ஒலிக்கிறது;

'' பாருமப்பா... இந்தப்படம் பார்க்கவேணும்... எண்டு எத்தனை நாள் எண்ணியிருந்தன்... ஞாயிறு போவமா... ?

எல்லாரும் தலைநிமிர்ந்து பார்க்கிறார்கள்.

ராணி தியேட்டரில்...... ஆட்டிஸ்ற் மணியத்தின் கை வண்ணத்தில் கமலஹாசன், ரஜனிகாந்த், ஸ்ரீப்பிரியா. ஆகியோர் 'இளமை ஊஞ்சலா'டிக் கொண்டிருக்கிறார்கள்.

''கஷ்டம்,. புதுப்படம் டிக்கெட் எடுக்கிறது..''

''ஆம்பிளையளுக்குத்தான் கஷ்டம். பெண்கள் எடுக்கிறது சுலபம்...''

– அவளுக்கு ஜெகனின் முகம் ஒருகணம் வெட்டித் தெறிக்கிறது முகம் இருளுகிறது. வெவெடக்கிறது.

''சரி...சரி போதும் முதலில் ரோட்டைப் பார்த்து நடவுங்க. இன்டைக்கு எல்லாரும் லேற்றாப்போறம்... 'பொஸ்' ஸிட்ட மண்டகப்படி வாங்கப் போறம் .''

எல்லாரும் அவளை வியப்புடன் ஏறிட்டுப்பார்த்துவிட்டு, வேகமாக நடக்கிறார்கள்.

பலகடைகள் இன்னமும் மூடப்பட்டே கிடக்கின்றன. புடவைக்கடைகள் தங்கள் இரும்புச் சுருக்குக்கதவை இழுத்துத் திறந்து கொள்கின்றன மஞ்சள் தண்ணியும், சாம்பிராணிப் புகையுமாக சிலகடைகள் மங்கலம் கொள்கின்றன. சிலகடைகளில் சுண்ணும்பு இலக்கமிட்ட 1, 2, 3 என பலகைகளை ஒவ்வொன்ருக 'கழற்றி அடுக்கிக் கொண்டிருக்கிருர்கள். டெயிலர் கடைகள்' தங்கள் வாசல்களுக்குத் தண்ணீர்தெளித்து, தெருவைக் குளுமைப்படுத்துகின்றன. 'சாப்புச் சாமான்' கடைகள் அவசரம் அவசரமாக வண்ண வண்ணக் கூடைகள்.. வாளிகள் 'பாத் டப்பு' கள் என பிளாஸ்டிக் சாமான்களை பரப்பி தெருவின் ஒருபகுதியையும் ஆக்கிரமித்து கடையின் பரப்பளவை அதிகரித்துக் கொள்கின்றன வண்ணக் குடைகள் தோரணங்களாக... புடவைக்கடையில் கண்ணுடிப் பெட்டிக்குள் ஒருஅழகி, தனது ஆடையை அவிழ்த்துப் புதுப்புடவை மாற்றிக் கொள்கிருள்.

'' பாத்தியாப்பா . இது தான் இப்பத்த லேற்றஸ்ட் சாறி... விலை என்ன தெரியுமே எண்ணூறு'' என்கிருள் சிவநங்கை

'' உந்த விலைக்குச் சீலை எடுத்துக்கட்ட முடியுமெண்டா ஏன் இந்தத் தையல் வேலைக்கு வரப்போறம் 'சிவநங்கை நீ இப்படிக் கனவுகாண்கிற வேலையைவிட்டு விடு ''

'' ஏனப்பா? . எங்களுக்கு வாழ்கையில்தான் இப்படியான ஆசைகள் நிறைவேருதென்ருல்... கனவிலயெண்டாலும் ஆசைகளை நிறைவேற்றிக்கொள்வதில் என்ன தவறு?''

'' என்ன புனிதம் சொல்லுறீர் .. கனவுகாணவே கனவுகாண வேண்டும் என்கிறீரா? ''

"எங்கட வாழ்க்கை அப்படித்தானேயப்பா இருக்கு கனவுகள் கூட வசதியானவர்களுக்குத்தான். ஏழைகள் கனவுகாணத் தொடங்கிவிட்டால் கட்டியுள்ள கந்தலிலிருந்து கற்புவரை காணமல் போய்விடும்" .. என்கிருள் புனிதம்.

எல்லாரும் அவளை வியப்புடன் பார்க்கிருர்கள்

"இண்டைக்கு புனிதத்தின் பேச்செல்லாம் ஒருமாதிரி இருக்கு . நாங்கள் கனவு கண்டால் அப்படியிருக்கலாம் ஆனல் உமக்கு என்னப்பா குறை...... அழகிலா ... நிறத்திலா...... அறிவிலா ... எதில குறை...? எங்கட கடைக்கு வாறவையெல்லாம் உம்மட தையல் வெட்டுக்காகத்தானே வருகினம். சாந்தியக்கா கலியாணம் கட்டிப் போப்போரு எண்டவுடனே முதலாளி எவ்வளவு துடிச்சுப் போயிட்டார்... நல்லவேளை அவவுக்குத் துணையாக இருந்து இருந்து அவவிட 'கட்டிங்ஸ்'சை பிடிச்சு வச்சிருந்ததால .. இப்ப உம்மை நம்பிக் கஸ்டமர்ஸ் வருகினம்... இல்லாட்டி சாந்தியக்கா புருஷனிட்ட பிரான்சுக்குப் போனதிலிருந்து கடையையும் பூட்டத்தான் வந்திருக்கும்... நாங்களும் பிழைப்புக்கு அல்லாட நேர்ந்திருக்கும் .... எல்லாரிலும் ஒருமாதிரிப் பாயிற .. பார்க்கிற குணம் கொண்ட முதலாளிகூட நீர் எண்டா வாலைச்சுருட்டிக் கொண்டு விடுகின்ருர் ...."

"உதெல்லாம் சரிதான். ஆனு . வாய்க்கும் வயிறுக்கும் எங்கட ஆசைகளுக்கும் ஏதாவது வழிகாட்டுதா ...? ஏதோ பெண்களாகப் பிறந்து... அதுவும் ஏழைகளாகப் பிறந்து விட்டால் ... சற்றுப் பார்வையாக வேறு இருந்து விட்டால்... இந்தத் திறமையையா இந்த முதலாளிகள் பார்க்கினம் .. அவ்வப்போது கொஞ்சம் பல்லிளித்து அசடு வழியாட்டி திருப்தி வருகுதில்லையே ...."

"மற்ற இளந்தாரிகள் எங்களைப் பெண்களாகப் பார்க்க மறுக்க, இந்த நடுக்கிணறு தாண்டியதுகள் தான் சபலத்தில் அலையுதுகள் . .. ஆனு ..."

''என்ன ஆறு... ?''

''நான் புழுகுக்காகச் சொல்லேல்லே ... நீர் பாருமன் ஒட்டாயம் உமக்கு நல்லதொரு வாழ்வு கிடைக்காட்டி ? அண்டைக்கு நீர் சீலை கட்டிக்கொண்டு சாந்தியக்காட கலியாணத்துக்கு வந்தீரே...? என்ன வடிவாயிருந்தீர் நான் மட்டும் ஆம்பிளையாயிருந்தா அண்டைக்கே உமக்குத் தாலி கட்டியிருப்பேன்.....''

— என்ற குரலைத் தொடர்ந்து சிரிப்பலைகள் எழுகின்றன.

''அப்படியெண்டா... எனக்கொரு ராசகுமாரன் .... என்னைத்தேடி வருவான் என்கிறீர்... ?''

''பின்ன.....? சும்மாவே சொல்லுறன் ..... நீர் இருந்து பாருமன் அப்ப நினைப்பீர் நான் சொன்னது சரியெண்டு......''

''அப்ப ... சின்ரனல்லாவுக்கு இளவரசன் வந்தது போல ... என்னையும் தேடி வரப்போறான் எண்டு சொல்லும் ...''

''நான் சொல்லுறபடி நடக்காட்டிப் பாருமன்''

புனிதத்திற்குச் சிரிப்பு வருகிறது. கனவுகள்...... கற்பனைகள் இளவயதின் மாதுர்யமான மயக்கும் மொழிகள்... .. அதன் லயிப்புக்கள் ... ஆனல் நிதர்சனங்கள் ?

- ''அழகான இளம் பெண்கள் என்றல் இளவரசன் மட்டும் வரமாட்டான் ... ஏன் அரசன் .. ராஜகுருவே கூட வந்து விடுவார்கள் .... எதற்கு..... காதலிக்க...... கல்யாணம் எண்டால்... தகுதி .. செல்வம்... சாதி... சனம்... குலம் .. கோத்திரம் எண்டு காததூரம் ஓடி விடுவார்கள் ... ஆனல் எங்களாலும் இந்தப் பகல்நேரக் கனவுகளின் சுகங்களிலிருந்தும் விடுபட முடியாமல்..... பின்

ஞல் யதார்த்த வாழ்வில் மிகப்பெரிய ஏமாற்ற அடிகளை வாங்கி... .''

''புனிதம் என்னப்பா...... என்னென்னமோ புதிய வார்த்தைகளைப் போட்டு எங்களைப் பயமுறுத்துகிறீர் . ...''

''இது பயமுறுத்தலில்லை ...... கனவுகளைக் குறைத்துக் கொண்டோமென்ருல் ..... வாழ்க்கையில் ஏற்படும் ஏமாற்றங்கள் எம்மை எந்த விதத்திலும் பாதிக்காது என்பதைச் சொல்ல வருகிறேன் .. ''

''நீர் கண்டகண்ட புத்தகங்களைப் படித்து விட்டுப் பேசுறீர் ..... வாழ்க்கையில நம்பிக்கை வேண்டும் ... விரக்தி கூடாது. அதுதான் முன்னேற்றத்திற்குத் தடை.... ''

''உண்மைதான் .. ஆனுல் எதில் நம்பிக்கை வைக்க வேண்டும்... என்பதில் தான் யதார்த்தம் இருக்கிறது ..... வாழ்க்கை இருக்கிறது ''

— அவர்கள் பஸார் வீதியிலிருந்து, கடைகளோடு கடைகளாக அமைந்திருந்த அந்தச் சிறிய தனியார் பாதையில் திரும்புகிருர்கள். திடீரென புதிய உலகம் ஒன்று முளைத்ததுபோல அந்தப் பகுதி விரிகிறது.

இருபுறங்களும் உள்வாங்கி அமைந்திருந்த துணிக்கடைகள் ... தையற்கடைகள்..... நெசவுக்கூடம் ..... அச்சகம்... வாசகர் வட்டம் என்ற பெயரில் சிறிய சிறிய கட்டணங்களுக்கு சஞ்சிகைகள், புத்தகங்கள் வழங்கும் நூலகம்... நாலு ஆள் சேர்ந்து கட்டிப்பிடித்தாலும் தோற்றுத் துவழச் செய்யும் வேப்பமரம் ..... அதன்கீழ் பெயிண்டர் ஒருவர் தனது இருப்பிடமாகவும் கொள்ளும் அவரின் சற்று விலாசமான கூட அலுவலகம் ... அப்பால் கிணறு ... பாத்ரூம்...... சிறிது வெற்று நிலம் ... நாலைந்து காகங்கள் என காலமும் நிலமும் உயிர்த்துடிப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஏதோ அவசரமான வேலை போலிருக்கிறது. பெயிண்டர் தனது அலுவலகம் கொள்ளாத ஒரு நீண்ட 'போர்ட்'டை வெளியே பாதையில் வேப்பமரத்தின்கீழ் இழுத்துப்போட்டு விட்டு எழுதிக் கொண்டிருக்கிறார். அவரின் நண்பர்கள் சிலர் - இரவு அங்குதான் தங்கினார்களோ என்னவோ...: அருகில் சில நாற்காலிகளைப் போட்டுக் கொண்டு கலகலப்பாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் வருவதைக் கண்டதும், பேச்சை நிறுத்திக் கொண்டு அறிமுகச் சிரிப்பைச் சிந்துகிறார்கள். அவள் அவர்களிடையே அவனைத் தேடுகிறாள். அவனில்லை. ஏமாற்றம் முகத்தில் கவிகிறது.

ஒருவன் புன்னகையுடன் கூறுகிறான்! ''உங்கட முதலாளி இன்னும் வரேல்லைப்போல கிடக்கு.....''

'நல்லவேளை ...' - நிம்மதியான பெருமூச்சு அவர்களிடம் எழுகிறது. தொழிலாளிகள் 'லேட்' என்றால்தான் விசாரணைகள்...... கண்டனம் .. விளக்கம் எல்லாம். முதலாளி 'லேட்' என்றால் அவர்கள் வெளியே...... தெருவிலே கால் கடுக்கத் தவம் செய்து காத்திருக்க வேண்டியதுதான்.

''எங்க மிச்சப்பிரெண்டைக் காணவில்லை?''

''இதென்ன கேலியா... . அல்லது ஆதரவான விசாரணையா . ?''

''இதென்ன . இப்படி வித்தியாசமாய்ப் பேசுறியள்... நான் அப்படியா... ?''

''அடடா ... கேலிக்குச் சொன்னா இப்படியா... முகம் கூம்பிப் போச்சே... . சும்மா எட்டிப் பாருங்கள் .''

உள்ளே நாலைந்து நண்பர்கள் ஒரு பாயை... ஒரு பெட்சீட்டை விரித்து..... தாறுமாறாக நித்திரையில் கிடக்கின்றார்கள் ... அவர்களிலும் அவனில்லை.

''எங்க மாஸ்டரைக் காணவில்லை . ?''

– 'அப்பாடா... வரவேண்டிய கேள்வி... . எவ்வளவு நேரமாகக் காத்துக்கிடந்தது......''

''ஜெகன்ர ரியூட்டறியில கொஞ்ச நாளா வேலை அதிகம்... மாணவர்களும் அதிகம்... அதோட புதுவருஷத் திட்டமாக ரியூட்டறிப் பிறின்சிபல் ஏதேதோ முன் ஆயத்தங்களாம் அதுதான் ஆளைக் கொஞ்சநாளாக் காணவில்லை..... இண்டைக்குப் பின்னேரம் கட்டாயம் வருவார் '' — என்று கூறிச் சிரிக்கிருன். மற்றப்பெண்கள் பெயிண்டரின் வேலையைப் பார்த்தவாறு நிற்கின்றனர் எவ்வளவு லாவகமாகக் கோடுகள் விழுகின்றன ... எழுத்துக்கள் என்ன அழகாய்... வண்ணக்கலவையுடன் .. அவை வெறும் எழுத்துக்களல்ல . ... எழுத்துக்களிடையே பெயர்... பொருளின் அடக்கம் ... முகவரி...... போன்ற உயிர்த்துவமற்ற விபரங்கள் கலையழகுடன்...... உயிர் கொண்டு

ஆனல் பெயிண்டரோ... ?

இந்தக் கதைகள் எதுவும் காதில் விழாததுபோல் கடமையிலாழ்ந்திருக்கிருர். அவருக்குப் பெண்கள் என்ருல் பயம் ... பக்தி...... வெட்கம் ... ஒரு வார்த்தை கூட பெண்களிடம் உதிர்க்க மாட்டார்... ஆனல் அவரது செவிப் புலனே எல்லாவற்றையும் கிரகித்துவிடும். பெண்கள் அப்பால் நகர்ந்து விட்டால் போதும் . யார்... யார் எந்தப் பெண்கள் என்ன பேசினர்கள் ... அவர்கள் எப்படியிருப்பார்கள் . என்றெல்லாம் விமர்சிக்கத் தொடங்கி விடுவார்.

அவர் வாழ்க்கையே விந்தையானது. கட்டைப் பிரமச்சாரி. நிச்சயமாக அவர் பிரமச்சாரி தான். மற்றவர்களைப் போல் கல்யாணமாகாதவரல்லர். மற்றவர்களுக்கு ஆபத்து எதுவும் அவரால் வந்ததில்லை. அப்படியிருந்தும் அவரை உற்ருரோ, உறவினரோ சீண்டவில்லை. அவர் பரம்பரையில் எல்லாருமே வியாபாரத்தில் ஈடுபட்டு கடை.. கார் மாடிவீடு...... வட்டி ..... கடன் என்று கொடுக்கிருர்கள் இவரோ......

தந்தையின் வியாபாரத்தில் கவனமில்லாமல் இளவய தில் படிப்பு படிப்பு என்று அலேந்தார். யாழ்ப்பாணத் தின் உயர் கல்லூரியில்தான் படித்தார். படிப்பைவிட சித் திர பாடம்தான் கைவந்தது ஆங்கில அறிவும் நிறைய வந்தது. ஆங்கிலக் கட்டுரை ... சித்திரம் பாடங்களின் முதன்மைதான்... மற்றப்பாடங்களுக்கு ஏனோ அவரின் கோலம் எட்ட எட்ட தள்ளியே நின்றன.

கல்லூரியிலும் கல்வித் தராதரப்பத்திர சாதாரண வகுப்பு வரைதான் சித்திரம் கற்க வசதியிருந்தது. அரசோ ... கல்வியமைச்சோ ... கல்லூரி அதிபர்களோ...... ஆசிரியர் களோ... ... பெற்றோர்களோ...... அதற்கு மேல் சித்திரம். சங்கீதம் .. நடனம் ... என்று நுன்கலேகளைக் கற்பிப்பது பாரமான காரியம் என எண்ணியதால் அவரால் அதிகம் கற்க முடியவில்லே.

வீட்டில் பெற்றோர், சகோதரங்கள் ஏச ஏசப் படிப்பையே விட்டொழித்தவர். அப்பாவின் வியாபாரத்திலும் கவனம் செல்லவில்லே. தம்பி தங்கைகள் படிப்பதுபோல் படித்து ... அப்பாவின் கடையையும் வருமானத்தையும் படிப்பு, சீத னம் என்று விழுங்கிவிட... அப்பா காலமாகும் போது அப்பாவின் தலேமாட்டில் விளக்கெரியத் தேங்காயெண்ணைக் குத் தவிக்க நேர்ந்துவிட்டது.

இவருக்கோ வேலே வெட்டியில்லே பிறஷ் பிடிப்பதைத் தவிர வழியில்லே. ஆனல் ஈழத்தில் அதுவும் யாழ்ப்பாணத் தில் ஓவியங்களே வரைந்து விற்றுச்சீவிக்க முடியுமா......? எழுத்தாளர்களே தமது படைப்புக்களேச் சொந்தச் செலவில் அச்சிட்டு நூலாக்கி புத்தகக் கடைக்குக் கொடுத்து விட்டு புத்தகக்கடைக்கே முதலீடு போல தானம் செய்து, அவர் களே வளர்க்கும்போது ஓவிய விற்பனேயா......?

கடைசியில் கடைகளுக்கு விளம்பர போர்டு எழுதி நாலு காசு சம்பாதிக்க வழிதேடும் வரை அம்மாதான் அப்பள மிட்டு...... மோர் மிளகாய் விற்று, வடகம் செய்து அவ

னுக்கு அரைவயிற்றுக்கு உணவிட்டாள் அவன் வயிற்றில் பிறந்த மற்றதுகளோ மழைக்கு வழியில் ஒதுங்குபவர்களைப் போல் ஒதுங்கியே போய்விட்டார்கள்.

அம்மா மீது அவருக்கு ஒரே பக்தி. அதனால் பெண்களைக்கண்டால்..... அவர்கள் வணங்குவதற்கு உரியவர்கள்..... எச்சில் படுத்தக் கூடாதவர்கள் என்ற எண்ணம் எப்படியோ அவர் மனதில் புகுந்துவிட்டது.

அம்மாவும் ஒருநாள் கண்மூடிய பிறகு...

அவர் இங்கே வந்து குடியேறிவிட்டார். நகரமானதால் அவருடன் படித்த நண்பர்கள்..... தெரிந்தவர்கள் என்று அவர் கடையில் வந்து தங்கிப் போவார்கள் ... சைக்கிள் பாதுகாப்புக்காகவும் அங்கு வருவார்கள் ... மலாயன் கபேயில் தனக்கு எடுக்கும் தேநீருடன் அவர்களுக்கும் சேர்த்து ஓடர் செய்வார்.

நண்பர்களின் கலகலப்பால் அவர் அறை நிறையும். அவரும் தனது தனிமையைக் கொஞ்சம் மறந்துவிடுவார்.

குறுகிய மனப்பான்மை கொண்ட சிலர் இதனை அவர் பலவீனமாகக் கருதி மதிய உணவுவரை தங்கிச் செல்வதுமுண்டு ...

சமீபகாலமாகப் புதிய புதிய நண்பர்கள் ... இளைஞர்கள் அதிகமாக அவர் கடைக்கு வந்து போகின்றார்கள். ஆனால் ....

அவரிடம் தான் எந்தவித மாறுதலையும் எவரும் காணவில்லை.

— புனிதம் மனதில் அடிக்கடி ஓவியர் பற்றிய சிந்தனைகள் சமீபகாலமாக எழுந்து கொண்டிருக்கிறது.

— முதலாளியின் C 90 மோட்டார் சைக்கிள் வருவது தூரத்தே தெரிகிறது.

# 6

காலை மணி பத்து. ஜெகன் க. பொ. த, உ/த வகுப்பு மாணவர்களுக்குப் புவியியல் பாடம் நடத்திக்கொண்டிருக்கிறுன். ஐந்தாறு நீண்ட வாங்குகள்...... மேசைகள். பத்துப் பன்னிரண்டு மாணவ மாணவிகள் ..... களையிழந்த, மெல்லிய சோகம் நிழலாட பாடத்தைக் கவனித்துக்கொண்டிருக்க, பின்னுல் சில வாங்கு மேசைகள் வெறுமையாடிக் கிடக்கின்றன. தாம் தொடர்ந்து கல்வி கற்று வந்த கல்லூரிகள் மூலம் இருமுறை உயர்தரப் பரீட்சை எடுத்துச் சித்தி பெற்றும் பல்கலைக்கழகம் புக வாய்ப்புப் பெருதவர்களும் சித்தி பெருதவர்களுமாகக் கலந்து காணப்படுகின்ருர்கள். சிலர் இரண்டாம் முறைத் தோல்வியினைத் தொடர்ந்து கல்வி பயில, வேறு சிலர் விரக்தி காரணமாக ஓரிரு வருடங்களைப் பின்னேக்கி விட்டு, காலதாமதமாக பரீட்சைக்கு ஆயத்தம் செய்ய முன்வந்திருப்பவர்கள்......

எல்லோருடைய முகங்களிலும் அச்சப் புழுதி படர்ந்து கிடக்கின்றது.

இம்முறையும் பரீட்சையில் பெயிலாகி விட்டால் ...

'இனி வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக்கிடக்க வேண்டியதுதான். வீட்டு வேலைகளையே சுமையாகத் தாங்கிக் கொண்டு... .. படிப்புமில்லை .. கலியாணமுமில்லை என்ற ஏச்சுக்களிடையே பெருமூச்சு விட்டுக் கொண்டு... ..' பெண்கள் மனதால் நடுங்க,

'படிப்புமில்லை...... வேலை வெட்டியுமில்லை...... ஐயாவுக்கு ஊரளக்கிற வேலை... நேரத்துக்கு வந்து திண்டிட்டு ஊர் சுத்திறவேலை .. அவருக்கு என்ன குறை.....?' ஆண்கள் நினைவின் அவமானத்தாலேயே மனம் சாம்பிப்போக

அவன் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறுன். தான் சொல்வது எத்தனை பேருக்குப் புரிகிறதோ... அவர்கள் அவதானமாகக் கேட்கிறுர்களா .. ... என்பது கூடத்தெரிந்து கொள்ளமுடியாத அசமந்தநிலை. இதனுல் படிப்பிக்கும் அவனது உற்சாகம் தடைப்படுகிறது.

— தனியார் தாபனங்களில் படிப்பிக்கும் ஆசிரியர்களின் தர்மசங்கடமே இதுதான். அங்கு படிக்கவரும் மாணவர்கள் பல்வேறு இடங்களிலிருந்து பலதரப்பட்ட முன்னறிவுடன் பாடம் கேட்பவர்கள். சிலர் பாடத்தில் பரீட்சையில் உயர் சித்திபெற்று இருப்பர். சிலர் பாடமே புதிதாகக் கற்பவர்களாக இருப்பர். இன்னும் சிலர் ஆசிரியர் படிப்பிக்கும் போது தான் தாம் ஏற்கனவே கற்ற பகுதிகள் என்ற அசட்டை உணர்வுடன் இருப்பார்கள். இவர்களில் எந்தப் பிரிவினரை மனதில் கொண்டு கற்பிப்பது? ஒரு பிரிவினரை மனதில் கொண்டு கற்பித்தால் மறு பிரிவினர் கொட்டாவி விடுவர். ஆசிரியரை ஏளனமாகப் பார்ப்பார்கள். வெளியில் சென்று 'ஆசிரியர் நல்லதில்லை' என்று கருத்துக் கூறுவார்கள். 'இவர்கள் இப்படிக் கூறுகிறுர்களே என்று இவர்களுக்குப் படிப்பித்தால் மற்றவர்கள் இவர் படிப்பிக்கிறது விளங்கவில்லை' என்று அதிபரிடம் சென்று முறையிட, அவர் ஆசிரியரை அழைத்து விளக்கம் கேட்பார் ஆசிரியர் என்ன

விளக்கம் சொன்னாலும் எடுபடுவதில்லை. கடைசியில் இப்படிக் கூறி அனுப்புவார்...

''மாஸ்டர் நீங்க என்ன சொன்னாலும் ... இங்க முதலிடம் மாணவனுக்குத்தான். இந்த அரசாங்கக்கல்லூரிகளில படிப்பிக்கிறது சரியில்லை ... அல்லது படிப்பிக்கினம் இல்லை எண்டு வாறபிள்ளைக்கு நாங்கள் சரியாகப் படிப்பிக்கவேணும். எல்லாருக்கும் விளங்கவேணும் ... அப்பதான் இந்த தாபனம் வளரும்...... உங்களைப்போல நாலு வேலையிழந்த பட்டதாரிகளுக்கும் வேலை கிடைக்கும்...... எப்படியெண்டா மாணவரிட்ட இருந்துதான் காசு வாங்குறம் இதெல்லாத்துக்கும்..... உண்மையில நான் இல்ல இங்க முதலாளி .. அவங்கள் தான்... இதையெல்லாம் யோசிச்சுக்கொண்டு வகுப்புக்குப் போங்க ... அப்படி ஏதும் உங்களுக்கு இதில கஷ்டம் எண்டால் சொல்லுங்க ... கனபட்டதாரிகளின்ர அப்ளிகேஷன்ஸ் வெயிட்டிங் லிஸ்ற்றில கிடக்கு.....''

— மாணவரின் ஆளுமையை வளர்க்க வந்த ஆசிரியர் தன் ஆளுமையை இழந்து வகுப்பிற்குப் போவார். மாணவர்களுக்கு ஆசிரியர் புள்ளி போட்டு தரமிட்ட காலப்போய் மாணவர்கள் ஆசிரியர்களுக்குப் புள்ளிபோடும் காலம்' 'இந்த மாஸ்டர் படிப்பிக்க மாட்டார்...... அந்த மாஸ்டர் தான் நல்லது .... அவர் 'பாட் - வண்' தான் நல்லாச் செய்வார். நான் 'பாட் - ரூ'வுக்கு இவரிட்டைத்தான் போறனன் ... சனம் கூட எண்டாலும், சரியாக் கேட்காட்டியும் கூட இவரிட்டப் போனால் தான நல்லது... மற்றப் பெடியளிட்ட நோட்ஸை வாங்கி எழுதலாம்.....''

பெற்றோரும் பிள்ளைகளின் பேச்சுக்கெல்லாம் புரிந்தோ புரியாமலோ பலியாகிக் கொண்டிருப்பர்.

இந்த மனோபாவம் மாறாத வரையில் கல்வியில் எந்த . எத்தனை சீர்திருத்தம் வந்தாலும் கல்வி என்பது முன்னேறப்போவதில்லை.

வாசலில் ஒரு டாக்ஸி வேகமாக வந்து நிற்கும் ஓசை கேட்கிறது. திடீரென தனியார் கல்வி நிறுவனத்தில் பர பரப்பு எழுகிறது. டைப்ரைட்டர்களின் 'தட... தட... தட் ரிங்' ஒலிகள் பாடம் நடத்தத் தொடங்குகின்றன.

அந்தக் கல்வி நிறுவனத்தின் உரிமையாளர் திருவாளர் மயில்வாகனத்தார் இறங்கிக் கொண்டிருக்கிறார். வெள்ளை வெளேரென்ற வெள்ளைக்காரனைத் தோற்கடிக்கும் நிறம்; நெடிதுயர்ந்த தோற்றம்; மருங்கச் சிரைத்த முகம்; வெள்ளை வேட்டியும், வெள்ளை நாஷனலும், கையில் கறுப்பு 'பிரிவ்-கேஸு'டன் அவர் இறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்த எவர் தான் அவர் ஐம்பத்தைந்தைத் தாண்டிய வயதுக் காரர் என எண்ணுவர்...? அந்தத் தோற்றத்தை வைத்துக் கொண்டு அவர் வாழ்நாளில் சாதித்தது எத்தனையோ ?

மயில்வாகனத்தாரின் பூர்வஜன்மத்தை ஆராயப்புகுபவர் கள் எல்லாரும் குருடர்கள் கண்ட யானைபோல...

ஓ! அவரா ... கொழும்பில நல்ல வேலையில இருந் தவர். அதை விட்டிட்டு வந்து ரியூட்டறி நடத்திறார்.... சீப் கிளாக்காக இருந்தவராம்......

— உதென்ன விசர்க்கதை... அங்க 'சிருப்'பராக இருந்து காசு அடிச்சுக் கொண்டு ஊர்ப்பக்கமாக வந்து சேர்ந்திட் டார் ...

— உங்களுக்கு விசயம் சரியாய்த் தெரியாமக் கதைக்கி றியள்...... இவரும் இன்னொருவருமாகக் கூட்டுச்சேர்ந்து ஒரு கொம்பனியொண்டு நடத்திச்சினம்...... நல்லா நடந் துது இந்தாள் அரசாங்க உத்தியோகத்தில இருந்த தால அரச அதிகாரிகளோட நல்ல பரிச்சயம் ... கூட்டாளி நல்ல காசுக்காரன் ... இவரை நம்பிப் பொறுப்பாக விட... இந்தாள் கொஞ்சம் கொஞ்சமா அரிச்சு கொம்பனியையே நஷ்டத்தில் மூழ்கடித்து விட்டு, பொறுப்பையெல்லாம் அந் தக் கூட்டாளியின் தலையில கட்டிவிட்டு காசோடு கம்பி நீட்டி விட்டுது ... அந்தப் பணத்திலதான் இந்த ரியூட்ட ரியை நடத்துகிறார்.......

— காசடித்துக் கொண்டு வந்தவையெல்லாம் ரியூட்டரியே நடத்துகினம் ...?

இந்தாள் 'எடிகேசன் மினிஸ்ரி'யில வேலை பார்த்தவராம்.. கல்வி உலகில ஆராரை எப்படி எப்படிப் பிடிக்க வேண்டு பிடிச்சால் என்ன நடத்தலாம் எண்டு சரதலப் பாடம். இல்லாட்டி வந்தோடனயே தன்ர ரியூட்டரியை ஒரு தனியார் பாடசாலையாக ரிஜிஸ்டர் செய்ய முடியுமே மினிஸ்ரியால அப்புறூவ் பண்ணப்பட்ட பாடசாலையல்லே...

எது எப்படியோ? என்னவோ?

இன்று நகரின் முக்கிய பகுதியில் பத்துப்பரப்புக்காணியில் அவருடைய ரியூட்டரி அரசாங்க பாடசாலைகளுக்கு நிகராக இயங்கி வருகிறது. இன்றைக்கெல்லாம் அப்படிப்பட்ட ஒரு காணியை வாங்கிறதெண்டால் கனவுகூடக் காண முடியாது. ஆனல் மயில்வாகனத்தார் வாடகைகூடக் கொடுக்காமல் அந்தக் காணியில இருபது வருடமாகச் சொந்தம் கொண்டாடுகிருர் என்ருல் அது அவருடைய திறமையைக் காட்டுகிறதா? அதிஷ்டத்தைக் காட்டுகிறதா என்பது பட்டி மன்றம் அமைத்து முடிவு செய்யவேண்டியது.

மயில்வாகனத்தாருக்கு சொந்த இடம் யாழ்ப்பாணமில்லை. இன்னும் வடக்கே ஒரு எல்லையில் அவர் ஊர். கொழும்பிலிருந்து வரும்போது கொண்டிருந்த பணத்தை எதில் முதலீடு செய்வது என்ற எண்ணத்தில் ஒருநாள் பஸ்ஸில் யாழ்ப்பாணத்துக்கு வந்து கொண்டிருந்தபோது பல மாணவர்கள் ரியூட்டரிக்குப் போவதைக் கவனித்தார். க. பொ. த. சா/த, உ/த - வகுப்பு மாணவர்களுக்கு அதிலும் முதலிருமுறை பரீட்சையில் தோற்றவர்கள் தன்னம்பிக்கை அற்றவர்களாக ரியூட்டரியை அணுகுவதையும், இன்றைய கல்விமுறை, இனவெறி பல்கலைக்கழக அனுமதி தரப்படுத்தல் ரியூட்டரிகளின் எதிர்காலத்தை அவருக்குணர்த்தின.

அதிக முதலீடு தேவைப்படாத தொழில். நாலைந்து மேசை கதிரைகள். அவற்றைப் போடச் சிறிய இடம்.. ... கல்வி போதிக்க ஆசிரியர்களாக வேலையற்ற பட்டதாரிகளாக, விரக்தியுடன் அலையும் இளைஞர்கள் ... போதுமே ஆயிரம் ஆயிரமாக வறுகலாம் ...

மயில்வாகனத்தாரின் மூளை வேலை செய்தது.

இப்பொழுது உடனடியாகத் தேவைப்படுவது ரியூட்டரி நடத்த ஒரு இடம். மாணவர்கள்... .. ஆண் பெண் வந்து போக...... பஸ் வசதியுள்ள ... சாப் ஈட்டு வசதியுள்ள... .. பட்டினத்திற்குள் ஓரிடம் தேவை.

— யோசனையோடு கையிலிருந்த பத்திரிகையைப் பிரித்தவர் கண்ணில் அந்த விளம்பரம் படுகிறது.

## வாடகைக்கு வீடு

நகரின் முக்கிய பகுதியில் ஆறு பெரிய அறைகளு'—ளும், ஹோல், முன் வராந்தை, பின் வராந்தை கொண்ட வீடு வாடகைக்கோ குத்தகைக்கோ விடப்படும். வீட்டின் சொந்தக்காரர்கள் வெளிநாடு சென்று சில ஆண்டுகளின் பின் திரும்ப இருப்பதால் ஏராளமான மரச்சாமான்களுடன் வீடு வழங்கப்படும். பணத்தைவிட நேர்மையான நம்பிக்கையானவர்களை எதிர்பார்க்கின்றோம்

முகவரி ..........

அவர் மனம் துள்ளுகிறது. எல்லாம் முருகனின் . ... நல்லூர் கந்தனின் அருள்... நன்மை எல்லாம் கைகூடி வருகிறதே ...

'ஹேய் ! டாக்ஸி' என்று கைதட்டிக் கூப்பிட்டார்.

அவர் டாக்ஸியிலிருந்து இறங்கிய முறையும், அவர்களை அணுகிய முறையும் டாக்டர் பேரம்பலத்திற்கு அவர் மீது ஒரு கௌரவ எண்ணத்தை விதைத்தது. மயில்வாகனத்தார் கொழும்பில் தனது செல்வாக்கான இடங்களைப் பற்றி எடுத்து விட்டார். யாழ்ப்பாணத்தவருக்கே உரியபலவீனம் டாக்டருக்கும் இருந்தது. கொழும்பில் நான்கு பெரியவர்களை.... தெரு வீதிகளை...... ஹோட்டல்களைத் தெரியும் என்று யாராவது கூறிவிட்டால், ஏதோ அவரே கொழும்பை ஆளுபவர் என்று எண்ணி மயங்குவது...

இவ்வளவு பெரிய மனுஷனிடம் நம்பி வீட்டையும் வளவையும் ஒப்படைக்கலாம். வீடும் பத்திரமாக ... பாதுகாப்பாக இருக்கும்.

என்றாலும் படித்தவரல்லவா ?

''ஒரு புறக்டரை வைத்துக்கொண்டு 'லீஸ்' எழுதுவம். நானோ எனது உரித்தாளர்களோ எந்தக் காலத்திலெண்டாவது திரும்பி வந்தால், எந்தப் பிரச்சனையுமின்றிக் காணி, வளவை ஒப்படைத்துவிட வேண்டும். எங்களுக்குரிய குத்தகைப்பணத்தை பாங்கில் எங்கள் எக்கவுண்டில் போட்டுவர வேண்டும். மின்சாரம், வீட்டுக்கு வெள்ளையடித்தல் போன்ற பராமரிப்புச் செலவெல்லாம் மயில்வாகனத்தார் செய்ய வேண்டியது. அந்தச செலவுக்காக வளவின் பயிர்களின் பிரயோசனத்தைப் பெற்றுக் கொள்ளலாம்''.

மயில்வாகனத்தாரின் மூளை பலமாக வேலைசெய்தது.

அவரே ஓடோடிப்போய் தனது உறவினரில் ஒருவரும், கோட்டில் சைக்கிளுக்கு பிரேக் ... பெல் ... மணியில்லை வழக்குகளையும். டபிள்ஸ் வழக்குகளையும் வழக்கில்லாமல் பொலிசோடு சேர்ந்து ஐந்து பத்து ரூபாய்களுக்குப் பேரம்' பேசும் புரக்கிராசியும், பிரசித்த நொத்தாரிசுமான வன்னியகுலத்தைக் கூட்டிக்கொண்டு வந்தார்.

எல்லாம் எழுதின கையோடு, டாக்டர் தன் குடும்பத்தோடு லண்டன் பயணமானுர்.

அன்றிலிருந்து மயில்வாகனத்தார் தான் காணியின் சொந்தக்காரன்.

வீட்டில் கிடந்த தட்டுமுட்டுச் சாமான்களையும், தேவைப்படாதவற்றையும் கார் கராஜ்ஜில் போட்டுப் பூட்டினுர். ஒரு அறையைத் தங்கவும் கிச்சனைத் தனது தேவைக்குமாக வைத்துக்கொண்டு, வீட்டிலிருந்த ஒபிஸ் டேபிளையும் நாற்காலிகளையும் முன்னறைக்குக் கொண்டு சென்று ஒபிஸ் என்று பெயர்ப்பலகையுமிட்டார். தனது டேபிளில் அதிபர் என்ற போட்டையும் நிறுத்திக் கொண்டார்.

ஹால்...... அறை எங்கும் நீண்ட நீண்ட மேசை வாங்குகளால் நிரப்பினுர். கரும்பலகையைத் தொங்கவிட்டார். ரியூட்டரி தயார். நிச்சயமாக இருநூறு பேராவது படிக்கலாம்..... பிறகு போகப் போகப் பார்க்கலாம்.

'எடியூகேற்ரேறியம்' - புதிய வர்ணங்களில் பளபளப்பாக ஒரு நீண்ட 'போர்டு' கட்டிட முகப்பில் கம்பீரமாக கல்வி அளிக்க ஒரே தாபனம் என்று பெயர்கூவி அழைத்துக் கொண்டிருக்க .....

நகரின் சுவர்களில் புதிய புதிய போஸ்டர்களாக கல்விக்கு எடியூகேற்ரேறியம்...... கொழும்பில் புகழ்பெற்ற விரிவுரையாளர்களைக் கொண்டு பாடம் நடத்தப்படுகிற ஒரே இடம் எடியூகேற்ரேறியம்..... விசேட பட்டதாரி ஆசிரியர்களால் நேரடிக் கண்காணிப்பில் பாடம் நடத்தப்படும் ஒரே தாபனம் எடியூகேற்ரேறியம் ..... என்று மூலை முடுக்கெல்லாம் ஒட்டப்பட்டது.

கல்லூரிப் படிப்பில் நிறைவு காணுதவர்களும்... பாடசாலைகளில் கல்வி கற்ற வேளையில் அலட்சியமாக இருந்து தோல்வியோடு வெளியேறி... இரண்டு மூன்ருண்டுகள்

வீடுகளிலிருந்து கொட்டாவி விட்டு விட்டு பின்னர் படிப் பின் மகத்துவம் தெரிய ஓடோடி வந்தவர்களுமாக.....

'எடியூகேற்றூேறியம்' — ஆரம்பத்திலேயே களைகட்டத் தொடங்கியது.

அங்கு படிப்பித்தவர்களெல்லாம் பட்டதாரிகள்தான்...... கொழும்பிலிருந்து வந்தவர்கள் தான்...... ஆமாம் பட்டதா ரிகள் ..... வேலையற்ற பட்டதாரிகள். கொழும்பு... களனிப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் .. எல்லாரும் புதிதாகவோ, இரண்டு மூன்றாண்டுகளுக்கிடையில வெளியானவர்களா கவோ ..... வேலை தேடி அலைக்கழிந்து...... வீட்டாராலும் சகோதரர்களாலும் ஏளனமாகப் பார்க்கப்பட்டவர்களுமான அவர்களை மயில்வாகனத்தார் ஒருசில நூறுரூபாய்களுக்கு — மாதச்சம்பளத்திற்கு விலை பேசுவது சுலபமாக இருந்தது. அவர்களுக்கும் சம்பளம் என்பதை விடத் தாம் கற்றதை...... தாம் சில வருடங்களாகப் பூட்டி வைத்திருந்த திறமையை வெளிக்காட்டக் கிடைத்த வடிகாலாக முழுமூச்சுடன் உழைத் தனர். மாணவர்களிடம் கிடைத்த... .. கிடைக்கும் வரவேற்பு அவர்களின் களைப்பையெல்லாம் ஆற்றியது.

அவர்களின் ஆத்மார்த்தமான உழைப்பும், மயில்வாக னத்தாரின் அதிஷ்டமும் .. பரீட்சை முடிவு வெளியாகும் தினங்களில் 'எமது தாபனத்தில் படித்த 80% மாணவர்கள் உயர்தரச்சித்தி பெற்றூர்' என்ற விளம்பரங்களும் அவருக்கு மகத்தான வெற்றியை ஈட்டிக் கொடுத்தன. அவரும் தனது தாபனத்தை ஆண்டுதோறும் விரிவுபடுத்த வேண்டியதா யிற்று.

வீட்டைச் சுற்றிக் காணப்பட்ட மரம், தடிகளை வெட் டித் துப்பரவு செய்தார். அந்த இடங்களை எல்லாம் வளைத் துப் பிடித்து நீண்ட நீண்ட கொட்டில்களை...... ஓலைகளா லும், காட்டுத்தடிகளாலும் அமைத்தார். தட்டிகளினூல் அவற்றை வெவ்வேறு வகுப்பறைகளாக மாற்றினூர். வெறும்

மணற்றறையிலேயே வாங்குகளையும், மேசைகளையும் போட்டுச் சிறந்த விரிவுரைக் கூடங்களாக மாற்றினர்...... பெரிய ஆடம்பரமான கல்லூரிகளில் படித்து விட்டுவந்த மாணவர்களுக்கே அந்த வகுப்பறைகள் எந்தவித அலட்சிய மனோபாவத்தையும் தோற்றுவிக்கவில்லை. நாளுக்கு நாள் மாணவர் எண்ணிக்கை பெருகிவந்தது.

'இதனை ரியூட்டரி நிலையிலிருந்து அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் கல்லூரியாக மாற்றிவிட்டால்' என்ற எண்ணம் ஒருநாள் அவர் மனதில் எழுந்தது. அதன் நன்மை தீமைகளை புறெக்டர் வன்னியகுலத்துடன் கூடி ஆலோசித்தார்.

அரசாங்க அங்கீகாரம் பெற வசதியாக ஒரு 'டிரஸ்டி' அமைப்பது அவசியம் எனத் தெரிந்தது. அது மிகச்சுலபம். அரசாங்க உயர் உத்தியோகங்களில் உயர்பதவிகளிலிருந்து ஓய்வு பெற்று. தங்களின் பழைய பெருமையை - பதவியின் சிறப்பை - காட்டமுடியாமலும், நேரத்தை எப்படி ஓட்டுவது என்று தெரியாமலும். எவ்வளவு நேரம் தான் மாநகரசபை நூலகத்தில் செலவு செய்வது என்ற தவிப்பாலும், மாலை நேரங்களை நல்லூர் கந்தனின் வாசல் வேப்பமர நிழலிலும், முற்றவெளி மைதானத்திலுமாக தங்கள் பென்ஷன் வாழ்வை ஓட்டிவரும் வங்கி முகாமையாளர், டி. ஆர் ஒக்கள், புறெக்டர்கள், கல்லூரி அதிபர்களைக் கொண்டு ஒரு டிரஸ்டியை அமைத்து ஒரு லெட்டர்ஹெட்டையும் தயாரித்துக் கொள்ளலாம். ரியூட்டரியின் மாணவவரவு, வசதிகளை எல்லாம் கொண்ட அறிக்கையை வசதிபோல ஒழுங்கு செய்வது அப்படியொன்றும் கஷ்டமானதல்ல ...

ஆனால் இதெல்லாவற்றையும் விட கடைசியில் புறக்டர் வன்னியகுலம் சொன்ன விசயம் இருக்கிறதே அது தான் அவரின் வாயையே பிளக்க வைத்தது.

'நாங்கள் எங்கள் ரியூட்டரியை அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியாக மாற்றிக் கொண்டோமென்றால், இந்த நிலத்

தையே வளைச்சுக் கொள்ளலாம். அதுவும் நாங்கள் கொடுக் கிற விலைக்கே......'

''என்ன ?''

'பின்ன என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர்? இது ஒரு அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையாக உறுதிப்படுத்திவிட்டால் நிலச்சொந்தக்காரர் ஒண்டுமே செய்ய இயலாது ... இது பாடசாலைக்காணி ... இந்த நிலம் இல்லாட்டா படிச்ச மாணவர் எங்க போறது கல்வி கற்க .. ? அதோட பாடசாலைக்கேற்ற பெரிய இடம் வேறெங்க இருக்கு... ? என்று வாதாடினு 'கோட்' கூட எங்க பக்கம் தான் ...'

— கொழும்பிற்கு அன்று பறந்தவர்தான் மயில்வாகனத்தார். மாதக்கணக்கில் அங்கேயே முகாமிட்டார். பிறகு வெற்றிச் சிரிப்புடன் கொழும்பிலிருந்து திரும்பினுர். அவர் கையிலேயே —

'எடியூகேற்ருேறியம் — அங்கீகரிக்கப்பட்ட கல்லூரி' என்ற அரசாங்க அத்தாட்சிப்பத்திரம் இருந்தது.

அதன் பிறகு அவரின் அட்டகாசமும், அதிகாரமும் மாணவர்களிடம் மட்டுமல்லாது ஆசிரியர்களிடமும் பரவலாயிற்று.

அலுவலக அறையின் ஒருபக்கச் சுவர் அவசரம் அவசரமாக இடித்துத் தள்ளப்பட்டு விசாலமாக அகட்டப்பட்டதுடன், ஒரு பக்க அறையொன்று தள்ளுகண்ணுடிக்கதவு அமைக்கப்பட்டு, வெளியிலிருந்து நேராகத் தம்மறைக்கு ஒருவருமறியாமல் செல்ல ஏற்றதாகவும், உள்புறமாக அலுவல்க நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யச்செல்லக்கூடியதாகவும் அலுவலக அறையின் நான்கு மூலைகளிலும் நான்கு புதுமேசைகளும் நாற்காலியும் இடப்பட்டன. ஒன்றில் டைப்பிஸ்ட்டாக ஒரு இளம் பெண். பென்சன் வாங்கிய ஒருவர் கிளார்க்.

மேற்பார்வையாளராக உத்தியோகத் தோரணை கொண்ட முன்னாள் உயர்தர உத்தியோகத்தர் ஒருவர். ஒதுக்குப்புற மான மூலையில் அலுமாரிகளால் மறைப்புச் செய்யப்பட்ட அறை போன்ற அமைப்புக்கு முன்னால் ஸ்ரூலில் பியோன்.

வடக்குப் புறமான விருந்தை - வலைத் தட்டிகளால் அடைக்கப்பட்டு விஞ்ஞான ஆய்வு கூடமாக மாற்றப்பட்டது. முன்பக்க விருந்தை அகலிக்கப்பட்டு இரு நீள வரிசையில் பல பழைய ரைப்றைட்டர்கள் அதற்கேற்ற மேசையும் ஸ்ரூ லுமாக தரிசனம் தந்தன. முன்பக்கச் சுவரின் கண்ணாடி விளம்பரப் பலகையில் நேரசூசி - ஆசிரியர்களின் பெயர்கள் - கற்பிக்கும் பாடம் - கட்டணம் எல்லாம் நோட்டீஸ்களாக ஒட்டப்பட்டன.

அரசாங்கப் பாடசாலையிலிருந்து விலகுவோருக்கும், பிரபல தனியார் கல்லூரிகளில் இடம் கிடைக்காதவர்களுக் கும் மனநிறைவைத் தரும் கல்விக் கூடமாகவே, மாணவர் தொகை பெருகத் தொடங்கியது அரசாங்க சாதாரண/உயர் தரப்பரீட்சைகளை நேரடியாகவே எடுக்கக்கூடியதாக இருந் ததுடன், ரைப்றைட்டிங், ஷோட் ஹாண்ட் பிற்ஸ்மன் லண்டன் பரீட்சைகளையும் இத்தாபனத்தின் மூலம் எடுக்கக் கூடியதாகவும் மாற்றிக் கொண்டார்.

மாணவரின் கல்வி பெருகியதோ, என்னவோ, அவரின் செல்வம் மட்டும் பெருகி வழியலாயிற்று. இப்போது அவ ரின் நடை உடை பாவனைகள் அனைத்தும் முற்றாக மாறி விட்டது. எங்கு போய் வருவதெண்டாலும் டாக்ஸி தான். அவரின் வாடிக்கையான டாக்ஸிகாரன் தனது டாக்ஸியை அவரது ரியூட்டரிக்கு முன்னாலேயே நிரந்தரமாக நிறுத்தி வைக்கலானான். டாக்ஸி ஸ்ராண்டைவிட இது அவனுக்குப் போட்டியோ, பெற்ரோல் செலவோ அதிகமின்றி இலாபம் கொடுத்தது.

இதற்கிடையில் தரப்படுத்தல் வந்ததைத் தொடர்ந்து தமிழ் மாணவர்களிடையே ரியூட்டரி மோகம் அதிகரித்தது.

இவரின் நிறுவனம் காலை வேளையிலிருந்து மாலை நான்கு மணிவரை வழக்கமான பாடசாலையாகவும், மாலை ரியூட்டரியாகவும் இயங்கலாயிற்று வழமையான நேரங்களில் பாடம் எடுக்கின்ற ஆசிரியர்களின் 'ஓவர்டைம்' வேலையாக மாறியது. ஆயினும் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியமோ மிக மிகச் சொற்பமாக இருந்தது. ஏறக்குறைய காலை எட்டு மணியிலிருந்து இரவு எட்டுமணிவரை உழைக்கும் ஆசிரியனுக்கு அவர் வழங்கும் சம்பளம் ஏழெட்டு நூறுரூபாய்களாக ... அதிலும் லீவு எடுத்த நாட்களுக்குக் கழிவு பிடித்துக்கொண்டு .....

ஆனால் ஆசிரியர்களும் முகம் சுளிக்காமல் - தாம் சுரண்டப்படுகிறோம் என்று தெரிந்தும், இங்கு ஏதாவது முரண்டினால் உள்ளதும் போய்விடும் என்ற அச்சமும் . 'இதுகூட இல்லாமல் எத்தனைபேர்' என்ற பொய்யான மனச் சமாதானமும், இதனைவிட்டு விலகினால் இதை விடக்குறைவான சம்பளத்துக்கு வேலை செய்யப் புதுப்புதுப் பட்டதாரிகள் காத்திருக்கிறார்கள் என்ற மன நடுக்கமும்... 'கொழும்பில அரசாங்க வேலை கிடைச்சாப் போல... அதுக்கு வாற சம்பளம் அங்கரும் எடுத்து, ஹோட்டலுக்குக் கொடுக்க... யாழ்தேவிக்கு வாரம்வாரம அழுது கொட்டக் காணுமே அந்தச்சம்பளத தோட... செலவையும்பாக்கேக்க அந்தச் சம்பளத்தைப் போல மூன்றுமடங்கல்லே அதோட வீட்டுச் சாப்பாடு வேறு என்ற எண்ணத்தில் மிகமிகக் கீழ்ப்படிவுள்ள ஆசிரியர்களாக மாற்றப்பட்டிருந்தார்கள்... இதுமட்டுமல்ல, மல் மயில்வாகனத்தாரின் கவனத்தைப் பெறவும், நம்பிக்கை பெறவும் மறைமுகமாக வேலை செய்யத் தொடங்கியிருந்தனர். காட்டிக் கொடுத்தலும், கழுத்தறுப்பும் எங்களுக்குக் கைவந்த கலை அல்லவா' ..

இவையெல்லாம் சேர்ந்து மயில்வாகனத்தாரை உயர்தோ, உயர்த்து என உயர்த்தியிருந்தது கொழும்பில் அரசாங்க உத்தியோகம் என்று இருந்த போதிலும் சேர்க்காத சொத்தினை ஒரு சில ஆண்டுகளிலேயே சேர்க்க முடிந்

தது மட்டுமல்ல அவரது ஒரு மகளுக்கு ஒரு எஞ்சினியரை மாப்பிள்ளையாக்கி, யாழ்நகருக்குள்ளேயே வீடு, வளவு காசாக ஐந்துலட்சமும், மற்றமகளுக்கு ஒரு டாக்டரைப் பிடித்து திருநெல்வேலியில் தோட்டக்காணியாக ஐம்பதுபரப்பும், வீடுவளவும் காரும், ரூபாயாக பத்துலட்சமும் கொடுப்பதாக பேசியிருக்கிருர். கல்வி மாணவர்களுக்கு கிடைத்ததோ இல்லையோ அவரது மகள்களுக்கு நன்ருகக் கல்வி கற்ற மாப்பிள்ளைகள் கிடைத்துவிட்டார்கள், போதுமே.

மாணவர்களின் மனநாடியை நன்கு உணர்ந்திருந்தவர் மயில்வாகனத்தார். மாணுவபேரவைகளா .. மாணவசங்கங்களா .. கூட்டங்களா எது நடத்துவதாயினும் இருக்கவே இருக்கிறது எடியூகேற்ருேறியம். சனி ஞாயிறுகளில் கூட்டம் நடத்த இலவசமாகவே வழங்கிவிடுவார். அதுமட்டுமல்ல வேலையற்ற பட்டதாரிகள் சங்கம், வெளிவாரிப்பட்டதாரி மாணவர் சங்கம், தொழிற்சங்கங்கள் சமாஜங்கள்... கம்யூனிஸ்ட்சங்க கூட்டம் சிறுபான்மைத் தமிழர் கூட்டம் கூட்டணிப் பிரச்சாரம்... மேதினக் கூட்டம்... என்று பேதமற்ற அனுமதி வழங்கிவிடுவார். 'நல்ல மனிசர் மயில்வாகனம்' என்ற பெயர் அவரது நிர்வாகச் சீர் கேடுகளை வெளியில் கொண்டுவராமல் தடுத்து விட்டன.

ஆனுலும், சமீபகாலமாக அவரது ரியூட்டரியிலேயே சில முணு முணுப்புகள் எழ ஆரம்பித்துள்ளன. 'சம்பளம் காணுது. கூட்டித்தரவேண்டும்...'

மயில்வாகனத்தாருக்கு மிகமிக அதிர்ச்சியாக இருந்தது. எடுத்த எடுப்பிலேயே கூறிவிட்டார்:

''அப்படி ஒண்டும் கூட்டித்தர முடியாது. விரும்பமானவர்கள் விலகிக்கொள்ளலாம்.''

— இந்தப் புரட்சி கலைப்பிரிவு ஆசிரியர்களிடம் தான் முதலில் எழுந்திருந்தது. விஞ்ஞானப்பிரிவில் இது எழாமைக்கு காரணம் இவர்களை விட அவர்களுக்குச் சற்றுக் கூடுதலான சம்பளம் வழங்கப்பட்டுவந்தமையே... இது அவர்களுக்கு வழங்கப்பட்ட விசேட கௌரவமாகக் கருதியதுடன், தங்களை விடக் குறைந்த ஊதியத்துக்கு இன்னொரு பகுதிப்பட்டதாரிகள் உழைக்கிறார்கள். அவர்களை விட நாம் மேலானவர்கள் என்ற எண்ணம் அவர்களிடையே உள்ளோடி இருந்தமையும் ஒரு முக்கிய காரணமாகும்.

இந்தக் குரலை முதலில் எழுப்பியவன் விசுவநாதன் என்ற பொருளியல் ஆசிரியன் தான். அவனுக்குத்துணையாக இருந்தவன் தமிழ்படிப்பிக்கும் குமரேசன். இருவருமே பல பொறுப்புக்களைக் கொண்டிருந்தவர்கள். வீட்டில் வயதான பெற்றோர்... இவர்களின் படிப்பிற்காக சொத்தெல்லாவற்றையும் அழித்துவிட்டு பிள்ளையின் கையையே எதிர்பார்த்து ஏங்கியிருக்கும் அவர்களைப்போல, அண்ணா உழைத்து எங்களைத் கரைசேர்ப்பான் என்று கனவில் லயித்திருக்கும் தங்கைகள்...

'மச்சான் அரைப்பட்டினியாகக் கிடந்து சாவதை விட, முழுப்பட்டினியாகச்சாவம்..'

— மாணவர்களிடம் முதன் முறையாக ஆசிரியர்களின் குறைகள் முன்வைக்கப்பட்டன.

அடுத்த நாள்.

ரியூட்டரியில் ஒருமாணவரின் வரவும் இருக்கவில்லை. எல்லா வகுப்புக்கரும்பலகைகளிலும் 'ஆசிரியர் வயிற்றிலடிக்காதே; ஊதியத்தை உயர்த்திக் கொடு.' என்ற வாசகம் வரவேற்புக் கூறிக் கொண்டிருந்தது.

மயில்வாகனத்தார் பணிவதைத் தவிர வேறொருவழியுமில்லை. ஆனாலும் அவர் மனதில் வர்மம் தணியவில்லை.

இன்னொரு நாள். புவியியல் படிப்பித்துக் கொண்டிருக்கும் ஜெகனைத்தேடி பியோன் வந்தான்.

'அதிபர் இந்தப் பாடம் முடிந்ததும் ஓபீசுக்குவரட்டாம்'

— ஜெகனுக்கு மூட் அவுட்டாகிவிட்டது. 'என்னத்துக்கு ஏன் கூப்பிடுருர்.?

அதிபர் அழைக்கிருர் என்ருல் ஆசிரியர்களுக்கு எமக் கலக்கம்.

அவன் அதிபரின் அறைக்குள் நுழைந்தான்.

''ஜெகன் மாஸ்டர் வாரும்.. இரும். இரும்.. ஏன் நிக்கிறீர்?.'' — என்ற அவரின் உபசரணையே அவனது உள்ளத்தில் உதைப்பாகப்பட்டது.

'என்னத்துக்கு இந்த உபசாரமோ?'

''மாஸ்டர் பொடியள் எல்லாம் எப்படி இருக்கிருங்கள் ஒழுங்காப்படிக்கிருன்களோ?.. ஏதும் குளப்படிகள் ஏதும் செய்யினமே? அப்படி யெண்டாச் சொல்லிப்போடும் ஐ வில் சென்ட் தெம் அவுட்...''

— அவன் மேலும் குழம்பிப்போனுன்.

'ஓ!.. இப்ப கொஞ்ச நேரத்துக்கு முந்தித்தான் சும்மா உம்மட 'பெர்சனல்பைலை'ப்பாத்தன்.. நீர் டிகிறிக்கு எக்கனேமிக்ஸும் செய்திருக்கிறிர், என்ன... 'எனக்கு உம்மைப்பற்றி நல்ல அபிப்பிராயம்... மாணவர்களுக்கும் உம்மில விருப்பம் போல '

அவனுக்கு விழிப்பதைதவிர வேறென்றும் தெரியவில்லை.

'இல்லை இப்பத்தான் சில 'போய்ஸ்' வந்து தங்களுக்கு எக்கனேமிக்ஸ் மாஸ்டர் சரியில்லை... வேறயாரையாவது போடச் சொல்லிக் கேட்டவங்கள்.. எனக்கு உம்மோட ஞாபகம் தான் வந்தது... உம்மை எக்கனேமிக்ஸுக்குப் போடவா?.'

அவனுக்குப் புரிந்து விட்டது. இது விசுவநாதனுக்கு எதிராக எடுக்கும் திட்டம். தன்னைக் கருங்காலியாக மாற்றும் சதி.

— ''என்ன பேசாமலிருக்கிறீர்?''

— ''எனக்குப் புவியியல் தான் வரும்.. பொருளியல்.. செய்யமாட்டன்..''

- ''நீர் அப்படி எப்படிச் சொல்லலாம்... உம்மட டிகிரிக்கு எக்கனேமிக்ஸ் எடுத்தனீர்தானே?...

அவன் தயங்கினன்.

என்ன இப்படிப் பேசாமலிருந்தா?...

''இல்ல சேர்... 'டச்' விட்டுப் போச்சு.. எல்லாரும் பைனல் எடுக்கிற போய்ஸ் பாஸ்ட் குவெஸ்சன்.. மாடல் பேப்பர் எல்லாம் பாத்திருந்தாத்தான் படிப்பிக்கச் சுகம். இல்லாட்டி பொடியளிட்டக் கெட்ட பெயர்தான் வாங்க வேணும்''

''இதுதான... நோ பிராப்ளம்.. எல்லாப் பேப்பரும் இங்க பைலில இருக்குத்தான... ஒருக்காப் பாத்தீரெண்டா எல்லாம் சரியாப்போகும்:.''

''இல்லை சேர்... வேண்டாம் சேர்..'' — உறுதியாகக் கூறினன்.

''வாட்!.. யூ மீன் பை திஸ்..''

''ஐ மீன் வாட் ஐ சே!.''

— அவர் குரலை மாற்றினர். ஜெகனை இழப்பதில் ஆபத்து உண்டு. கெட்டிக்காரன். தனித்துப் போய் முயற்சி செய்ய தயக்கம் காட்டுவபவன்.. தனித்துப் போனல் என்னை விட உயர்த்திவிடுவான். குடும்பப் பொறுப்பு அவனை எந்த வித 'ரிஸ்க்' கும் எடுக்கவிடாமல் தடுக்குது... எவ்வளவு காலம் என்னேட இருக்கிருன். ரியூட்டரியின் எல்லா நுணுக்கங்களும் தெரிந்தவன்.

''எக்ஸ் யூஸ் மி ஜெகன்... இப்ப என்ன செய்யிறது.. நீரும் செய்யாட்டி புது ஆளைத்தான் எடுக்கவேணும் .. இனி விளம்பரம் செய்து இன்டர்வியூ செய்து... ஒரு கிழமை எண்டாலும் செல்லும்..''

''அப்ப விசுவநாதன்?''

'' உண்மையைக் சொல்லுறன். ஒரு தாபனத்துக்கு இரண்டு பேர் தலைமை வகிக்கக் கூடாது.. விசுவை நீக்கிறதைத்தவிர வேறுவழியில்லை.''

''அப்படி ஏதும் ஏற்பட்டால் பல பிரச்சனைகள் வரும்..''

''என்ன! ஸ்டிரைக் தான் செய்வினம்.. ஆனால் பரீட்சை வரும் நேரம். அதனால் வரும் கெடுதியை மாணவர் தான் அறிவர்.. அதனால் விசுதான் வெளியேற வேண்டி வரும்.''

''அப்ப நீங்கள் முடிவெடுத்து விட்டீர்களா?.''

'' முடிவு எடுத்தது மட்டுமல்ல. அவருக்கு டிஸ்மிஸ் ஓடரும் கொடுத்தாகி விட்டது.',

— அவன் திடுக்கிட்டான் அவன் ரியூட்டரிமாஸ்டர் மட்டுமல்ல. சில வெளிவேலைகளுக்கும் அவனைத்தான் மயில்வாகனத்தார் நம்பி அனுப்புவது வழக்கம். அப்படி அவன் வெளியே சென்றிருந்த சமயம் இது நடந்து இருக்கிறது.

'' இப்ப என்ன செய்கிறது ? ''

''நாளையைப்பார்த்துத் தான் பதில் சொல்ல முடியும்.''

அடுத்த நாள் எதை எதையோவெல்லாம் எதிர் பார்த்து மயில்வாகனத்தார் வெள்ளனத்தோடு வந்திருந்தார். முன்பே அவர் சொல்லி வைத்திருந்ததால கிளாக்கர்.. பியோன்... ரைப்பிஸ்ட்.. மேற்பார்வையாளர்.. இந்தவிடயங்களைத் தெரிந்து வந்திருந்த சில ஆசிரியர்கள்... தெரியாத ஆசிரியர்கள் சிலர் என அவருக்கு ஆதரவாக குழுமியிருந்தனர். பல கலைப்பகுதி ஆசிரியர்கள் வருகைதரவில்லை.

ஜெகன் எந்தப்பரபரப்புமின்றி வந்திருந்தான். நேற்று மாலையே அவன் விசுவநாதன், குமரேசன் ஆசிரியர்களைச் சந்தித்தான். கூடிக் கூடிப் பேசினர்கள். நாலாதிசைகளும் பரவி மாணவர்களின் இல்லங்களை நோக்கிப் பறந்தனர். எவருக்கும் எதுவும் தெரிய வழியுமில்லை. இருளில் நடந்தேறிவிட்டசாதனை.

காலை ஒன்பதுமணியாகி விட்டது. கலைப்பகுதி வெறிச்சிட்டுக்கிடந்தது. மற்ற விஞ்ஞானப் பகுதி மாணவர்கள் வந்திருந்தபோதிலும் அங்கு நிலவிய அமைதி அவர்களையும் மௌனமாக வேடிக்கை பார்க்க வைத்தது. மெதுவாக அவர்களிடையே செய்தி காதும் காதும் வைத்தாற் போல பரவ...

எங்கும் வெம்மை பரவும் மௌனம்,

கலைப்பகுதி மாணவர்களுமில்லை. ஆசிரியர்களுமில்லை

என்ன நடந்து விட்டது? எப்படி?

மயில்வாகனத்தார் இருக்கை கொள்ளாமல் தவித்தார்.

சூப்பவைசர்.. கிளாக்கர் எல்லாரும் அவரையே குற்றம் சாட்டுவதுபோல் பார்த்துக் கொண்டிருக்க ..

''ஆ! அதுதான் சரி.. இனி நான் ஆட்ஸ் பகுதியை மூடிவிடப்போறன் . போறவனெல்லாம் போகட்டும்,' எனத் துடித்தார்.

பத்துமணிபோல் வெளியே சென்றுவந்த பியோன் அந்தச் செய்தியைக் கொண்டுவந்தார்

'கேக்கேஸ்' வீதியில் இருந்த புதுக்கட்டிடத்தின் மேல் மாடியில் வகுப்புகள் நடந்து கொண்டிருப்பதாக! - அங்கு ஏற்கனவே ஒரு மாலை நேர ரியூட்டரி வகுப்புகள் நடந்து கொண்டிருந்தது. அவர்கள் அந்தக் கட்டிடத்துக்கு அதிகளவில் வாடகை கட்ட வேண்டியிருந்ததால், இவர்களது காலை நேர வகுப்புகளுக்கு இடம் கொடுத்திருந்தனர். தற்காலிக ஏற்பாடு தான். போகப் போக எல்லாவற்றையும் சரி செய்து கொள்ளலாம்.'

மயில்வாகனத்தாரின் தலையில் முதலாவது இடி அன்று தான் இறங்கியது.

ஆசிரியர்கள் மாணவர்கள் ஒவ்வொருவரையும் தனித் தனியாக சந்தித்துத் தம் குறைபாடுகளை விளக்க—

அவர்களே ஒன்று திரண்டு ஆசிரியர்களுடன் கூடி புதிய ரியூட்டரியை தாபித்தனர். மாணவர்கள் தங்களுக்கான கல்வியைத் தாங்களே தேடிக் கொண்ட முயற்சி — கல்வியாளர்களுக்கு எதிர்காலக் கல்வி பற்றிய சிந்தனைகளை எழுப்பின

இப்பொழுதெல்லாம் விசுவநாதன், குமரேசன் ஆரம்பித்த ரியூட்டரி வளவினுள்ளே ஆசிரியர்கள் வெஸ்பா ஸ்கூட்டர்களில் வந்திறங்கிக் கொண்டிருப்பதும், மாணவ வெள்ளம் தமது சைக்கிள்களை நிறுத்த இடம் தேடிக் கொண்டலைவதும், வகுப்பில் முன் மேசைவாங்குகளில் இடம் பெற ஓட்டப் போட்டி நடத்துவதையும் காணக் காண மயில்வாகனத்தாரின் நெஞ்சம் எரிந்து கொண்டிருந்தது.

'சே! அத்தனையும் எனக்கு வர வேண்டிய செல்வம் அல்லவா?''

'நல்லவேளை ஜெகன் என்னை விட்டுப் போகவில்லை. நான் இந்த ஆட்ஸ் பகுதியை பெருப்பித்துக்காட்டுறன்...'
என்று அன்று அலைய ஆரம்பித்தவர் இன்னும் ஓயவில்லை.

இன்றும் அந்த விடயமாகத்தான் எங்கோ போய்விட்டு வந்திறங்குகிறார்.

கொஞ்ச நேரந்தில் ஜெகனை அழைப்பதாகப் பியூன் கூறிச்செல்கிறான்.

# 7

ஜெகனுக்கு அன்று மனம் சரியாக இல்லை. தலை வலிப்பதுபோல் இருந்தது. அவனுக்கு மூன்று மணிக்குத்தான் இனி வகுப்பு. ரியூட்டரியில் தங்க மனமாக இல்லை. பசிவேளை. ஆனல் பசியில்லை. ஒருவனுக்குப் பசி மந்திக்கின்றதென்ருல் மனதிலிருக்கும் கவலைகள் வயிற்றில் இறங்கிவிட்டது என்றுதானே அர்த்தம்? சப்தம் எதுவுமில்லாத இடத்தில் சற்று ஆறுதலாகப் படுத்து எழும்பினல் கொஞ்சம் நன்ருக இருக்கும்போல் படுகிறது.

பெயிண்டர் கடைதான் இதற்கு ஏற்றது. இந்தநேரம் மற்ற நண்பர்கள் வந்திருக்க மாட்டார்கள். பெயிண்டர் தன்னை மறந்து வேலை செய்துகொண்டிருப்பார். சாப்பிடக் கூடப்போகாமல். அவருக்குச் சாப்பாடு முக்கியமல்ல பசித்தால் ஒரு 'பிளேன்ரீ' போதும். ஏனே சாப்பிடப்பிடிக்காத மனுஷன். பசிக்குப் பிளேன்ரீ...... அதிகம் போனல் மலாயன் கபேயில் சொதியுடன் நாலு இடியப்பம். ஒருவேளை கடைச்சாப்பாடு சாப்பிட்டுச் சாப்பிட்டே சாப்பாட்டில் ருசி, ஆசை எல்லாமே அற்றுப்போய்விட்டதோ?

அவரைத் திருமணஞ் செய்ய வற்புறுத்த நாலு பெரிய வர்கள் இல்லை. இன்று அவரே பெரியவராகி விட்டதால்... இல்லை இல்லை. தோற்றத்தில் மட்டும்... அவரே தன்னிடம் வரும் தோழர்களுக்குக்கூட தந்தையின் தானத்திலிருந்து அவ்வப்போது ஓரிரு வார்த்தைகளில் அறிவுரை கூறுவார். திருமணம் ஆகியிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என எண்ணினான். அதேவேளையில் சிரிப்பும் வந்தது. அவருக்குத் திருமணமாகியிருந்தால் நானோ நண்பர்களோ இப்படிச் சுதந்திரமாக வந்து தங்கமுடியுமா?

திருமணங்கள் பூவிலங்குகளா? மனிதனைச் சமூகத்திலி ருந்து பிரிக்கிறதா? பிணைக்கிறதா?

அவன் பெயின்டரின் கடையை அடைந்தபோது அவர் எங்கோ புறப்படத்தயாராகி வெளிப்பூட்டை எடுத்துக் கத வைச் சாத்திக்கொண்டிருக்கிறார். அவன் வருவதைக் கண்ட தும் சாத்திய கதவைத் திறந்துவிட்டுப் பூட்டை உள்ளே வைக்கிறார்.

''அவசரமாகப் பெயின்ட் கடைக்குப் போறன். நீங்கள் உள்ளே போய் இருங்கள்.. இப்ப வந்திர்றன்...''

அவன் அறைக்குள் நுழைகிறான். பக்கச்சுவருக்கு அப் பால் புனிதம் வேலைசெய்யும் கடை. கூரைக்கும் தடுப்புச் சுவருக்குமிடையில் காற்று வெளிச்சம் வருவதுபோல் திறந்த வெளி. அங்கு பேசுவதெல்லாம் இங்கு நன்றாகக்கேட்கும். அதேபோலவே இங்கு பேசுவதும்.

அவன் சுவரோரமாக இருந்த கட்டிலில் சாய்கின்றான். எதுவோ தன்னை மயக்கி, தலையைச் சுற்றிக்கொள்வது போல.

உச்சிப்பொழுது.

தார் வீதியில் சூரியன் தனது வெயில் கடையை வாங் குவார் எவருமின்றி விரித்திருக்கின்றது. சனநடமாட்டம் இல்லாமல் வெறிச்சிட்டுக் கிடந்த நிலை கண்டும் கொஞ்சம் பொறுத்து கடையைச் சுருட்டலாம் எனக்காத்திருக்கிறது.

கடைகள் பூனைத்தூக்கம் போட்டுக்கொண்டிருக்கின்றன.

கடைச்சிப்பந்திகள் மதிய உணவுக்காக வீட்டிற்கோ, பக்கத்தில் உள்ள மலாயன் கபேக்கோ, வை. சி. சி. கு. வுக்கோ, சிற்றி பேக்கரிக்கோ. முஸ்லிம் ஹோட்டலுக்கோ போயிருக்க முதலாளிமார் வீட்டிலிருந்து வரும் சாப்பாட்டுக்காகக் காத்திருக்கவோ சாப்பாட்டுப்பாத்திரத்தின்முன்போ குந்தி இருக்கவோ செய்கிறார்கள். கடைகள் ஈயோட்டிக் கொண்டிருக்க... 'இந்த நேரத்தில் ஆர் வியாபாரத்திற்காக வரப்போகிறார்கள்...' என்ற அநுபவ எண்ணத்தில் சில முதலாளிகள் தங்கள் 'நாஷனலை' கழற்றிவிட்டு... உஷ்... ஆ... என்று தேகத்தில் ஆறுகப் பெருகிவரும் வியர்வை வெள்ளத்தை பெனியனினால் துடைத்துச் சுகம் கண்டுகொண்டிருக்கிறார்கள்.

அன்று புனிதமும் முதலாளியும்தான் தனித்திருக்கின்றார்கள்.

மற்றப்பெண்கள் தங்கள் சாப்பாட்டை முடித்துக் கொண்டு... சாப்பாடா... வயதுவந்த பிள்ளைகளின் அந்தச் சாப்பாடு...

அரைறாத்தல் பாணும் இரண்டு வாழைப்பழமும்தான். பிறகு இருக்கவே இருக்கு... மாநகரசபை தெருக்குழாயில் விடும் திருநெல்வேலித் தண்ணீர்.

பஸார்வீதியிலுள்ள முஸ்லிம் ஹோட்டல், சைவக்கடைகளிலிருந்து வரும் சாப்பாட்டு வாசனை அந்த இளம் நாக்குகளில் நீரூறச் செய்யும். ஆனால்... அவர்கள் உழைப்புக்கு சம்பாத்தியத்துக்கு... அவையெல்லாம் கட்டுபடியாகுமா?

தைத்துக் கொடுக்கும் உருப்படிகளுக்குக் கணக்குப் போட்டு முதலாளி நாளொன்றுக்குக் கொடுக்கும் பத்துப் பன்னிரண்டு ரூபாயில் மரக்கறி றொட்டியே சாப்பிடமுடியாத போது, இவர்கள் முழுச்சாப்பாட்டினை எங்கே காணுவது—? பிறகு போக்குவரத்துச் செலவு, உடுபுடவைத்துணிகள்.....

அவர்களின் கனவுகளுக்கு வடிகாலாக அமையும் வாராந்தத் திரைப்படம். .. இவற்றிற்கு யாரிடம் போய்க் கையேந்துவது...

கானலில் பிறக்கும் வானவில்கள் இவர்கள்.

மத்தியான சாப்பாட்டு இடைவேளையில் எல்லாரும் எங்கே போயிருக்கிருர்கள்? அது மிகவும் அந்தரங்கம். நாசூக்கான விஷயம். அதுவும் பெண்களைப் பொறுத்தவரை அவர்களின் ஆளுமையைப் பறிக்கிற விசயம். அது வேருென்றுமில்லை.

இயற்கை உபாதையை நீக்க அதற்கான வசதிகொண்ட சில கடை நண்பிகளை சுகம் விசாரிக்கச் செல்வது போல் சென்று

கௌரவமாகத் திரும்பிவரப் போயிருக்கிருர்கள்.

ஏழைகளின் வாழ்வில் கௌரவம் எங்கெல்லாம் ஒட்டிக் கிடக்கிறது? ஒட்டக்கூடாத இடங்களிலெல்லாமல்லவா ஒட்டிக்கிடக்கிறது.

—கடையில் பெண்களுக்கான 'உருப்படி'கள் தயாரிப்பதுதான் முக்கிய வேலை. ஏழெட்டுப் பெண்கள் வேலைசெய்கிருர்கள். ஆறு தையல்மிஷின்கள் இருக்கின்றன. பிரா... பாவாடை... கவுன் .. பிளவுஸ்... சீலைத்தொப்பி... என 'றெடிமேற்' தயாரிப்புகளுடன், வெளித்தையல் வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

—பேரேட்டைப் புரட்டிக்கொண்டிருந்த முதலாளி தலை நிமிருகிருர். ஓய்வு வேளையில் சும்மா இருக்க மனமில்லாமல், வெட்டு மேசையிலிருந்த வெட்டுத்துணிகளையும் கழிவு கூளங்களையும் ஒதுக்கிக்கொண்டிருந்த புனிதம் கண்ணில் படுகிருள்.

வெளியே போயிருக்கிற பிள்ளைகள் வந்தபின்தான் அவர் சாப்பிட வீட்டுக்குப் போவார். சாப்பாட்டின் பின் ஒரு குட்டி உறக்கம் போட்டு எழுந்து தேனீர் குடித்துவிட்டு மீண்டும் கடைக்குவர எப்படியும் நான்கு மணியாகிவிடும்.

பிறகு ஐந்து மணிக்குப் பிள்ளைகள் வேலைமுடித்துக்கொண்டு போன பின்பும், கடையில் அவர் இருந்து கணக்கு வழக்குப் பார்த்து, மற்றக்கடை முதலாளிகளுடன் கொள்வனவு கொடுப்பனவுப் பிசகுகளைத் தீர்த்துக் கடையை மூடிவிட்டு வீட்டுக்குப்போக இரவுச்சாப்பாட்டு நேரமாகிவிடும்.

''புனிதம்... அங்க பாரும்... அலுமாரிக்கு மேலே கிடக்கிற 'பிரா' பெட்டிகளை... ஒரே தும்பும் தூசியுமாய்க்கிடக்குது... 'ஸ்ரொக்' எடுக்க வாறவன்கள் அதுகளைப்பார்த்துவிட்டு பழசு எண்டு கடத்திப் போடுருன்கள். அதுகளை எடுத்துத் தூசி தட்டிப் பார்வையாக அடுக்கி வையும்...''

—புனிதம் கடைக்குள்ளிருக்கும் சிறு ஏணியை எடுத்துக்கொண்டு அலுமாரி மூலையை நோக்கிச் செல்கிருள். முதலாளி மீண்டும் பேரேட்டில் மூழ்கி விடுகிருர்.

புனிதம் ஏணியில் ஏறி, தூசி பறக்காமல் பதனமாகத் தட்டித் துடைத்து வேறு கோணத்தில் அடுக்கிவைக்கிருள்.

பேரேட்டில் மூழ்கியிருந்த முதலாளி மெல்லத் தலையை உயர்த்திப் பார்க்கிருர். அவரிருந்த இடமும், புனிதம் ஏறி இருந்த கோணமும் அவரைத் திக்குமுக்காடச் செய்கிறது. ஏணியில் பதவிசாகப் பதிந்திருந்த புருப்பாதங்களும் வெண்மைப்பஞ்சும்... சற்று சரிவாக நின்று குனிந்திருந்ததால் மேலேறிய அரைப்பாவாடையும் தொடைகளும்... கைகளை உயர்த்தி வேலை செய்வதால் வஞ்சகமின்றித் தெரிந்த மார்பகங்களும்...

பேனையை மேசையில் போட்ட முதலாளி வாய்பிளந்தவாறு விழி பிதுங்க... வைத்தகண் மூடாது...

பெண்களுக்கே இயல்பாக அமைந்த குணம்— ஒருவனின் சாதாரண பார்வைகளிடையே... வெற்றுச் சொற்களிடையே... பொருளற்ற செயல்களிடையே... அவனது மனதைப் படித்துவிடும் ஆற்றல் அந்த நிசப்தத்திலும் ஏதோவொரு உணர்ச்சி தூண்டத் திரும்பியவள்—

—திடுக்கிடுகிறுள். பரபரவென்று கீழிறங்குகிறுள்.

—முதலாளிக்கு முகம், உடலெல்லாம் வேர்த்து வழிகின்றது.

—'அவள் என்ர கள்ளத்தைக் கண்டு பிடித்துவிடுவாளோ சாய்... இதிலென்ன கள்ளம்... எல்லாற்ற கடையிலும் நடக்கிறதுதானே... காணு செனு மூணு... இதைப்பற்றியெல்லாம் கதைகதையாய்ச் சொல்லேக்க ஏதோ சிரிக்கிறதுக்காகச் சொல்லுருன் எண்டு நினைச்சது பிழைபோலக் கிடக்குது.. இதென்ன அப்படி ஒரு பெரிய காரியமா..? அதுகளுக்குக் காசு இல்லாதகுறை... கலியாணமும் கட்டாமல் பெருமூச்சு விட்டுக்கொண்டு கிடக்கிறதுகள் அதுகளைச் சரியானபடி 'ரகிள்' பண்ணிஞ அதுகளுக்கும் நன்மை எங்களுக்கும் சுக...ம்'

—''என்ன புனிதம் அதுக்குள்ள இறங்கியிட்டா. வேலை இன்னும் முடியேல்லப்போல கிடக்கு...'' அவர் தொண்டை கரகரக்கிறது.

—அவளுக்கு அவமானம் பற்றிக்கொண்டு வருகிறது.

—'இந்தாளுடைய வயதென்ன? என்ர வயதென்ன? இந்தாளுடைய மகளுக்குக்கூட என்னைவிட வயதுகூட இருக்கும் அதுக்குள்ள பாரன் பார்வையை... கள்ளப்பிராந்து மாதிரி..'

''என்ன புனிதம் பேசாமல் நிற்கிருய்.? போய் வேலையைப் பாரன்'

''என்னுல முடியாது. வேணுமெண்டால் நீங்கசெய்யுங்க'

'நான் தனியச் செய்யேலா... நீயும் வா...'' —முதலாளி என்ன கதைக்கிருேம் என்ற உணர்வின்றி வார்த்தைகளைச் சிதறவிடுகிருர்.

'நாயே.. என்னடா சொன்னுய்...? ஆரைக் கூப்பிடுகிரு... போய் உன்ர அம்மாவைக் கூப்பிடு...''

''என்னடி... என்னை நாயெண்டா சொன்னாய்... இப்ப என்ன நடந்திட்டுதுடி... உனக்கென்ன அமரா பிடிச்சிருக்கு மட்டுமரியாதை இல்லாம..''

''உனக்கு மரியாதை வேணுமோ... கட்டாயம் மரியாதை கொடுக்கிறன் பார்...''

கீழே கிடந்த செருப்பால் அவர் முகம், தலையெல்லாம் அடிவிழ தொடங்குகிறது.

அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பவனை எதுவோ உலுக்கி எழுப்புகிறது. என்ன ஏது ஒன்றுமே புரியவில்லை. பெயிண்டர் இன்னும் வரவில்லை. நித்திரைக்கலக்கம் கலையவில்லை. அறையினுள் தற்போது இள இருட்டு நிலவுகிறது.

யாரோ யாரையோ அடிக்கிறார்கள்..?
சீற்றத்துடன் ஒரு பெண்குரல்.
ஓ! எங்கிருந்து இந்தக்குரல் கேட்கிறது?
அவன் உடலெல்லாம் வியர்த்து — வழிந்தோட
ஓ! பக்கத்துக் கடையில்
ஏதோ ஒரு அநர்த்தம்...

'விருட்'டென எழுந்து 'சேட்'டை எடுத்து மாட்டிக் கொண்டு அடுத்த கடைக்குப் பாய்ந்தோடுகிறான்.

அங்கே அவன் கண்ட காட்சி!

அந்தப்பெண்... அவன் பார்வையில் அடிக்கடிபட்டு... அடிபட்டு... அவன் இதயத்திலே ஊமைக்காயங்களை ஏற்படுத்துபவள்- அடிப்பவளே காயம்படும் பார்வைக் கலகமா? அவனின் இதயத்தை அவ்வப்போது சுரலய ஞானங்களிடையே அதிரவைத்துக்கொண்டிருப்பவள். அடுத்தவர் அறியாத மானஸசஞ்சாரம்தான்.

ஒருநாள் எவள் நினைவாகவோ, அல்லது அவள் நினைவாகவோ அவன் எழுதிய கவிதையென வரிகள்...

*நான் கவிதை எழுத*
*ஆசைப் பட்ட போது*
*நீ கண்ணில் பட்டதால்*
*கவிதை காதலாகி விட்டது.*

அந்தப்பெண்ணு இப்படிச் சக்தியின் பேருருவென எழுந்து,

அவன் பாய்ந்து சென்று அவள் கையைப்பற்றி, செருப்பைப் பறித்து எறிகிருன். அவள் திடுக்கிட்டுத் திரும்பிய கணத்தில், அவனென உணர்ந்து, அவமானத்தால் குன்றிய அதேவேளையில், மனதில் ஒரு தெம்பு பிறக்கிறது. மறுகணம், ஏனே இதுவரை கோபத்தால் கொந்தளித்துக் கொண்டிருந்த அவள் அவனேக்கண்ட ஆறுதலில் ஓவெனக் கதறுகிருள்.

முதலாளி அவமானத்தால் கூனிக்குறுகி... கலேந்த தலேயைச் சரிசெய்தவாறு... மேசையின் விளிம்பைச் சுரண்டிக் கொண்டு ..

''முதலாளி என்ன பிரச்சனே... என்ன நடந்தது...?''

— இருவரும் மௌனம் சாதிக்கிருர்கள்.

''இப்படி இருந்தா எப்படி ? என்னதான் நடந்தது...?''

''என்ன நடந்தது ? ஒண்டுமே நடக்கவில்லே... ஒண்டுமேயில்லாததுக்கு இப்படிக் காளிவேசம் போட்டா...''

''என்ன!... ஒண்டுமே நடக்கேல்லேயோ... படுவா... பாசாங்கா செய்யிரு...''

''சரி சரி நீதான் நடந்ததைச் சொல்லன் ?'' என்று முதலாளி ஆவேசமாகக் கூறுகிருர்.

அவளால் எதுவும் கூறமுடியவில்லே. முதலாளியின் தவருன பார்வை புரிந்தது. நோக்கம் புரிந்தது. பேச்சும் புரிந்தது. ஆனல்...

அவற்றை எப்படி எடுத்துச் சொல்வது? தூல சாட்சியங்கள் வேண்டாமா??

''நீ கேள் ஜெகன், அவளின் கையைப் பிடிச்சஞ காலைப் பிடிச்சஞ...? கட்டியணைச்சஞ...? இப்ப இவள் எனக்குக் காரணம் சொல்லவேணும்...''

அவனுள் ஆத்திரம் கனன்றது.

''எளியவா என்னடா சொல்லுருய்...? மற்றப்பிள்ளையளோடை நீ விடுகிற சேட்டையளை என்னிலை விடப்பார்க்கிருய் என்ன? பாவம் அதுகள். வெளியில சொல்லவும் மாட்டாமல், வேலையை விடவும் மாட்டாமல் தவிச்சுப்போய் ஒண்டுக்கு ஒண்டு தனிமையில சொல்லிச் சொல்லி அழுகிறது உனக்கு எங்க தெரியப்போகுது நல்லவேளை... நீ எல்லை மீருமல் இருக்கிறவரை தப்பிப்போருய்?''

''சரி சரி... போதும்... முதலாளியார் நீங்க வேலையைப் பாருங்கள். நீங்கள் லீவு போட்டுட்டு வீட்டைபோய் நிம்மயாய் இருந்திட்டு நாளைக்கு வாங்க...''

''இவனிட்டையோ... நானே .. இனியோ...''

''கோபத்தில பேசிறியள்... எல்லாம் நாளைக்குப் பேசலாம் இப்ப இந்த இடத்தைவிட்டு வெளிக்கிடுங்க ''

— அவள் தனது கைப்பையை எடுக்க உள்ளே போகிருள்.

''முதலாளியார் ஒண்டும் யோசிக்காதையும்... இங்க இதுகளைப்போல எவ்வளவு நடக்குது... இந்தச்சமூக அமைப்பு மாருதவரை உங்கட ஆதிக்கங்களும் சபலங்களும் உங்களை விட்டு நீங்கமுடியாது நல்லவேளை மற்றப்பிள்ளைகள் இருக்கேல்ல ''

— அவன் கடையைவிட்டு வெளியேறுகிருன்.

# 8

மாலைகள் எடுக்க, குட்டியன் தளநார், இயணக் கூடு, முட்டிகள் சகிதம் வந்து கொண்டிருக்கிறான். மன தில் ஏதோ தெளிவில்லாத கலக்கம். முதலியின் சமீபகாலப் போக்குகள் அவனைத் தடுமாறச் செய்துகொண்டிருக்கின்றன.

ஏதோ நடக்கப்போகிறது? நடக்கிறது. நடந்தேதான் தீரும்....

அவன் ஒரு பனையின் அடியில் நின்று, கால்களைத் தட்டி மணலை உதறுகிறான். ஒரு கையை எட்ட உயர்த்தி, மறு கையை நெஞ்சுக்குத் தாக்கமில்லாதவாறு ஊன்றி உன்னி எழும்ப முயற்சிக்கையில் முதலியும் அவர்தம் கையாள் முத்துவும் நாலைந்து பேரும் வருகிறார்கள். அவர்கள் கையில் கோடரி, அலவாங்கு மண்வெட்டி என்று காணப்படுகிறது. எங்கோ வளவு துப்பரவாக்குகிறார்கள். தறை புரட்டுகிறார்கள்,

அவன் அவர்களைக் கவனியாத பாவனையுல் ஏற முற்படுகிறான்.

''ஐயா... குட்டியன் நிற்கிருன்''

''குட்டியனே ஆள் எங்க .. நானும் நாலைஞ்சு நாளா ஆளைப் பாக்கவேணும் பாக்கவேணும் எண்டு இருக்கிறன்''

''அங்க பாருங்க ஐயா .. பனையடியில...''

''என்ன குட்டியன் ? இப்ப நீங்களெல்லாம் பெரிய ஆக்களாயிட்டிங்கள் பேந்தென்னை கண்டும் காணுதமாதிரித் தான் நடப்பியள் ..''

'சட்'டென்று நிலத்தில் குதித்து, தளநாரைத்தட்டி விட்டு இயணயக்கூடு 'கடகட'க்க அவன் ஓடிவருகிருன்.

''நயினுர் வரச்சொல்லிக் கூப்பிட்டனுப்பினியளாம்''

''ஓம் ஓம்... கூப்பிட்டு நீ உடன வந்திட்டாய்... என்ன...?''

''இல்லை ஐயா ..வீட்டில நாச்சியார் சொல்லேல்லையா... நான் வந்தனுன் .. நீங்கள் அப்ப வீட்டை இல்லை ..''

''நான் இல்லையெண்டா, நீ பேந்து அடிக்கடி வந்து நான் இருக்கிறனு இல்லையா? எண்டு பார்க்கிறதில்லையா...?'

'நயினுர் கோபிக்கப்படாது .. வேலை கூடிப்போச்சு... வயதுமாகிப்போச்சு முன்னயப்போல இப்ப ஓடி ஆடி உழைக்க முடியாம இருக்கு... அதுதான் பேந்து... நயினு ராணை அயத்துப்போனன்...''

''அதைச்சொல்லத்தான் உன்னைக் கூப்பிட்டனுன்... நீயோ வேலை கூடிட்டுது எண்டு நிக்கிருய்... இந்த ஐம்பது பனையளோடை... தோட்டம் துரவுகளையும் வயல் வரம்பு களையும் பார்க்கிறதெண்டாச் சும்மாவே... அதுதான் சொல் லுறன் பேசாம நீ உன்ர தோட்டக்காணியளை எண்னட் டைத் தா .. ஏதாவது கையில வாங்கிக்கொள்... பேசாம வீட்டில இருந்து சுகம் அனுபவிக்கிறதை விட்டிட்டு இந்த வயசிலும் நீ இப்படி யாருக்காகக் குத்தி முறியிரு...? இருக் கிறது ஒரே பெட்டை .. அவளும் ரவுனில கை நிறையச்

சம்பாதிக்கிருள் பேந்தென்ன ராசா மாதிரி இருந்து... போறவழிக்குப் புண்ணியம் தேடவேண்டியதுதான்...''

''நயினருக்கு எப்பவும் பகிடிதான்... இது உழைச்சு உழைச்சு உரமேறிய உடம்பு. உழைக்காட்டித்தான் சோம்பி விழும். .. உழைக்ஜாமல் நாலு நாள் இருந்தால் போதும்... உலகமே வெறுத்துப்போகும் ..''

''சரி... சரி... உனக்குத்தரன் பனேயளிருக்கே... மேலதிக மாகத் தோட்டம் எதற்கு...''

''எதுக்கோ... எங்கட மூண்டு சந்ததியளின்ர வியர்வை களில உருவான பூர்வீகச்சொத்தை ஆராவது விட்டுவிட மனம் வருமோ?

''குட்டியனுக்கு நான் என்ன சொல்லுறன் என்று புரி படேல்லே... இப்ப உன்னே என்ன கேட்டன் . ? காணியை என்னட்டைத்தா . காசை வாங்கி... வங்கியிலயோ... வட் டியிலயோ போடு... வேலே செய்யவேணுமெண்டு இருந்தா நீயே காணியைப் பாத்துச்கொள் .. பேந்தென்ன ?''

''நயினர்... இந்தக்காணியை வித்து அதில வாற வட் டியில வாழுற அளவுக்கு எனக்குத் தேவையுமில்லே... அவ சியமுமல்ல .. என்னுடைய உயிரும்... இந்தப் பூமியிலதான் உரமாகவேணும் எண்ட நினேப்போட வாழுறவன் நான் ''

ஏளனமாகச் சிரிக்கிருர் முதலி.

''ஓம்... ஓம் உங்கட ரத்தமும் வியர்வையும் எந்தள விற்கு இந்தக்காணியை உரிமையாக்கி இருக்கு எண்டு எனக்குத் தெரியும்...? குடிக்க வந்த என்ர பாட்டனே மயக்கி வாங்கிய காணியை வைச்சுக்கொண்டு ஏதேதோ பேசுகின் ருய்? கேக்கிறவன் என்ன விசரன் பைத்தியகாரன் எண்ட நினேப்பே...?''

''நயினர்... நயினர் .. என்ர மரியாதையைக் காப்பாற் றுங்கோ...!'' — என்று கூச்சலிடுகிருன். எல்லாரும் அதிர்ந்து போய் நிற்கிருர்கள், அந்தக் கலட்டிப்பூமியிலே புதியதொரு செந்நிறப்பூ அந்த இருளிலே மலர்கின்றேன் என்பது தெரி யாமல் மலர்ந்து விடுகிறது. அந்த இரவுநேரப்பூ மலர்ந்த நீலாம்பரி ராகத்தின் அதிர்வுகளில் சிலேயாகி முதலி நிற்க...

குட்டியன் வேகமாகப் போய் பனேயேறுகிருன்... சரக்... சரக்.. கடக்... கடக்... 'என்ற தளநார் இயணக்கூட்டுச் சப்தம் எங்கும் பரவுகிறது...

முதலியின் முகத்தில் வெப்பம் குடியேற, வெறிபிடித்த வராய்க் கத்துகிருர்.

'பிடியுங்கடா அந்த வெறிபிடித்த நாயை... கண்ட துண்டமாக வெட்டிப்போடுங்கடா... என்ன நடந்தாலும் நானிருக்கிறன்... ஒண்டுக்கும் பயப்படாதேங்கோடா... ஆயி ரம் ஆயிரமாயெண்டாலும் செலவளிச்சு நான் உங்களே வெளியில எடுப்பன்... இந்த எளிய நாய்களால எங்கட கிரா மத்தின்ர ஆசாரமே கெட்டுப் போச்சு... இதுகளேத் தலே யெடுக்கவிட்டா அவ்வளவுதான்... இப்பவே பாத்திங் களாடா... உவங்களின்ர பேச்சை...

''ஐயா... அவன் மரத்தில ..''

''மரத்தில எண்டா என்னடா...? மரத்தைத் தறிச்செண்டாலும் ஆளே விழுத்துங்கோடா -- இது மற்ற வையளுக்கும் ஒரு பாடமாக இருக்கும். வடுவா... ராஸ் கல்... அவன்ர வாயைப்பார்... கிழிச்சுத் தைச்சுப்போடுவன்''

— பனேமரத்தின் அடியில் கோடரியின் நாக்குகள் விழ ஆரம்பிக்கின்றன.

'டக்... டக்... டக்...''

— குட்டியன் குனிந்து பார்க்கிருன்.

'ஆ ! பாவிகள் என்ன வேலே செய்யிறியள் ?''

வெட்டுக்கள் வேகமாக விழுகின்றன.

'ஓ! .. ஹோ .. ஹோ! ? — குட்டியன் குரல்விட்டுக் கூவுகிருன்.

பனங்கிளிகள் பனேயோலேகளிடையே தட்டுத்தடுமாறி படபடத்து இறக்கைகளே அடித்துப் பறந்தபடி வட்டமிடுகின்றன,

மரம் வெட்டும் ஓசையும் அவனின் அபயக்குரலும் கிளிகளின் பதகளிப்பும் இருளினிடை நாற்புறமும் திசை சுழலச் சுழல ஒலிக்கின்றன.

யாரோ ஓடிவரும் சப்தம் கேட்க, வெட்டுவதை நிறுத்த, முதலி ஆத்திரத்துடன் கத்துகிருர்.

''டேய் ஒண்டுக்கும் பயப்படாதேங்கோடா... எந்த மசிர் வந்தாலும் பயமில்லே ..''

பாதைச் சலசலப்புக்களிடையே நாகன் தோன்றுகிருன்.

'இவன் எங்க இப்பவந்தான் முணுமுணுத்தார் முதலி ஆள் பொல்லாத முரடு... கையில என்ன இருக்கு பாத்தியளே .. உதுகளுக்கு காதுகேட்கா விட்டாலும் விழிப்புலன் அறிவு கூட... சூழல் வித்தியாசத்தில் எல்லாம் விளங்கி விடும் .. மிருகங்கள் போல...'

'ஓம் நயினர் உவனும் கோபம் வந்தால் மிருகத்தை விட பொல்லாதவன் '

— ஓடிவந்த நாகன் மரத்தையும் மரத்திலிருப்பவனேயும் பார்த்துவிட்டு முதலியின் கூட்டத்தை பார்க்கிருன். ஒரு கணம் எல்லாம் விளங்கி விடுகிறது.

ஹோ... என்று சத்தமிட்டுப்பாய முதலிக் கூட்டம் சிதறுகிறது.

# 9

ஜெகன் கிணற்றடியில் சென்று முகம் கழுவி பெயிண் டரின் துவாயால் முகம் துடைத்து, அவரது சீப்பு, பவுடர் எல்லாவற்றையும் பயன்படுத்தி ;வெளிக்கிட ஆயத்தமாகவும், அவர் உள்ளே நுழையவும் நேரம் சரி யாக இருக்கிறது.

''தலையிடி இப்ப எப்பிடியிருக்கு...''

''எங்களுக்குத் தலையிடி எண்டால் நோய் மட்டும் தானு? எத்தனையோ தலையிடிகள்... இந்தத் தலையிடி இப்ப கொஞ்சம் சுகம். நான் ரியூட்டரிக்குப் போறன். யாரும் வந்து விசாரித்தால் சொல்லுங்க...''

''ரீ கூடச்சாப்பிடாமல் போறன் எண்டுறியள். நீங்கள் வரேக்க நான் பெயிண்ட் வாங்க வெளிக்கிட்டிட்டன். உட னடியாக வந்திடலாம் எண்டுதான் போனன் எல்லாரும் வலுகள்ளைகள்... இஞ்சபாரும் இந்தக்கலர் அதிகம் தேவைப் படாது... எப்போதாவதுதான் கட்டாயமாக இந்தக் கல ரில எழுத வேண்டும் எண்டு கேப்பினம்... அதால இதை

முழு டின்னுக வாங்கி வைக்கிறதில்லே. லூசா வாங்கப் போனு .. நிறையத் தின்னர் கலந்து வித்திடுருங்கள் காசும் கூட... வாடிக்கைக்காரர்கிட்ட நாங்கள் பொல்லாப்பு வாங்க வேண்டியிருக்கு... சரி... சரி... வாங்கவன் ஒரு ரீ சாப்பிட்டுப்போகலாம் ''

''வேண்டாம் . நீங்கள் உங்கட வேலேயைப் பாருங்க... இப்ப ரீக்குப்போய் வாறதுக்கு ஒரு அரைமணித்தியாலம் எண்டாலும் செல்லும் நான் கனநாளாய்ப்பேரச்சு வீட்டை போய்... ஒருக்கா போய் வரலாம் எண்டு நினேக்கிறன்...' என்றவாறு வெளியே வருகிருன் ஜெகன்.

வாசலில் அவனே எதிர்பார்த்துக் காத்திருப்பவள்போல எதிர்ப்படுகிருள் புனிதம். அவனேக் கண்டதும் அவள் முகம் மெல்ல மலர்கிறது. சற்று நேரத்திற்கு முன்னர் நடந்தது எதுவுமே புலப்படாத மாதிரி இருக்கிறது. அவனே அறியா மல் அவன் உதட்டில் அறிமுகப் புன்னகை விரிகிறது. ஏதோவொரு விதத்தில் நெருங்கிய இறுக்கம் ஏற்பட்டது போன்ற உரிமை எண்ணம் எழுகிறது.

''என்ன வீட்டுக்குப் புறப்பட்டாச்சோ...''

அவள் ஓமெனத் தலேயசைக்கிருள். அவனே மெல்ல விழிமடலே உயர்த்திக் கேட்கிருள்:

''உங்களுக்கு ஏதும் அவசரவேலே இருக்குதா...?''

''இல்லே... இல்லே ... ஏன் ...?'' — பெயிண்டரிடம் தான் கூறியதென்ன? இவளிடம் கூறுவதென்ன?

''என்னேட கொஞ்சம் பஸ்-ஸ்ராண்ட் வரை வரமுடியுமா?,

''வித் பிளஷர் ... அதேவேளேயில் நானும் பஸ்-ஸ்ராண்டுக்குத்தான் போறன் ..''

இருவரும் நடக்கத் தொடங்குகிருர்கள்.

''நான் உங்களே ஒண்டு கேக்கப்போறன். கோபிக்காமல் பதில் சொல்லுவியளே! வித்தியாசமாக ஒண்டும் நினைக்க மாட்டியளே !''

அவன் மனதில் ஆயிரம் வண்ணத்திப்பூச்சிகள் இறக்கைகள் அடித்துப் பறக்கின்றன. விழிகள் படபடக்க அவளே ஏறிட்டு நோக்குகிருன்.

'நீங்கள் அப்ப முதலாளியிடம் கூறிய வார்த்தைகளைக் கேட்டபோது... இப்படி எங்களைப் போல வேலைக்குப்போற பெண்பிள்ளைகள் எல்லாம் கெட்டுப்போற மாதிரியும் இதெல்லாம் இங்கே சகஜம் என்பது போலவும் பேசின மாதிரிப்பட்டது... நான் உங்களிடமிருந்து இத்தகைய கருத்தை எதிர்பார்க்கவில்லை... பக்கத்துக் கடையில் இருந்து நீங்கள் .. உங்கள் நண்பர்கள் எல்லாரும் பேசிறதை எல்லாம் நாங்கள் கேட்டுக் கேட்டு உங்கள் மீதும்... உங்கள் நண்பர்கள் மீதும் எவ்வளவு கௌரவமான எண்ணம் கொண்டிருக்கிறம் என்பது உங்களுக்குத் தெரியாது... அப்படிப்பட்ட உங்கள் வாயிலிருந்தா இப்படிப்பட்ட வார்த்தைகள் வெளிவந்தன..'

அவன் எதிர்பார்த்தது என்ன?

அவள் கூறியது என்ன?

ஏமாற்றம் நெஞ்சை நிரப்பினலும், அவள் அவனைத் தவருகப் புரிந்துகொண்டிருப்பதை மாற்றவேண்டும் என்ற ஆவேசம் அவனுள் எழுகிறது.

''நீங்கள் என்ரை பேச்சைப் பிழையாக விளங்கிக் கொண்டிருக்கிறியள். எனக்கு எப்பொழுதுமே தற்போது இருக்கிற சமூக அமைப்பில் ஒரு தார்மீகக் கோபமுண்டு. இதனல் சமூகத்தில் உயர்ந்தவன்... பணம் படைத்தவன்... ஏன் படித்தவன் பதவியிலிருப்பவன் என்ற வேறுபாடின்றி

எதனேயுயே நேருக்கு நேர் கேட்டு விடுபவன்... நெஞ்சில் எதையுமே வைத்திருக்கத் தெரியாதவன்... ஆக்களுக்குத் தக்கபடி முகமூடி அணியத் தெரியாதவன்... அதுசரி உங் களுக்கு இப்ப சமூகத்தில பணத்தைவிட எதற்கு மதிப்பு எண்டு...?'' - என்று பேச்சை நிறுத்துகிருன். அவள் புரி யாத பாவனேயில் அவனேப் பார்க்க அவன் வாய்விட்டுச் சிரிக்கிருன்.

''இந்த முகமூடிக்காரங்களுக்குத்தான் மதிப்பு அதிகம். ஆளுக்காள் ஆயிரக்கணக்கில் இந்த முகமூடிகளே அணிவ தால் யாரை எந்த முகத்தில் எப்போது சந்தித்தோம் என் பதே புரியாமல் முகமூடி போட்டவனுக்கே சொந்தமுகமே மறந்துபோய்... அல்லது மறைந்துபோய் விட்ட நிலேயில் முகமூடிகளுக்கு அபார மதிப்பு... அப்படிப்பட்ட நிலேயில் ஒருவன் முகமூடி போடாமலே தார்மீகக்கோபம் கொள்வது எவ்வளவு தோல்வியைத் தழுவும் தெரியுமா...? நான் முக மூடி அணியாததாலதான் இண்டைக்கு இந்த ரியூட்டரியில என் ஆத்மாவையும் உடலேயும் கருக்கிக் கொண்டிருக் கிறன்...''

''ஜெகன் நீங்கள் உணர்ச்சிவசப்படுகிறீர்கள். உங்களேப் போன்றவர்கள் இப்படி உணர்ச்சிவசப்படக்கூடாதே...''

''உண்மைதான்... பல்கலேக்கழகத்தில் படிக்கும்போது சிறந்த மாணவனுக... சுயசிந்தனே உள்ளவனுக.. ஏன் மாணவர் சங்கத் தலேவனுக இருந்தவன்தான் நான். ஆனல் பல்கலேயும் கற்பிக்கும் இடத்தில்கூட சுயசிந்தனேக்கு அதிக இடமிருக்கவில்லே. பேராசிரியர்களின் கருத்துக்களே அப்ப டியே வாந்தி எடுப்பவர்கள்தான் நல்ல மாணவர்கள் எனக் கருதப்படுகின்றனர். அதாவது பேராசிரியர் கக்கியதை அப்படியே எடுத்து விழுங்கி, பரீட்சை மண்டபத்தில் வாந்தி எடுப்பவர்களுக்குத்தான் அதிக புள்ளியும். வேலேவாய்ப்பும்... அதைச்செய்ய பேராசிரியர்களுக்கு ஏற்ற முகமூடிகளே அவ் வப்போது அணிந்து கொள்ளவும் வேண்டும்... இன்றுகூட

அந்தநிலை முற்றாக மாறிவிட்டது எனக் கூறமுடியாது... இதன் இன்னொரு பிரதிபலிப்புத்தான் இந்த ரியூட்டரிகளும் இவை சின்ன ரியூட்டரிகள்... அவை பெரிய ரியூட்டரிகள்...''

''ஜெகன் உங்கள் ஆத்மாவையே நீங்கள் நொந்து கொள்ளும் அளவிற்கு .. உங்கள் துன்பம் எங்களதைவிடப் பெரிதாகப் படுகிறது.

அவன் உதடுகளில் விரக்திச்சிரிப்பு சுழியிடுகிறது.

''துன்பம் யாருக்குத்தான் இல்லை. வாழ்க்கைப்போராட்டத்தில் முண்டியடித்துத்தான் முன்னேறவேண்டும். அந்த வேதனையிலிருந்து தற்காலிக விடுபடுதலிலும் ஓர் இன்பம்... பயனைப் பெறுவதிலும் இன்பம் தான்... ஆனால் இன்று சமூகங்களை நசுக்கிக்கொண்டிருப்பவை ஏகாதிபத்தியவாதிகள் போன்ற ஏகபோக உரிமையாளர்களினால் தான்... இவர்களை நாம் அழித்துவிட்டால்... உலகின் பாரிய துன்பங்களெல்லாம் அற்றுவிடும்... இவர்கள் அரசியலை... பொருளாதாரத்தை... சமூகத்தை... கல்வியை... பண்பாட்டையெல்லாம் ஆயிரம் தலைகொண்ட நாகம் போலல்லவா நச்சுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்...''

அவள் மௌனமாக அவனுடன் நடந்து கொண்டிருக்கிறாள்.

''நீங்கள் ஏதோ கேட்க, நான் ஏதோ சொல்லுகிறேன் என்று பாக்கிறியள் என்ன...? நான் சொல்லி வந்த சமூகத்திலதான் நீங்களும்... அதாவது வேலைதேடிப் பிழைத்து, சேமித்து, அதோட நாளைய இல்வாழ்க்கைகான சீதனத்தையும் தேடும் பெண்களும்... வாழ்கிறீர்கள்... உங்களுடைய முயற்சிகளில் உங்கள் வயதும் ஏறிக்கொண்டே போகிறது... உங்களைப் பார்க்கிற ஒவ்வொருவனுக்கும் நீங்கள் இளக்காரமாகப்படத் தொடங்குகிறீர்கள் .. இந்த நிலையில் இந்தப் பழைய சமூக அமைப்புக்குள் முதலாளி என்ற பத

வியுடன் இருக்கும் எவனும்... தன்னிடம் வேலைக்கு வரும் பெண்களை அதுவும் சற்றுக் கண்ணுக்கு அழகாக இருந்து விட்டால் போதுமே.. தனது சொத்துடமையாகக் கருதத் தொடங்கி விடுகிருன். நீங்களே கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் உங்களைத்தேடி யாராவது ஆண்கள் வந்து விட்டால்.. எவ்வளவு சட்டதிட்டம் போடும் முதலாளி... வேலைசெய்யும் ஆண்களைத்தேடி பெண்கள் வந்தால் ஏதாவது சொல்கிருனு? இல்லையே.. பத்தாததுக்குத் தானும் சேர்ந்து பகிடிவிடுகிருன் இதற்கெல்லாம் என்ன காரணம்? கடையின் சட்டதிட்டம் குலைந்துவிடும் என்பதா? இல்லை தானே தனக்குச் சொந்தமாக - உரிமையில்லாத போதும் மனத்தளவில் — எண்ணியிருக்கும் பெண்கள் ஒருவேளை கைமாறி விடுவார்களோ என்ற சந்தேகம்... பொருமை தான்... இதைத்தான் அப்ப சொன்னன் ''

— மூச்சு விடாமல் பேசி நிறுத்தியவனை அவள் பார்த்த பார்வையில் பெருமிதம் தெரிந்தது.

''நீங்கள் படித்தவர்கள்... அதனுல் இப்படிப் பேசமுடிகிறது. ஆனுல் பெண்களாகிய நாங்கள்...?''

''ஏன் நீங்கள் மட்டும் படிக்கவில்லையா...?''

''...ம்... என்ன படிப்பா... எங்கள் கிராமத்தில் எங்கே அதிகம் படிக்க முடிகிறது. ஏ. எல். மூன்றுமுறை எடுத்தும் பல்கலைக்கழகம் எட்ட எட்டப் போய்க்கொண்டிருக்கிறது... இனி அதைத் துரத்த எங்களுக்கு வழியுமில்ல... வசதியுமில்ல.. ஓ. எல். படிக்கேக்க தொழில் முன்னிலைப்பாடமாக எடுத்த தையல் தான் இப்ப கைகொடுக்குது... அதுக்கும் ஆபத்து வந்திருக்கு...''

''என்ன சொல்லுறீர்...? ஏதோ முடிவெடுத்திட்டீர் போல...''

''இனி எப்படி அந்தக் கடைவாசலில மிதிக்கிறது... முதலாளி எண்டு அவன் முகத்தைப்பார்த்துப் பேசறது...''

''அப்ப வேறிடம் பாக்கப் போகிறீரா...?''

''வேற இடம் பார்க்கிறது பெரிசல்ல .. அவனும் இந்த முதலாளிபோல இருக்கமாட்டான் எண்டு என்ன நிச்சயம்?''

''அப்படியெண்டா பிழைப்புக்கு...?''

''நாங்கள் கேள்ஸ்ஸா சேர்ந்து ஒருகடை நடத்திட்டா எப்படி ?''

— அவன் வியந்து போகிருன்.

''எப்படிப்பட்ட தன்னம்பிக்கை? இந்த ரவுணில ஒரு இடம் பிடிக்க எவ்வளவு 'கீமணி', சந்தோஷம் கொடுக்க வேணும்...? வேறு தையல் மிஷின்... தளபாடங்கள்... அடேயப்பா..! என்ன துணிச்சல்!...''

— அவன் சந்தேகங்களைக் கேட்கிருன். அவள் மனதில் ஏதேதோ எண்ணங்கள்.

''பார்க்கலாம். மற்றக் கேள்ஸ்களோட பேசித்தான் முடிவெடுக்கணும். ஆன ஒண்டு. உங்களையும்... உங்கள் நண்பர்களினதும் உதவி இல்லாம நான் எண்ணியது நடக்காது. இது இண்டைக்கு நேற்றைக்கு ஏற்பட்ட எண்ணமில்லை. எப்பவோ நாங்கள் எல்லாரும் கூடிக்கூடிக் கதைச்சதுதான். இப்ப இந்த நிகழ்ச்சிலல கொஞ்சம் துரிதப்படுத்துகிறது அவ்வளவுதான்...''

''படித்த எங்களைப் போன்றவர்களிடையேதான் பல மாற்றங்கள்.. புரட்சிகர எண்ணங்கள் ஏற்படுகின்றன என எண்ணியது எவ்வளவு தவறு என்று இப்பொழுது புரிகின்றது... கால தேச வர்த்தமானங்கள் ஒவ்வொருவரினதும் மனங்களிலே எவ்வளவு மாற்றங்களை வரலாற்று நியதியாக்கிவிடுகின்றன. இதில் ஆண் பெண்... படித்தவன் படிக்காதவன் என்ற வேறுபாடே கிடையாது ''

அவன் உற்சாகமாகக் கூவுகிருன்!

“நிச்சயமாக எங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு உங்களுக்குண்டு”

தூரத்தில் ஒரு பஸ் வருவது தெரிகிறது

‘‘அதோ என்ர பஸ்... நான் வாறன் ’’ — என்றபோது ஜெகனும் கூறுகிறான்

‘‘அதுதான் என்ர பஸ்ஸும்...’’

அந்த முடக்கில் பஸ் வேகம் தணிய, அவர்கள் இருரும் பாய்ந்து ஏறி அமருகிறார்கள்.

பஸ் பயணத்தின் போதுதான் அவளுக்கு அவன் யார் என்று தெரியவருகிறது.

‘‘அட! .. கந்தப்பு கமக்காரனின் மகனுமே. கந்தப்பருக்கு மகன் இருக்கிறார் என்று தெரியுமே தவிர, அவர் தான் இவர் என்று எப்படித் தெரியாமல் போச்சு...’’

மனதில் ஏனோ சந்தோசமும், எக்கமும் கலவையிடுகின்றன,

பஸ்சை விட்டு இருவரும் அந்த ரீக்கடை ஹோல்டில் இறங்குப்போது, எல்லாரும் தன்னையே ‘இவள் என்ன இந்த நேரத்தில் வந்திறங்குகிறாள் .. பின்னால கந்தப்புவின்ர பொடியனும் இறங்குகிறான்’ என்று பார்ப்பது போல் மனதில் நடுக்கம் காண, அவனைக் கவனிக்காதவள் போல நடக்கத் தொடங்குகிறாள். பின்னால் ஜெகன் ஒரு பாதசாரியாக...

சிறிதுதூரம் சென்றவள் எதேச்சையாக நிமிரும்பொழுது அவன் விழிப்பொட்டில் பட்டுத்தெறிப்பவன் —

நாகன்...

அவன் மனதிலும் ‘சுருக்’கென்ற வேதனை.
எட்டி நடக்கிறார்கள்.

# 10

மயில்வாகனத்தார் மிக உற்சாகமாக இருக்கிருர். அடிக்கடி உதடுகள் விரியத் தனக்குள் சிரித்துக் கொள்கிருர். ஏதோ சாதித்து விட்ட பெருமிதம் முகத்தில் ஒளிருகிறது.

'இந்தப் பொடிப் பிள்ளையள் என்னில தங்கட சேட்டைகளை விட்டுப்பாக்கினம் என்ர வாழ்நாளில இவையளைப் போல எத்தனைபேரைப் பார்த்திருப்பன்... பொடியள் திகைக்கப் போயினம் '

வாசலில் நிழல் தட்ட நிமிருகிருர்.

ஜெகன்,

''வாரும்! '' —உட்காரப் போனவனை அவரது அடுத்த கேள்வி நிமிர்த்துகிறது.

''இண்டையான் ஈழநாடு பாத்தனீரே''

''இன்னும் பாக்கேல்ல .. காலமையிலயிருந்து இப்ப வரை ஒரே 'கிளாஸ்' இனித்தான் பார்க்கவேணும்...''

''இந்தாரும்... முதலில கடைசிப்பக்கத்தைப் பாரும்...'' என்று பத்திரிகையை எடுத்து அவன் முன்னுல் போடுகிருர். பத்திரிகையின் இடது பக்க மூலேயில் அந்த விளம்பரம் கட்டம் கட்டி வாசகரை 'ஹலோ' என்று அழைக்கிறது.

நீங்கள்

இலங்கைப் பல்கலேக்கழக பட்டதாரி ஆகவேண்டுமா?

கவலேயை விடுங்கள்!

க. பொ. த [உ/த] கலே, விஞ்ஞான பாடங்களில் மூன்றில் மட்டும் சித்தியடைந்திருந்தால் போதுமானது.

விண்ணப்பப்படிவங்களேப் பெற ரூ 35/- போஸ்டல் ஓடருடன் முத்திரையிட்ட, சுயமுகவரியிட்ட நீண்ட கடித உறை ஒன்றுடன் எங்களுக்கு எழுதுங்கள்.

பதிவாளர்
இலங்கைப் பல்கலேக்கழக
வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு
எடியூகேற்ருேறியம்
யாழ்ப்பாணம்.

அவன் திகைத்துப் போகிருன்.

விளம்பரத்தில் அவர் பயன்படுத்தியிருக்கும் இலச்சினே யும், வாக்கிய அமைப்பு யுக்தியும் இலங்கை பல்கலேக் கழகமே அந்த விளம்பரத்தை வெளியிட்டது போன்ற மயக் கத்தை நிச்சயமாக ஏற்படுத்தும். ஆனுல் சட்டப்படி பல் கலேக்கழகம் விளம்பரத்தின் மீது எதும் நடவடிக்கை எடுக்க முடியாதபடி தனியார் விளம்பரமாக இருக்கிறது.

''என்ன பேசாமல் இருக்கிறீர்...''

''இல்லே... நீங்கள் திடீரெண்டு. இதைக் காட்டினியள்

முந்தி ஒருகாலும் இது பற்றிச் சொல்லேல்ல... டிகிரி கிளாஸ் எடுக்க வசதியள் போதுமே?...''

''இதுகளெல்லாம் திடீரெண்டுதான் செய்ய வேணும்'' அதுதான் காதும், காதும் வைச்சாப்போல எல்லாத்தையும் முடிச்சிட்டு விளம்பரம் போட்டனுன்...''

—அவன் வாயடைத்துப் போகிருன்.

''ஏன் நீர் பி. ஏக்கு வகுப்பு எடுக்க மாட்டீரா...? அப்படி எடுத்தால் உமக்குச் சம்பளமும் கூடும்தானே .. புதிசாவும் **வேருக்களைப்!** போடலாம் இப்பதான் எங்கபாத்தாலும் வேலையற்ற பட்டதாரிகள் தானே ? கல்வி மந்திரியே என்ன சொல்லுருர்... இப்பத்தப்பட்டதாரிகள் வாத்தியார் வேலைக்கும் பஸ்கண்டக்டர் வேலைக்கும் தான் லாயக்கெண்டு எத்தனை பேருக்கெண்டு இந்த வேலைகளைக் கொடுக்க முடியும் ''

ஜெகனின் முகம் அவமானத்தால் சிவக்கிறது. வேதனையால் நெஞ்சம் பிசைகிறது.

''நிலமை அப்படியிருக்க நாங்கள் இன்னும் புதிது புதிதாக வேலையற்ற பட்டதாரிகளை உருவாக்க வேண்டுமா? வாழ்க்கைக்குப் பொருத்தமற்ற கல்வியை ஊட்ட வேணுமா? ''

''உதுகளை நாங்கள் சிந்திக்கக் கூடாது. இவையெல்லாம் 'பணம் பண்ணுற' தொழில்கள் யாழ்ப்பாணமக்கள் கல்விக்காக தங்கட நில புலங்களைக்கூட விற்றுச்சுட தயங்க மாட்டினம்... அவர்கள்பாடு .. கவுண்மன்ற்பாடு .. நீர் என்ன சொல்லுறீர்...?''

'நான் என்ன சொல்லுறது . நிலமை இப்படியே நீடிக்காது . அரசரங்கமோ அரசியல் தலைவர்களோ சிந்திக்கத் தவறியவற்றை இப்போதைய இளைய சமுதாயம் சிந்திக்கத் தொடங்கிவிட்டது . அவர்களே தங்கள் பிரச்சினை

களைத் தீர்க்கத் தொடங்கிவிடுவார்கள்... அப்போது நிலமை இன்னும் மோசமாகிபதில் — சொல்ல வேண்டி வ ந் து விடும்...''

''ஜெகன் .. நீர் என்ன பேசுறீர் .. உமக்கென்ன இதில விருப்பமில்லையா . . விருப்பமில்லையென்டால் போய்விடலாம்...'' —அம்பலவாணர் ஆத்திரத்துடன் கூறுகிறார்.

ஜெகன் நிதானிக்கிறான். அவன் விலக இது சந்தர்ப்ப மில்லை. தனது சம்பாத்தியத்துக்கு மட்டுமல்ல வேறு சில காரியங்களுக்கும் அவன் அங்கு தங்குவது அவசியம்...

''இல்லை... சேர்... இப்ப வெளியில பொடியள் சொல் லிக் கொண்டு திரியிறதைத்தான் சொன்னான்... என்ன நீங் கள் செய்தாலும் சம்மதம் தான் ..'' —என்கிறான். மயில் வாகனத்தார் பலமாகச் சிரிக்கிறார்.

''அப்ப . நான் வகுப்புக்குப் போகட்டே? .''

''தம்பி .. ஜெகன் நான் சொன்னது ஒண்டையும் மன தில வைச்சிராதையும்... நிர்வாகம் எண்டால் சிலசமயம் கடினமான வார்த்தையும் வரத்தான் செய்யும் சரி நீர் போம் ..''

மயில் வாகனத்தார் எழுந்து யன்னல் பக்கம்போகிறார். முக்கோணப்பட இரு யன்னல்கள். ஒரு பக்க யன்னலூடாக மாமரங்களும் தென்னைகளும் கிணற்றுக்கட்டும் தெரிகின்றன. ஒரு இளம் ஆசிரியரும் ஒரு மாணவியும் சிரித்துப்பேசிக் கொண்டிருக்கிறார்கள். பாடம் சம்பந்தமாக அவர்கள் பேச வில்லை என்பதுமட்டும் புரிகிறது. சற்றுத்தூரத்தே கும்பல் கும்பலாக மாணவ மாணவிகள்... சிட்டுக்குருவிகளின் கல கலப்பு போனவாரம் இரசாயன ஆசிரியர் ஒருவர் மாணவி ஒருத்தியையே வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டது நினைவில் வர அவர் உதடு புன்சிரிப்புக் கொள்கிறது.

# 11

முதலித்தம்பியாருடைய கோபம் அடங்கவில்லை. நாளுக்கு நாள் கொழுந்து விட்டு எரிந்து சொண்டிருக்கிறது.

'சே! அண்டைக்குக் குட்டின்ர கொழுப்பை அடக்கியிருப்பன். அந்த ஊமைநாகன் வந்து கெடுத்துப் போட்டான்... இப்படியே இதுகளை வளரவிட்டா நாளைக்கு எங்களிட்டயே வந்து சம்பந்தம் பேசுங்கள்... உவங்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்காட்டி நாளைக்கு எங்கட சந்ததிகள் தலைநிமிர்ந்து நடக்கேலா.'

அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில், மாட்டுக்கொட்டிலில் இரைதேடும் கொடிய விலங்குபோல் முன்னும் பின்னும் அலைந்து கொண்டிருக்கிறார்.

''எங்க இந்த அறுவான்களையும் காணேல்ல. கொடுத்த காசுக்கு மூக்கு முட்ட குடிச்சிட்டு எங்கையாவது விழுந்து கிடக்கிறாங்களோ? ..''

இருளில் முகம் தெரியாத நாலைஞ்சுபேர், பதுங்கிப் பதுங்கி வருவது தெரிகிறது.

'நயினர் கோபிக்கக்கூடாது. கொஞ்சம் சுணங்கிப் போச்சு

'சரி... சரி பேசிக்கொண்டு நிக்காதையுங்கோ... போய்க் கெதியண காரியத்தை முடியுங்கோ அங்க பார் கானில பெட்ரோல் இருக்கு... எடுத்துக் கொண்டு சுணங்காமல் போங்க ..'

அவர்கள் இருளின் தடத்திலே பாதை தடவிச் செல்வது தெரிகிறது.

குட்டியனின் வளவு இருளில் மூழ்கிக்கிடக்கிறது. எல்லாருமே நித்திரையில் ஆழ்ந்துபோய் இருக்க, புனிதம் மட்டும் ஏதேதோ நினைவுகளில் புரண்டு கொண்டிருக்கிருள்.

'நானை என்ன செய்வது? புதிதாக வேலை தேடுவதா? அல்லது நாங்களே ஒரு வேலைத்தலத்தை ஆரம்பிப்பதா?... அப்படி ஆரம்பிக்கிறதெண்டாலும் முதல் வேணும்.. நாலைந்து தையல் மிஷின்களாவது வேணும்... ஒரு மேசை... யார்ட் ஸ்டிக்... கத்தரிகோல்... கதிரைகள்... இதெல்லாத்துக்கும் எங்கபோறது?... யார் உதவுவினம்?...'

அவள் மனதில் ஜெகன் மின்னுகிருன்.

இந்தச்சோகம் கனக்கும் நெஞ்சில் அவன் நினைவு எப்படி அதனை அகற்றி இலேசாக்குகிறது. அவன் காதலிக்கிருனு? அதுகூடத்தெரியவில்லை. ஆனுலும் மனம் ஆனந்தம் கொள்வதைத் தடுக்க முடியவில்லையே ஏன்?

*குளிர் பார்வை ஒன்றைத்தானே*
*என் மீது வீசினுய்?*
*என் இதயத்தில் நெருப்புப்*
*பிடித்துக் கொண்டதே!*

-என்றோ படித்த கவிஞர் சத்யாவின் கவிதை வரிகள் ஞாபகத்தில் வந்து விடுகின்றது.

வெளியே ஏதோ சப்தம் கேட்ட நிலையில் பிரமை கலைகிறது. நாய் ஒன்று ஊளையிட்டவாறு ஓடி. தூரத்தே நின்று 'வொள் வொள்' என்று குலைக்கிறது. அவள் யன்னல் தட்டியை சற்று நீக்கி வெளியே பார்க்கிறாள். பனையோலைகளிடையே ஊமை வெளிச்சம் மண்ணில் மங்கிய கோலமாக

அவள் திடுக்கிடுகிறாள்.

யாரது ? முற்றத்தில் வெள்ளைவேட்டியுடன்... அது குனிந்து முற்றத்தில் கிடந்த சிறுமணிக்கற்களைப் பொறுக்கி குசினித்தகரத்தில் மூன்று முறை விட்டெறிகிறது. அது ஒரு சங்கேத பாணியாக...

வெளிவிருந்தையில் படுத்திருக்கும் குட்டியன் புரள்கிறான்.

புனிதம் மனதில் ஏதேதோ மனப்புரட்டல்கள். -படுக்கையில் படுத்தவாறு விழிகளால் கூரையை இருளில் வெறித்தவாறு...

—ஏதோவொரு சலனத்தால் திடீரென உசிப்பியவளைப் போல் பாக்கியம் திடீரென படுக்கையில் எழும்பி மகளைப் பார்க்கிறாள். அவள் படுக்கையில் கொஞ்சம் கூட அசைப்புகளின்றி அவள் கதவைத்திறந்து கொண்டு வெளியே பயந்தவாறு வெளியே வருகிறாள்.

என்ன நீங்கள்?..

உஷ்!... சத்தம் போடாத... மெல்லமாப் பேசு...

ஏன் இப்படிப் பயப்பிடிறியள்? பிள்ளை நல்ல நித்திரை... அது மிஞ்சியிருந்த கள்ளெல்லாத்தையும் அப்படியே

மண்டிப்போட்டு வேட்டி போறது கூடத் தெரியாம சவம் போலக்கிடக்குது ..

பாக்கியம்... இங்க நிண்டுகதைக்க நேரமில்லே முத லித்தம்பி ரெண்டில ஒண்டு பாக்குறன் எண்டு நிக்கிருன். இண்டைக்கு உங்கட குடிசைக்கு நெருப்பு வைக்கப்போருன் போல... நான் இப்பதான் பட்டணத்தால வாறன்... அங்க சாரயக்கடையில முதலியின்ர கையாட்கள் கதைச்சதைக் கொண்டு தான் எனக்குத் தெரிஞ்சுது...

நல்லூரானே! இதென்ன சோதனே? .

இஞ்சபார் நான் இங்க நிக்க நேரமில்லே. இண்டைக் குப் பாட்டில வீட்டில கிடக்கிற பெறுமதியான பண்டம் பாத்திரத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு, நாகன்ர வீட்ட போய் இருங்க .. நான் வாறன் . நான் சொன்னபடிசெய் ..

அந்த உருவம் சென்று மறைகிறது. புனிதம் விருந்தைக் கப்பைப் பிடித்துக் கொண்டு இருளில் நின்றவள் முற்றத் துக்கு வருகிருள் அவளைக் கண்டு பாக்கியம் ஐயோ என்று அலறிவிடப்பார்க்கிருள். ஒருவாறு சமாளித்துக் கொண்டு 'புனிதம் நீயா .. ஏன் நித்திரை வரேல்லியா? ..' --என்று கேட்கிருள்.

''அதெல்லாம் கிடக்கட்டும். நீ எங்கபோட்டு வாருய்? இப்ப வந்துபோறது ஆர்? ''

''ஆ! புனிதம் என்ர மகளே... உப்புடியெல்லாம் என்னையொண்டும் கேக்காத . சமயம் வரும்போது நானே சொல்லுவன் .. இப்ப ஓடிப்போய் அப்பாவை எழுப்பு... உடன நாங்கள் எங்கட மூட்டை முடிச்சுகளோட நாகன்ர வீட்ட போகவேணும் ஆபத்து ..'' என்றபடி குடிசைக்குள் பாய்கிருள்.

வொள்!... வொள்! .. வொள்! ..

ஊரையே கூட்டிவிடுவதுபோல் நாய் குலைக்கிறது.

'சீ!... சனியனே... சத்தம்போடாத அடீய்க்..... ' என்றவாறு குடிசையின் கதவைத்திறந்து வருகிருள் வள்ளி. கையில் ஒரு போத்தல் விளக்கு அதன் மெல்லிய ஒளி யில் வெளியே நிற்பவர்களைக் கண்டு வியக்கிருள்.

''பாக்கியமக்காவா... என்ன இந்த ராத்திரியில... இதென்ன கோலம்?... நாகா... நாகா எழும்பு... ஆர் வந் திருக்கினம் எண்டுபார்...'' நாகனைத் தட்டி எழுப்புகிருள். விழிப்பவன் கண்களில் முதலில் தட்டுப்படுபவள் புனிதம் தான். மிகுந்த பரபரப்புடன் எழுந்திருக்கிருன்.

வாங்கக்கா .. ஏன் வெளியில நிக்கிறியள்?...'

-எல்லோரும் உள்ளே போக, நாகன் அவர்கள் பெட்டி களை எடுத்துக் கொண்டு உள்ளே போகிருன். அவர்களுக் காக தனது பாயையும், தலையணையையும் எடுத்துக் கொண்டு போகிருன். வள்ளி தேனீர் போட்டுக்கொண்டு வந்து குந்து கிருள்.

அவர்கள் பேசுவது புரியாவிட்டாலும், புனிதத்தின் முகத்தையே பார்த்துக் கொண்டு இருக்கிருன்.

'சரி அக்கா... பேசியது போதும். முதலில படுங்கோ காலமை எழுப்பி எல்லாம் பேசிக்கொள்ளலாம் ' என்று வெளியே வந்தவள் நாகனுக்கு விசயத்தை கைபாஷையில் விளங்கப் படுத்துகிருள்.

நாகன் பல்லை நறுமுகிருன்

எல்லாரும் நித்திரையிலாழ்ந்தபின், ஓசைப்படாமல் நாகன் வெளியேறுகிருன் அவன் கையில் தீட்டிய அரிவாள் மின்னுகிறது.

நாகன் தூரத்தில் வரும் பொழுதே பனங்கூடலுக்கிடையே பேரொளியாக—சொக்கப்பனை கொளுத்தப்படுவது போல...

அவனுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. கொஞ்சம் கால தாமதமாகிவிட்டது. அவனுள் வெறிபிடித்தது போல...

'ஹோய் ய் ஊ...ஆ ' என்று சப்தமிட்டவாறு அந்த இடத்தை நோக்கி ஓடுகிறான்.

'டேய்... நாகன் வந்திட்டாண்டா... ஊமையன் கோபம் பொல்லாதடா. ஓடி வாங்கடா...'

அவர்கள் வேகமாக ஓடுகிறார்கள்.

நாகன் தன் கையிலிருந்த அரிவாளை சுழற்றி வீசுகிறான்.

'ஆ! .. என் கால் போச்சு ..' —என்ற குரல் இருளில் வேதனையுடன் எழுகிறது.

விடிகிறது. கிராமம் முழுவதும் இதே பேச்சு. ஆனால் எவரும் முதலியைக் குற்றம் காண முனையவில்லை. குடிசைகள் சாம்பலில் எழுந்த கரிக்குச்சிகளாக காணப்படுகின்றன.

நாகனுடன் அவன் வயதொத்த இளைஞர்கள் எரிந்த குடிசையினை அகற்றிக்கொண்டிருக்கின்றனர். எல்லோருடைய முகங்களிலும் தங்கள் சமூகத்திற்கே நேர்ந்த கொடுமையான சீற்றம் கொப்புளிக்கிறது

'முதலி என்ன சொல்லுறான் தெரியுமே . நித்திரையில கைவிளக்குத் தட்டி விழுந்துதான் குடிசை எரிஞ்சிருக்குமாம் '

'அப்ப... இந்தப் பெட்ரோல் டின்னுகளுக்கு என்ன சொல்லுறான் அவன்?...'

''அதுக்கு தன்னை வந்து கேட்டா என்ன அர்த்தம் எண்டு சொல்லுறான் ஆரும் கள்ளுக்குடிக்க வந்தவை விட்டிட்டுப் போயிருக்கலாம். தன்ர டின் எண்டு எழுதி ஒட்டியா வைச்சிருக்கு எண்டெல்லாம் பேசிறான்...''

‘ உவன் தப்பிப் போட்டான் எண்டு நினைக்கிறன். நாகன் சொன்ன தகவலிலிருந்து ஆரோ ஒருவனுக்கு கத்தி வெட்டு விழுந்திருக்கு... இந்த ஊரில ஆருக்கு கத்திவெட்டு விழுந்திருக்கு எண்டு கண்டு பிடிச்சிட்டோமானல், அவனைக் கொண்டே முதலியின்ர திமிரை அடக்கி போடலாம்.. பாப்பம்.. எங்கட பொடியள் இப்ப ஊரில உந்த வேலையைத்தான் செய்துகொண்டிருக்கிறர்கள்... இப்ப பதிலோட வந்திடுவான்கள்...’’

மத்தியான வேளை...

எரிந்த பகுதிகள் துப்பரவு செய்து ஒதுக்கப்பட்டு, புதிய மரங்கள் நடப்பட்டு புதிய குடிசைக்கான ஆயத்தங்கள் ஆரம்பமாகி இருக்கின்றன. நாகன் ஒரு நிமிடம் கூடத்தரிக்காமல் சுழன்று சுழன்று வேலை செய்கிறன். குட்டியன் மகிழ்வால் மனம் நிரம்பி...

தூரத்தில் வள்ளியும், பாக்கியமும் சாப்பாடு கொண்டு வருகிறர்கள். இளைஞர்கள் முகத்தில் மகிழ்வின் மலர்ச்சி, பின்னல் புனிதம் வருகிறள்.

பெண்கள் பரிமாற இளைஞர்கள் உண்கிறர்கள்,

உழைப்பும்... பெண்களின் உபசரிப்பும்... பனங்கூடலின் நிழலும் தென்றலும்...

சொர்க்கமே மண்ணில் இறங்கிவிட்டதா?

அவர்கள் உண்டு கை கழுவும் போது, அவர்கள் அனுப்பிய இளைஞர்கள் திரும்பி வருகின்றனர்.

‘காயப்பட்டவர் ஆர் எண்டு தெரியேல்லே, சிலர் பட்டினத்துக்குப் போனதாக வீட்டில சொல்லுகினம்.. ஆன ஒண்டுமட்டும் தெரிஞ்சிது ’’

‘‘என்ன?...’’

''முதலியின்ர கார் பட்டினம் போய் வந்திருக்கு... அதால காயம்பட்டவரை பட்டினத்தில ஏதாவது ஆஸ்பத்திரியில கொண்டுபோய் வைத்தியம் பார்க்க ஏற்பாடு செய்திருக்கலாம் எண்டு படுகுது அண்ணே! ..''

''அப்ப கவலையில்ல .. யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் ஓடலியாக இருக்கிற கணபதியைப் பிடிச்சா எப்படியும் அறிஞ்சுகொள்ளலாம்... கவலையை விடுங்க... முதலில களைச்சுப்போய் வந்திருக்கிற நீங்கள் சாப்பிடுங்க... பாக்கியம் இவயளைக் கவனியும் '' --என்று குட்டியன் மகிழ்வுடன் கூறுகிறான்.

குடிசை துரிதமாக கட்டுப்படுகிறது.

புனிதம் ஓடி ஓடி அவர்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொடுக்கின்றாள்

'என்ன புனிதமக்கா இது... ஐயோ ' —என்று குரல் கொடுத்துக் கொண்டு சிவநங்கை ஓடி வருகிறாள். அவளைத் தொடர்ந்து சந்திரிகா, மாலா,... தூரத்தே அவர்கள் பின்னால் வருவது யார்? ..

ஜெகனா?...

அந்த நிலையிலும் அவளின் உடலில் ஏதோ 'குப்' பென்று ஓடிப் பரவுகிறது. பரவசமா?...

ஜெகன் அண்ணா சொல்லித்தான் தெரியும் அதுதான் எல்லாரும் ஷோட்-லீவு போட்டிட்டு வந்திட்டம்... அவரோட வேற ஆர் வந்திருக்கிறது என்று பாத்தியே?

அட... பெயிண்டர்!.

அவர் கூடவா? வெறும் சாது. பேசமாட்டார் என்று எண்ணியிருந்தம்... அவரா வந்திருப்பது

இன்னமும் மானிடம் மடிந்து விடவில்லைத்தான்.

எல்லாரும் ஆரவாரமாக அவர்களை வரவேற்றபோதும் நாகன் முகம் மட்டும் ஏனோ இருளடைந்து கிடக்கிறது.

# 12

மயில்வாகனத்தார் தனது மேசையின் வலது பக்கமாக நிரம்பி வழியும் 'கடித ட்ரேயை' யும் இடதுபுறமாக மலைபோல் அடுக்கி வைத்திருக்கும் விண்ணப்பப்படிவங்களை யும் பார்த்துப் பார்த்து பரவசப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

ஜெகனும், கிளாக்கரும் பக்கத்து மேசைகளிலிருந்து விண் ணப்பங்களை ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

விண்ணப்பப்படிவங்களாலேயே பத்தாயிரம் ரூபாய் களுக்கு மேலாகச் சம்பாதித்திருப்பார். அவர் எதிர்பார்த்தது போல் அவரது விளம்பரம் வேலைசெய்திருந்தது. எல்லோருமே அதனை பல்கலைக்கழகத்தின் ஒரு விளம்பரமாக.. வெளி வாரிப் பரீட்சைப் பகுதியோடு தொடர்புடைய நிர்வாக அலு வலகமாகக் கருதி நிறையவே விண்ணப்பங்கள், இலங்கை யின் பல வேறு பாகங்களிலிருந்தும் வந்திருந்தன.

'ட்ரே'யிலிருந்து ஒரு கடிதத்தைப் பிரிக்க, விண்ணப்பப் பத்திரம் ஒன்று பூர்த்தி செய்யப்பட்ட நிலையில், 'கவரிங் லெட்ட' ருடன் கீழே விழுகிறது. எடுத்துப் படிக்கிறார்.

16, பிரதான வீதி,
மட்டக்களப்பு.

பதிவாளர்,
இலங்கைப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு
எடியூகேற்றேறியம்
யாழ்ப்பாணம்.

ஐயா,

நான் கடந்த மூன்றாண்டுகளாக பல்கலைக்கழக பிரவேசப் பரீட்சை எடுத்து சித்திபெற்ற போதிலும் எனக்கு அனுமதிக்கான இறுதிப்புள்ளிகள் கிடைக்காத காரணத்தால் எனது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன.

தயவுசெய்து தங்களது வெளிவாரிப் பரீட்சைகள் பகுதிமூலமாவது என்னை வெளிவாரி மாணவியாகப் பதிவு செய்து என் ஆவலைப்பூர்த்தி செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கீழ்படிவுள்ள
மிஸ். வசந்தா ஞானப்பிரகாசம்

''ஜெகன் இந்தக் கடிதத்தைப் பார்த் தீரே! ''

அவர் கொடுக்கும் கடிதத்தைப் படித்து விட்டு வேதனையுடனும், பயத்துடன் அவரைப்பார்க்கிறான்.

''என்ன பார்க்கிறீர்? ''

''இவர்கள் எல்லாம் பெட்டி படுக்கைகளுடன் இங்க வந்து பார்த்தால் எங்கட என்ன நிலமை ஆகும் ''

''என்ன ஆகும்? ஒண்டுமாகாது, நாங்கள் என்ன பிழை செய்தம்?... தெளிவா விளம்பரம் எல்லாப் பத்திரிகைகளிலும் போட்டம். அதைப் பாத்துவிட்டு விண்ணப்பித்து அவை வருகினம். எப்படியும் அண்டைக்கு எங்க ரியூட்டரிக்கு முந்நூறு, நாநூறு எண்டு வந்து குவியப்போகினம்... பத்தாததுக்கு எங்கட மற்ற மாணவர்களும் இருப்பினம்... தாங்கள் ஏமாந்ததை ஒருவரும் வெளியில சொல்லமாட்டினம்... ஏனெண்டா இவ்வளவு பேருமா ஏமாந்து வந்திருப்பினம்...

நான் தான் பிழையா விளங்கி ஏமாந்து போட்டன் எண்டு ஒவ்வொருவருமே எண்ணிக் கொண்டு பேசாம இருப்பினம்.. அதோட இவ்வளவு பேர் படிக்கப்போற இடத்தில நானும் பேசாம படிக்க வேண்டியதுதான் எண்டு முடிவெடுப்பினம் ஜெகன் இது 'ஹியூமன் சைக்கோலஜி' கண்டியோ'' —அவன் வாய் பிளந்தவாறு அவரைப்பார்க்கிருன். இது தான் புத்திஜீவிகளின் இன்னொருவகையான சுரண்டலோ? வடிவங்களிலும் வகைகளிலும் தான் வித்தியாசம்.

அன்று மத்தியானம்.

ஜெகனுக்கு அழைப்பு வருகிறது.

''ஜெகன் போய் வோஷ்'' பண்ணி 'ட்ரெஸ்' மாத்திக் கொண்டு வாரும், 'கம்பஸ்' வரை போகவேண்டியிருக்கு... க்குவிக்...'' அவர் எப்பவும் உடுப்பில் கவனம். முகம் பளிச் என்று 'ஃப்ரெஷ்' ஆக இருந்தால் காரியங்கள் சுபமாக முடியும் என்ற அனுபவ நம்பிக்கை கொண்டவர்.

கார் பலாலி வீதியால் சென்று, பரமேஸ்வராச் சந்தியால் திரும்பி வளாகவளவினுள் நுழைந்து, மஞ்சட் பூக்களை அள்ளிச் சொரிந்திருக்கும் மரநிழலில் தரிக்கிறது.

கலைப்பீடாதிபதியின் அறையின் முன்னல், அவர்களை எதிர்பாராதவிதமாக அந்த விரிவுரையாளரைச் சந்திக்கின்ருர்கள். அவர் ஒரு பேச்சாளராக வெளியுலகிற்கு தெரிபவர். உலக அனுபவ விளைச்சலின் விளை நிலம். அதனுல், இளம் வயதிலேயே முன்னேறி தனது துறையில் ஒரு சிரேஷ்ட விரிவுரையாளராக, இருப்பவர். விரைவில் துணை பேராசிரியராகவோ, ரீடராகவோ பதவியை எதிர்நோக்குபவர்.

''என்ன ஜெகன் இங்காலப்பக்கம்? ஆரைப்பாக்க வந்தனீர்? ஹூ இஸ் திஸ் ஜென்டில்மன்... என்ன விசயம்?...''

ஜெகன் இருவரையும் அறிமுகம் செய்து வைக்கிருன்.

மயில்வாகனத்தார் முந்திக் கொள்கிறார்

''சேரின்ர பேச்சுக்களை, கட்டுரைகளையெல்லாம் பேப்பரில பாக்கிறனான். நேரில சந்திக்க சந்தர்ப்பம் கிட்டவில்லை. நான் சேரின்ர பேச்சை நீண்டநாளாக கேட்டுவாறதால யும், பேச்சின் ஆழத்தையும் பார்த்து ஆள் அம்பது வயதுக்கு மேற்பட்டவராயிருக்கும் எண்டு தான் நினைச்சுவந்தனான். நேரிலபார்த்தா நல்ல இளமையா சிறுபிள்ளைபோல இருக்கிறார்... எல்லாம் கருவில பெற்ற திரு தான்''

விரிவுரையாளரின் முகம் பிரகாசிக்கிறது.

''நானும் உங்கட ரியூட்டரியைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறன் ...ன் உங்கட ஸ்ருடன்ற்ஸ் நிறையப் பேர் இங்க வந்திருக்கினமே நீங்கள் தமிழ் கல்வியுலகிற்கு நிறைய சேவை செய்யிறியள் நானும் நிக்க வைச்சுப் பேசிறன் .. வாங்கவன் சீனியர் கொமன்ரூம் போய் ஏதாவது குடிச்சிக்கொண்டு பேசலாம்''

''இல்லை சேர்... சேரிட்டயும் வந்த உதவியையும் கேட்கலாம்தான். நாங்கள் இப்ப புதிசாக பட்டதாரிமாணவர் பிரிவையும் எங்கட ரியூட்டரியில ஆரம்பிச்சிருக்கிறம். முதல் 'பட்ஜ்' இந்தமாத இறுதிக்குள் வருகிறது. வாரவையை வரவேற்று பல்கலைக்கழகத்தில் 'வைஸ் சான் சலர்' அட்ரஸ் பண்ணுவதுபோல, கலைப்பீடாதிபதியையோ. வேறுயாராவது பேராசிரியர்களையோ, அழைக்கலாம் என்றுதான் வந்தம்... கலைப்பீடாதிபதி ஆள் எப்படி? கூப்பிட்டால் வருவாரோ? ''

''நீங்கள் ஒண்டுக்கும் பயப்படாதீங்கோ... இதெல்லாம் ஒரு கல்விச்சேவைதானே? நிச்சயம் வருவார். நானே உங்களைக்கூட்டிக் கொண்டுபோய் அறிமுகம் செய்து அவரை சம்மதிக்க வைக்கிறன். ஆனால் அவருக்கு அந்த டேட்டில வேறஏதாவது அப்பொயின்மென்ற் இல்லாமலிருக்க வேண்டும். அதோட கொழும்புக்கும் போகாமல் இருக்க வேண்டும்... சரி நீங்கவாங்க... ட்ரை பண்ணிப் பாப்பம்..''

துணைவேந்தரின் அறையிலிருந்து மூவரும் மீண்ட போது அவர்கள் இருவரின் முகமும் மலர்ந்திருக்கிறது. ஜெகன் திக்பிரமை பிடித்தவன்போல் வெளிவருகிருன்.

விரிவுரையாளர் அவர்களுடன் கூடி கார்வரை வருகிருர். காரிலேறிய மயில்வாகனத்தார் கைகூப்பியவாறு கூறுகிருர்.

''சேரிட்ட இன்னெரு உதவி... நீங்களும் வரவேற்று ஒரு பேச்சுப் பேச வேணும். உங்கட பேச்சைக் கேட்கிற சந் தர்ப்பத்தை என்ர ஸ்ருடன்ஸ்றசுக்கும் நீங்கள் தர வேணும்...''

''அதுக்கென்ன பேசிவிட்டால் போச்சு நீங்கள் ஆசைப் பட்டா அவர்களுக்கு விரிவுரை கூட எடுக்கத் தயார் நான் மட்டுமல்ல. மற்ற எத்தனேயோ பேரையும் கொண்டுவரு வன் ''

'அப்படியே...'' —காரில் ஏறி அமர்ந்திருந்த மயில் வாகனத்தார் காரில் இருந்து இறங்கி அவர்கைகளேப் பிடித் துக் கொள்கிருர்.

''அப்படியும் முடியுமே?... வைஸ்சான்சலர் ஓமெண்டு வாரே...''

''இதெல்லாம் அவருக்கு எங்க தெரியப்போகுது? ஆனல் பேமன்றுகள் மட்டும் ஒழுங்கா இருக்கவேணும் நாங்கள் எல்லாம் விரிவுரையாளர்கள் எண்டுதான் பேர். எங்களவிட ரியூட்டரியில பாடம் எடுக்கிற பெடியள் அதிகம் சம்பாதிக் கிருன்கள்... ஆரைப்பாத்தாலும் ஸ்கூட்டர் ஹொண்டா எண்டெல்லே திரியிருங்கள்...''

''சேர் .. நீங்கள் ஒண்டுக்கும் கவலேப்படவேண்டாம். எல்லாம் ஒழுங்கா நடக்கும் .. எல்லாருக்கும் ஆரம்பத்தி லேயே ஒவ்வொரு ஸ்கூட்டருக்கு சொல்லிவிடுறன். பிறகு

சம்பளத்தில கழிக்கலாம் தானே...? அப்ப உங்களை நம்பி நாளையே ஒரு விளம்பரம் போடுறன் என்ன?

''நீங்கள் பயப்படாமல் போடுங்கள்...''

கார் வேகமாகப் புறப்படுகிறது.

அடுத்த நாள் பத்திரிகைகளில் அவரது அரைப்பக்க விளம்பரம் எல்லாருடைய விழிகளையும் ஸ்தம்பிக்கச் செய் கிறது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் நேரடி
விரிவுரைகளில்
நீங்களும் பட்டதாரிகளாலாம்.
எங்கள் வெளிவாரிமாணவர்களை வரவேற்று
உரையாற்ற இருப்பவர்கள்
கலைப்பீடாதிபதி கலாநிதி... பேராசிரியர்...
விரிவுரையாளர்...
இடத்துக்கு முந்துங்கள்! எங்களுக்கு எழுதுங்கள்

பதிவாளர் நாயகம்
இலங்கைப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு
எடியூகேற்ரேறியம்
யாழ்ப்பாணம்

## 13

குட்டியனின் புதிய குடிசை அந்த இருளிலும் பழக்கப் பட்ட கண்களுக்குத் தெரிகின்றது எங்கோ ஒரு நாய் ஊளையிடுகிறது. திடுக்கிட்டு விழித்த புனிதம் பக்கத்துப் படுக் கையைப் பார்க்கிருள். வெறுமை.

ஒசைப்படாமல் எழுந்து வெளியே வருகிருள். கோடி பக்கமாக யாரோ கிசுகிசுப்பதுபோல

விருந்தையில் குட்டியன் புரள்வது தெரிகிறது.. அவள் கோடிப்பக்கமாகச் செல்கிருள்.

— எனக்குப் பயமா இருக்கு.. கெதியனப் போங்க.. குடிசையை எரிச்சாப்புறகு எங்கட பொடியங்கள் கவனமா இருக்கிருங்கள்... இல்லாட்டியும் புனிதமாவது வந்திடு வாள் அவளுக்கும் கொஞ்சம் சந்தேகம்.

—புனிதத்துக்கா பயப்பிடுரு?.. அவள் ஆர். ஆருக்குப் பிறந்தவள்? என்ர மகள் தான...

— எல்லாம் இருட்டுவீரம் தானே? உங்கட மகள் எண்டு நாலுபேரறியச் சொல்லுவியளே?

— நான் என்ன புதிசா சொல்லிறது.. அவளின்ர அழகு .. படிப்பு நடை உடைபாவனைகளைப் பாத்தவை ஆராவது

உங்கட ஆக்களுக்கு பிறந்தவள் எண்டு சொல்லுவினமே.. அவளின்ர உடம்பில ஓடுறது ஏன்ர ரத்தம் கண்டியோ.. நீ அவளை வயித்தில உண்டாகியிருக்கேக்க குட்டியன் எங்க இருந்தவன் ? பனையால விழுந்து ஆஸ்பத்தியில ஆறுமாதம் வாட்டில கிடந்தவனல்லே..

— அப்ப.. நீங்க குடிவெறியில என்னை மானபங்கப்படுத்தி..

— அதுக்கு இப்ப என்னப்பா?.

— என்னவா ? நான் அந்தத் தவறுக்காக என்ர அவரைக் காணுகிற வேளையில.. நான் துடிக்கிறதுடிப்பு எனக்கல்லா தெரியும்... முந்தி உங்கட வேலையைச் சொல்லியிருந்தா என்ன நடந்திருக்கும் . ஊர்ரெண்டு பட்டிருக்கும்... வெட்டுக் குத்து கொலையாக மாறியிருக்கும் . கெதியாப் போங்க ஆரோ வந்தது மாதிரி இல்லை...

— ஒருத்தரும் வரேல்ல... நீ சும்மாகிட .

புனிதம் அங்கே தரிக்க விரும்பாமல் மீண்டும் முற்றத்துக்கு வருகிறுள். அங்கே குட்டியன் பாளைக் கத்தியுடன் பாய்ந்து வந்தவன் புனிதத்தைக் கண்டதும் அப்படியே ஓங்கிய கையுடன் உறைந்து போகிறுன். புனிதம் வாய் பேசாது அவனை நோக்கி கையெடுத்துக் கும்பிடுகிறுள். குட்டியனின் மேனி நடுங்குகிறது. திடீரென வெளிப்படலையைத் திறந்து கொண்டு வெளியே ஓடுகிறுன்.

புனிதம் ஒரு ஆவேசத்துடன் அம்மா என்று குரல் கொடுத்தவாறு மீண்டும் கோடிப்பக்கமாகச் செல்கிறுள்

அங்கே —

பாக்கியமும், உடையாரும் சிலையாகி, நிற்க —

'' போங்கள் வெளியால..'' — புனிதம் கத்துகிறுள்.

உடையார் தலையில் முக்காட்டைப் போட்டுக் கொண்டு அவசரம், அவசரமாக வெளியேறுவதை ஊர்க்காவல் பார்க்க வந்த நாகனும், அவன் நண்பனும் கண்டு திடுக்கிடுகிறுர்கள்.

நாகன் பல்லைக்கடிப்பது அந்த அமைதியில் தெளிவாக கேட்கிறது

# 14

குட்டியனைக் காணவில்லை என்ற கதை ஊரில் பரவத் தொடங்கி இரண்டு மூன்று நாட்களாகின்றன. பாக்கியம் அவனுக்காக எடுத்து வைக்கும் சோறும் கறியும் நாய்களுக்குத்தான் உணவாகிக் கொண்டிருக்கின்றன. பாக்கியம் குட்டியனுக்காகக் காத்திருக்கிருள். அவள் இரண்டு நாட்களிலேயே எலும்பும் தோலுமாக . புனிதத்தாலேயே சகிக்கமுடியவில்லை

''அம்மா . ஒருக்கா வள்ளிமாமி வீட்டபோய் ஏதும் அப்பா பற்றி தெரிஞ்சுதா எண்டு கேட்டுவாறன்...''

''சரிபிள்ள, கவனமாப் போட்டு வா?.''

— புனிதம் குட்டியன் செல்லக் கூடிய இடங்களெல்லாம் தேடி அலைகிருள். வயல் வரம்புகளின் மத்தியில் ஆலமர நிழலில் அமர்ந்திருக்கும் கேணியடி முருகன் மேல் குட்டியனுக்கு எப்போதுமே மாருத பக்தி.

— ஒருவேளை அங்கே இருப்பானே?

புனிதம் வேகமாக நடை போடுகிருள்.

அவள் எதிர்பார்த்தது வீண் போக வில்லை.

பகல் வேளையிலும் இருளை அள்ளிவீசுவது போல நிழல். தீட்டுத்தடியில் பாளைக்கத்தியை தீட்டிக் கொண்டிருக்கிறான்.

" அப்பு... அப்பு .. "

அவன் கத்தியின் கூர்மையை விரலால் சோதித்துப் பார்த்துக் கொண்டிருந்தவன், திடுக்கிட்டுவிடுகிறான்.

— " அப்பு நான் சொல்லிறன். கத்தியைக் கீழே போடு.. "

அவளை நோக்கி நகருகிறான். கத்தி கையிலிருந்து நழுவ, அவளை அணைக்கிறான்.

" அப்பு . . அப்பு.. ஆர் என்ன சொன்னாலும் நான் உன்ரை மகள் தானப்பு... என்னை வெறுக்கிறியா அப்பு . ?"

" பிள்ளை நீ என்ன சொல்லுறு?. "

" எனக்கு எல்லாம் தெரியும்.. நானும் நாலு பேரோட பழகிப் புழங்குகிறவன்.. அப்பு .. அப்பு அம்மாவில எப்ப னும் குற்றமில்லை. உடையாரின்ர பலாத்காரத்துக்கு அஞ்சி... அப்பு இதெல்லாம் எங்கட சமூக அமைப்பாலும் அந்த அமைப்பை உடைச்செறிந்து வெளியே வரத்திராணியில்லாத தாலும் ஏற்படுவது... நீ வீட்ட வா.. அப்பு இப்படி எங் களை நாங்களே வதைப்பதில் என்ன பிரியோசனம்.. வதைக் கப்பட வேண்டியவர்கள் அவர்களல்லவா.."

" எண்டாலும் புள்ள என்ர மனக்கொதிப்பு அடங்க வில்லையே... இந்தத் தவறை எப்படி மன்னிக்கிறது..? "

" அப்பு... இவர்களெல்லாம் மக்களுப்பதில் சொல்லும் காலம் வந்திட்டுது... நீ வாணை அப்பு... அங்க அம்மா அன்னந்தண்ணி இல்லாம அழுது கொண்டிருக்கிறு அப்பு.. வாணை... மேற் கொண்டு என்ன செய்யலாம் எண்டு யோசிப்பம்... "

அவள் அவன்கையை பிடித்து வலுக்கட்டாயமாக இழுத் துச் செல்கிறாள்.

# 15

நீண்ட காலங்களின் பின் உடையார், முதலித்தம்பியின் வீட்டில் காலடி பதிக்கிறார். அதிகாலையிலேயே வீட்டுப்படியேறி, ' மச்சான்!. மச்சான்..!' என்று கூப்பிடுகிறார்.

'' ஆரது .. புதுமுறையா உறவு கொண்டாடிக் கூப்பிடுறது'' — என்று நையாண்டியாகக் கேட்டவாறு முதலி உள்ளே இருந்து வருகிறார்.

'' நான் தான் மச்சான்!. '' — என்று சொல்லியவாறு ஒரு கதிரையை இழுத்துப் போட்டு உட்காருகிறார்.

'' மச்சான்.. எங்கட சண்டை சச்சரவுகளை மறந்து விடு. என்ன இருந்தாலும் நான் உன்ர தங்கச்சி புருஷன்... இப்படிச் சொந்தம் பந்தம்களிடையே பிணக்குகள் வாறதும் சமாதானமாய் போறதும் ஏதும் புதிசோ... ஊர் உலகத்தில இல்லாததோ.. ''

'' சரி.. சரி.. இப்ப என்ன விசயமா வந்தது?-''

"இல்ல மச்சான். நான் ஒரு விசர் வேலே செய்து போட்டன், இப்ப அது எங்கட மானம் மரியாதையைக் கொண்டு போயிடும் போல இருக்கு.." — என்று தன் கதை முழுவதையும் கொட்டி அளக்கிருர்.

முதலி பலமாகச்சிரிக்கிருர்.

"இதுக்குப் போய் நீ பயப்படுகிரு. எங்கட பரம்பரை யில யாரிட்ட உந்தப்பழக்கமில்லே .."

"முந்தி இது சாதாரண விடயம்.. இப்ப அப்படி யில்ல.. கேள்வி கேட்க வந்திட்டாங்கள் சில சமயம் உரிமை கோரி பங்கும் கேப்பாங்கள் போல .. இருக்கு இப்ப எல் லாச் சாதியும் நாலெழுத்துப் படிச்சிட்டுதுகள் அதால லோப் பேச வெளிக்கிட்டினம் ."

"உதுகளுக்கு பாடம் படிப்பிக்கத்தான் அவன் குட்டி யன்ர குடிசைக்கு நெருப்பு வைச்சன் .. எப்படியோ அந்த எளியசாதி தப்பிவிட்டுதே."

"அது நான் செய்த தவறு மச்சான்.. மன்னிச்சுப் போடு.." — என்று அந்தக் கதையைக் கூறுகிருர்.

"அட.. எப்பவும் மட வேலே பாக்குற ஆள் தான நீ!" — என்று கோபித்துக் கொள்கிருர்,

வெளியில் ஆரவாரம் கேட்கிறது.

"டேய்!. முத்து! வெளியில எண்ணண்டு பார்.." — என்று குரல் கொடுக்கிருர்.

முத்து வளவிற்கு வெளியே ஓடுகிருன்.

போன வேகத்தில் திரும்பி ஓடிவருகிருன்.

"ஐயா... ஐயா... மோசம்... உவன் அராலி நன்ளித் தம்பியைக் கட்டியிழுத்துக் கொண்டு வாருங்கள்.."

"ஆரடா... அப்படி அவனேக் கொண்டுவாறது..?"

"ஒரு படையே வருது... ஆம்பிளே பொம்பிளே எண்டு."

'' என்ன!. உவன் நன்னித்தம்பி ஏதும் ஊளறிப்போட்டானே? அவனை ஆர் இப்ப ஊருக்குள் வரச் சொன்னது?''

கூட்டம் படலையைத் தள்ளித்திறந்து கொண்டு உள்ளே நுழைகிறது.

கைகள் இரண்டும் பின்னால் சேர்த்துக் கட்டப்பட்ட நிலையில் அவர்முன் தள்ளிவிடப்படுகிறான் நன்னி. முழங்கால் மடிய, தலைகுனிந்தபடி... கால் காயக்கட்டிலிருந்து இரத்தம் வடிகிறது.

'' ஐயா... என்னைக் காப்பாத்துங்க... ''

'' என்ன!. என்ன நடந்தது?. ஏன் இவனைக் கட்டியடித்துச் சித்திரவதை செய்யிறியள்.. '' — அவர் பார்வை கூட்டத்தின் மேல் பரவுகிறது. யாரது? புதுப் புதுப் பொடியள்.. வெள்ளையும் சள்ளையுமாக வந்து நிக்கிறாங்கள்.. இந்தக் கூட்டத்தோட இவங்கள் எப்படிக் கலந்தாங்கள்?..

'' நாயே... சொல்லடா.. ஆரடா குடிசைக்கு நெருப்பு வைச்சது... யார் சொல்லி வைச்சனீ?.. சொல்லடா...?.. '' குட்டியன் அவன் தலையைப் பற்றி உலுக்குகிறான்.

'' டேய்!. அவனை விடடா.. அவனைச் சாக்கொல்லிப் போடுவியள் போய் இருக்கு..''

'' இவனைப் போல கருங்காலிகளை விட்டுவைக்கக் கூடாது உங்கட கைக்கூலியாக இருந்து எவ்வளவு தீமையளை செய்திருக்கிறான்.. '' என்று புனிதம் சீறினாள்.

'' வாய் பொத்தடி.. பொட்டைச்சி நீ என்ன... யாரோட பேசிறாய் எண்டு நினைப்பு வைச்சுப் பேசு.. ''

'' ஊரை ஏமாற்றிப் பிழைக்கிற வெள்ளை வேட்டிக் காரங்களோடு பேசிறம் -- என்ற நினைப்பில தான் பேசிறம் ''

ஜெகன் முன்னுக்கு வருகிறான்.

'' நீங்கள் வீணா பேசி நேரத்தைப் போக்கடிக்கிறியள்.. அண்டைக்கு குடிசையைக் கொளுத்தி விட்டு ஓடினாக்கள்

மேல நாகன் விட்டெறிந்த அரிவாள் இவன்ர ஆடு தசையைக்கிழித்துவிட்டது... நாங்கள் எல்லாரும் பட்டினம் முழுக்கத் தேடி இவனைப்பிடிச்சு வந்திருக்கிறம்.. இவன் நீங்க தான் நெருப்பு வைக்கச் சொல்லி அனுப்பியதாகச் சொல்கிருன் நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?. ''

'' ஆர் இந்த மசிர் ? என்னைக் கேள்வி கேட்க? ஊரில திரியிற கண்டகண்டசாதியள் வாயில வாறதைக் சொல்லுங்கள்... அதுக்கு நாங்களே, பொறுப்பு..? சரி.. நான் தான் சொன்னுன்... நீ என்ன செய்யப்போருய் . ''

'' அப்ப பொலிசுக்குப் போறதைத் தவிர வேற வழியில்லை. ''

'' பொலிசுக்கோ... நல்லாப் போங்க.. நாங்களறியாத பொலீசா... கோட்டா?.. ''

'' நீங்கள் வழக்கில... வெண்டுபோடலாம்... ஆனல் பழிக்குப் பழியாக எந்த நேரத்திலும் உங்கட வீடும் கொளுத்தப்படலாம்.. ''

'' என்ன! வீட்டைக் கொளுத்திப் போடுவீரோ..? கொளுத்தும் பாப்பம் . மயிர்.. தூமை . '' — என்று கத்திக் கொண்டு முதலி முன்னேறுகிருர். இடையில் நாகன் தனது அரிவாளுடன் குறுக்கே பாய்கிருன் முதலி பயத்தால் பின் வாங்குகிருர், அவருக்கு மூச்சிரைக்கிறது.

'' மச்சான்... இதென்ன வேலை. உதுகளோட உனக்கென்ன பேச்சு..? '' — என்ற உடையாரைப் பார்த்து.. '' தூ!, '' என்று காறித்துப்புகிருள் புனிதம்..

உடையார் அவமானத்தால் கொதிக்கிருர்.

''என்னதான் இருந்தாலும் பரவணிக்குணம் போகுமே.. இப்ப உங்களுக்கு என்ன வேணும்..?''

'முதலியாரை மன்னிக்கிற தெண்டால் எங்களுக்கு நஷ்ட ஈடாக இருபத்தையாயிரம் ரூபா தரவேண்டும் அவற்ற தொழில் போச்சு.. உடமைகள் போச்சு... இருந்த

சொத்து சுகம் போச்சு இப்ப ஆன்தான் மிச்சம்... நீங்கள் தந்தா பிரச்சனை இதோட தீர்ந்துவிடும்... இல்லாவிட்டால்...''

''ஒ! உங்கட ஒட்டைக்குடிசைக்கு இருபத்தையாயிரமே... போங்கடா... போய் உங்களால பண்ணக் கூடியதைப் பண்ணுங்க... நீங்கள் உயிரோட இருந்தாத்தான உதெல்லாம் செய்வியள் என்னுடையே முண்டுறியள் போங்கடா.'' — என்று கத்தியவாறு முதலி வீட்டிற்குள் புகுந்துவிடுகிருர்.

கூட்டம் நன்னியனேயும் இழுத்துக் கொண்டு நகருகிறது. நாகன் மட்டும் ஆத்திரத்துடன், சிவந்த கண்களுடன் அந்த இடத்தைவிட்டு அசையாது நிற்கிருன்

எங்கோ கிடுகு வேலி ஒன்று சாய்வது பலத்த ஒலியுடன் கேட்கிறது.

''டேய் நன்னி! பாத்தியாடா உன்ர நயினுரின்ர குணத்தை உன்னைப்பற்றி எப்பனென்டாலும் கவலைப்பட்டாரே எப்பவும் தங்கட நன்மையளைத்தான் யோசிப்பினம்... உன்ர நிலை இன்று என்ன?...

''கருங்காலி என்ற பட்டம் உன்னவனேயே காட்டிக் கொடுத்து அவன் குடும்பத்திற்கு நெருப்பு வைத்த பழி... நீ குடிச்ச சாராயத்துக்கு நீ செய்த கொடுமை என்ன வெண்டு பாத்தியா? நாளை உனக்கும் இந்தக் கெதி நடந்தா துணைக்கு வரப்போவது அவனு? நாங்களா?''

நன்னி விம்மினுன்

''நான் பாவி என்னை மன்னிக்க வேண்டாம் என்னையும் நெருப்பில போட்டுக் கொழுத்துங்க...''

— நன்னியை கூட்டம் அரவணைக்கிறது.

# 16

எடியூகேற்ருேறியம் காலையிலிருந்தே அமர்க்களப்பட்டுக் கொண்டிருக்கிறது. பெட்டி படுக்கைகளுடன் வெளி யிடங்களிலிருந்து மாணவர்கள் பஸ் - ஸ்ராண்டிலிருந்தும், ரெயில்வே ஸ்டேசனிலிருந்தும் நேராகவே வந்து சேர்ந்துவிட் டார்கள். தங்களுக்குரிய அனுமதிப்பத்திரங்களை தவணைக் குரிய கட்டணத்தைக் கட்டி எடுக்க கியூவில் நிற்கிருர்கள்

அவர்களுக்கான வரவேற்புச் சொற்பொழிவு அன்று மாலை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதில் கலந்து கொள்ள அனுமதி அட்டை அவசியம். அதற்கான அலைமோதல்.

மயில்வாகனத்தார் அதிகார தோரணையில் அவ்வப்போது தனது ஆசனத்தை விட்டெழும்பி கூட்டத்தினிடையே சென்றுவருகிருர்.

'டிரெக்டர் . டிரெக்டர் .' என்று மெல்லிய கசமுச ஒலிகள் நிசப்தம் நிலவும்.

அனுமதிப் பத்திரங்கள் கொடுத்து முடியவே பிற்பகல் இரண்டுமணியாகி விட்டது.

மாலை சரியாக நான்குமணிக்கு வீரசிங்கம் மண்டபத்துக்கு வந்து விடவேண்டும் என்று அறிவிப்பு கொடுக்கப்படுகிறது.

மாணவர்கள் அவசரம் அவசரமாக தற்காலிக தங்குமிடங்களை நோக்கியும், தற்காலிக இடம் இது வரை கிடைக்கப் பெருதவர்கள் ஹோட்டல்களை நோக்கி ஓடுகின்றனர்.

வீரசிங்கம் மண்டபம் மாணவர் கூட்டத்தால் நிரம்பி வழிகிறது. வெளியே வர்ணக் காகிதங்களாலும், வாழை, மகரத்தோரணங்களாலும் அலங்காரம் செய்யப்பட்டும், மேடை மெல்லிய மல்லிகை மொட்டுச் சரங்களாலும், நீண்ட உயர் குத்துவிளக்குகளாலும் பிரகாசிக்க, சிறந்த ஆசனங்கள் இடப்பட்டு உள்ளன.

சரியாக ஆறுமணிக்கு பீடாதிபதியின் கார் உள்ளே நுழைகிறது. அவரே எதிர்பார்க்கவில்லை. இவ்வளவு பிரமாதமாக இருக்கும் என்று. ஏதோ ஒரு கல்வி டியூட்டரியில் போய் இரண்டு வார்த்தை பேசிவிட்டுவரலாம் என்று எண்ணி வந்தவர்.

மற்றவிரிவுரையாளர்களும் அங்குவருகை தந்திருப்பது அவருக்கு வியப்பை ஊட்டியது. இவர்களுக்கு இங்கே என்ன வேலை? இவர்கள் எல்லாருமா அழைக்கப்பட்டிருக்கின்றனர்? அவருக்கு எங்கோ ஏதோ மனதில் இடறிற்று.

சமாளித்துக் கொள்ள வேண்டியது தான். பிரச்சனையான விடயங்கள் எதிலும் 'வாய்' வைக்கக்கூடாது.

உயர் கல்வி மாணவர்கள் கைக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், அவர்களின் அமைதியின்மையை எப்படிக் கல்வியால் சமன்படுத்துவது, இங்கு கற்பித்தல் என்பது வழி காட்டியாகத்தான் இருக்குமே தவிர, விரிவுரையாளர்களின் குறிப்புரைகளை விட, மாணவர்கள் தாமாகவே நூலகங்களின் துணையுடன் பல்கலைசார்ந்த அறிவினைப் பெறவேண்டும் என்று கூறி மாணவர்களை வாழ்த்தி விடைபெறுகிருர்.

சிரேட்ட விரிவுரையாளரின் பேச்சு இவரது பேச்சை ஒட்டியே, அதற்கு மெருகூட்டுவது போல் இருக்கிறது.

சரியாக இரவு எட்டுமணிக்கு கூட்டம் முடிவடைகிறது.

மாணவர்கள் முகத்தில் பூரணதிருப்தி. அதைவிட மயில்வாகனத்தார் முகத்தில் அதிக திருப்தி.

மறுநாள் காலை எட்டுமணிக்கு விரிவுரைகள் ஆரம்பம் என அறிவிக்கப்படுகிறது.

காலை. ஆறுமணி. ஜெகன், மயில்வாகனத்தார், கிளார்க், டைபிஸ்ட் என்று எல்லாரும் எடியூகேற்றேறியம் வந்து விடுகிருர்கள். முதல் நாள் ஒழுங்கு வேலைகள் — ஆரம்ப வேலைகள் எல்லாம் மலைபோல் குவிந்துகிடக்கிறது.

மயில்வாகனத்தார் வந்தவுடன் கூறுகிருர்:

''ஜெகன் .. இண்டைக்கும் .. இன்னும் கொஞ்சநாளைக்கும் விரிவுரையாளர்கள் மட்டும் தான் வகுப்பெடுப்பினம் . அப்ப தான் மாணவர்கள் நம்பிக்கை கொள்ளுவினம் . மதிப்பினம்... நீங்கள் மற்ற நாட்களில எடுக்கிற வகுப்புகளை எடுத்தால் போதும... நீங்கள் ஏஎல் வகுப்புகளோடு நில்லுங்க..''

அவன் அதிர்ந்துபோய் ..

'இவ்வளவு நாள் உழைப்பென்ன?.. அலைச்சலென்ன... கடைசியில் இப்படிக் காய்வெட்டுப்படவா?..'

என்ன சேர் சொல்லுறியள்?..'' அவன் குரலில் ஒலித்த எதுவோ அவரை அவனை ஏறிட்டுப்பார்க்க வைக்கிறது.

'' ஜெகன் நீர் ஒண்டுக்கும் பயப்படாதீர் உம்மைக் கைவிடமாட்டன் நீர் வகுப்பு எடுக்கத் தேவையில்லை இந்த நிர்வாகத்தை பார்த்துக் கொள்ளும்... இது உம்மட ரியூட்டறி .. மாணவற்ற வரவு... விரிவுரையாளர் வரவு .. அவர்களின் கொடுக்கல் வாங்கல்களை நீர் கவனியும் .. என்ர அசிஸ்டண்டாய் நீர் இரும்.. அதோட ஏ எல் வகுப்புகளையும் நீர் எடுக்கலாம்தானே!..''

''அதற்கு கிளாக் காணும். நான் எதற்கு?..'' அவன் ஆத்திரம் மேலிடக் கூறினன்.

''என்னை எதிர்த்தா பேசுறீர்?.. நான் நினைச்சனெண்டால் உம்மையே தூக்கி வெளியில போடுவன் நீர் நினைக்கிறீர் உம்மைப் பற்றி எனக் கொண்டும் தெரியாதெண்டு.. எனக்கு எல்லாம் தெரியும்.. நீர்தானே முந்தி அவங்கள் பிரிஞ்சுபோய் புதிசா ரியூட்டரிபோட வேலை செய்து கொடுத்தது? எல்லாம் எனக்குத் தெரியும்..''

''தெரிஞ்சு கொண்டும் ஏன் என்னை வைச்சிருந்தனீர்?,.''

''அப்படி வைச்சிருந்ததால வெளியில ஒரு எதிரியை நடமாடவிடவில்லை''

''இனியும் இந்த எதிரி வெளிய இருந்தா...''

''எனக்கொரு பயமுமில்லை... எனக்கென்ன ஆள்பஞ்சமா?.. விரிவுரையாளர்களே என் கையில... எப்படியும் ஆள் குறைஞ்ச வகுப்புக்குத் தேவை எண்டா 'பைனல்' இயரில' இருக்கிற பொடியளைப் பிடிச்சுத்தரச் சொன்னு அவர்களே ஏற்பாடு செய்வினம்.. உங்களுக்கு கொட்டிக் கொடுக்கிற காசில பாதி கொடுத்தாலும் போதும்... ஆதுவே அவர்களுக்குப் பெரிய காசாகப்படும்.. வலு உற்சாகமாகவும் வேலை செய்வினம்.,''

கல்வியுலகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

''உம்மட சுரண்டல்கள் நீண்டகாலம் நிலைக்காது..''

''நிலைக்கிற வரையில எனக்கு லாபம் தான்.. மிஸ்டர் ஜெகன்! இனியும் நீரும் நானும் பேசிக் கொண்டிருப்பது வீண் வேலை. எனக்கு நிறைய வேலையிருக்குது... கிளாக்கர்! ஜெகன் மாஸ்டருடைய கணக்கைப் பார்த்து கொடுத்தனுப்பும்...''

ஜெகன் ஆவேசமாக வெளியேறுகிருன்.

# 17

கந்தப் புராண கலாசாரம் கொண்ட கிராமத்தில் கந்த ஷஷ்டி விரதம் தொடங்கிவிட்டதால், இந்தப் பூசல்கள் கொஞ்சம் மறக்கடிக்கப் பட்டிருக்கிறது. கேணியடி முருகன் கோவில் கடந்த ஏழு நாட்களாக கடை கண்ணிகளாலும், விளக்கலங்காரங்களாலும் நகர வாசனை கொண்டிருக்கிறது.

அன்று சூரசம்ஹாரம். வருடாவருடம் சூரசம்ஹாரம் நடத்துவதற்கென ஒரு இளைஞர் பிரிவு கிராமத்தில் உண்டு. இவர்கள் தங்கள் சூரசம்ஹாரத்தில் ஏதாவது புதுமையாக ஆண்டுதோறும் செய்து பக்தர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுவிடுபவர்கள். எனவே ஊரே திரண்டு கூடிவிடும்.

அன்று மந்தாரம் போட்டிருக்கிறது.

சூரசம்ஹாரம் நடத்துபவர்களுக்கு பலத்த சந்தோஷம், களைப்புத் தெரியாமல், உற்சாகமாக...

பாக்கியமும், புனிதமும் கோவிலுக்குப் போக புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

''பிள்ளை... கெதியா புறப்படு. நேரமாகுது..''

''அம்மா நீ முன்னால போ... நான் இப்ப வந்திடுறன். சிவநங்கை வாறனெண்டு சொன்னவ.. காணேல்ல..

பஸ்ஸடிக்குப் போய்பாத்திட்டு வாறன்..'' — என்றவள் தாயின் பேச்சை காதில் விழுத்தாமல் வெளியேறுகிருள். அவள் சிவநங்கையை எதிர்பார்க்கவில்லை. ஜெகனும் வருவதாக கூறியிருந்தான். அவனைத்தான் காணவில்லை.

அவள் விரைந்து சென்று அவர்கள் வழக்கமாகச் சந்திக்கும் பனையடிக்குச் செல்கிருள். அந்தப்பனையைச் சுற்றி பத்தடி தூரத்திற்கு எதுவுமே வளர்ந்திருப்பதில்லை. அதற்கப்பால் அடர்த்தியாக கொய்யா, பூநாறிப் பற்றைகள் மண்டிக்கிடக்கும்.

அவனுக்காகக் காத்திருக்கிருள். ஆனுல், நாலைந்து பனை தூரத்துக்கப்பால் ஒரு பனையில் நாகன் ஏறிக்கொண்டிருப்பதைக் கவனிப்பதில்லை. மரத்தில் ஏறிக்கொண்டிருந்த நாகனின்கண்களில் தற்செயலென புனிதம் படுகிருள். அவனுள் பரபரப்பு மிகுகிறது. மரத்தோடு மரமாக ஒட்டிக் கொள்கிருன்,

'புனிதம். ஏன்.. ஏன் இங்கே,.?..'

அவன் விழிகள் சுற்று முற்றும் பார்க்கின்றன, தொலை தூரத்தில் பனங்கூடலின் ஒற்றையடிப்பாதையில் ஜெகன் வந்து கொண்டிருக்கிருன்.

எல்லாமே விளங்கி விடுகிறது.

மனம்' ஹோ!.' எனக் கதறுகிறது.. மேனி படபடக்கிறது. கைகள் உறுதியற்ற நிலையில் சோரத் தொடங்குகின்றன.

ஆ!. இதென்ன!.. யாரோ இருவர் அவளுக்குப்பின்புறமாக வந்து அவள் வாயைப் பொத்தி குண்டுக்கட்டாகக் கட்டிக் கொண்டு ஓட அவள் கைகளையும், கால்களையும் அடித்துக் கொள்வது தெரிகிறது.

நாகன் மனதில் முன்பு பூகம்பம்

இப்போது எரிமலை.

மரத்திலிருந்து சறுக்கியபடி இறங்கி வருகின்ருன், தனது கத்தியை ஓங்கிக் கொண்டு அவர்களைத்துரத்துகிருன். அவர்களும் அவனைக் கண்டு விட்டு ஓடுகிருர்கள். சுமையுடன் அவர்களால் அதிகம் ஓடமுடியவில்லை.

'நாகனிட்ட ஆப்பிட்டால் தொலைஞ்சம்..'

அவர்களிடம் அச்சம் மிகுகிறது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு புனிதம் திமிறி, அவர்கள் கரங்களிலிருந்து விடுபடுகிருள். வேகமாக பற்றைகளையும் புதர்களையும் கடந்து முருகன் கோவிலை நோக்கி ஓடுகிருள். சனங்களின் மத்தியில் அடைக்கலம் கிடைக்கும்...

புனிதம் இரத்தக் காயங்களுடன் கூட்டத்திடையே வந்து விழுகிருள். சனம் பதறுகிறது ..

''எளியசாதி .. சாமியைத் தீட்டாக்கிப் போட்டாள். என்ன கெடுகாலமோ?'' — என்று ஒரு குரல் கேட்கிறது. நிமிர்கிருள் - முதலி!

''உவளை அடிச்சுக் கொல்லுங்கடா!''

—அவர் வாய் மூடமுன்னர் நாகன் கூட்டத்திடையே உயர்த்திப் பிடித்த கத்தியுடன் தோன்றுகின்ருன். கூட்டம் வெலவெலக்கிறது. முதலி ஓடமுனைகிருர்.

சூரனின் தலை விழுவதற்குப் பதிலாக முதலியின் தலை உருண்டு முருகனின் பாதைக்கு செங்கம்பளம் விரிக்கிறது.

ஹோ!.. முருகா!. கந்தா.. என்று கோஷம் இன்னதென்று புரியாமல் எழுகிறது.

●

அன்றிரவு.

யாருமறியாத நள்ளிரவில் நக்ஷத்திரங்களின் ஒளிகாட்டலில் குட்டியன், ஜெகன், நாகன், புனிதம் ஆகியோர் இருளின் பாதையில் எதனையோ நாடி, அடர்த்தியான மரங்களினூடே, யாரையோ தேடி நடந்ததை கிராமத்துக்குச் சொல்ல எவருமே விழித்திருக்கவில்லை.

அவர்களின் கதை நீண்ட நாட்களாக கிராமத்தில் பேசப்பட்டு வருகிறது.










மீரா வெளியீடுகள்